

'......மரங்களாலான சவப்பெட்டிகளின்மீது எகிப்தியர் நீண்ட கதைகளை வர்ணச் சித்திரங்களால் எழுதியிருக்கின்றனர்......'

—ப. 163

# ஜவாஹர்லால் நேருவின் கடிதங்கள்

[தம் குமாரி ஸ்ரீமதி இந்திரா நேருவுக்கு
எழுதியவை]

மொழிபெயர்த்தவர்:

சி. ரா. வேங்கடராமன், பி.ஏ., பி.எல்.

(இந்திய ஊழியர் சங்கம்)

கலைமகள் காரியாலயம்

மயிலாப்பூர்

பதிப்புரிமை] 1941 [விலை ரூ. 1-8-0

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS
MYLAPORE, MADRAS
1941

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பதிப்புரை | ... | v |
| முன்னுரை | ... | vii |
| 1. இயற்கைப் புஸ்தகம் | ... | 1 |
| 2. புராதன சரித்திரம் எழுதப்பட்ட விதம் | ... | 7 |
| 3. பூமி உண்டான விதம் | ... | 14 |
| 4. முதல் முதலில் பூமியில் வாழ்ந்த ஜீவ ராசிகள் | ... | 20 |
| 5. மிருகங்கள் தோன்றிய வரலாறு | ... | 28 |
| 6. மனிதனின் தோற்றம் | ... | 34 |
| 7. பூர்விக மனிதர் | ... | 42 |
| 8. பல இனங்கள் உண்டான விதம் | ... | 52 |
| 9. இனங்களும் மனித பாஷைகளும் | ... | 59 |
| 10. பாஷைகளின் சம்பந்தம் | ... | 66 |
| 11. நாகரிகம் என்றால் என்ன? | ... | 72 |
| 12. குழுக்கள் ஏற்பட்ட வரலாறு | ... | 77 |
| 13. சமயங்கள் உண்டானதும் தொழிற் பாகுபாடுகளும் | ... | 83 |
| 14. வியவசாயத்தால் உண்டான மாறுதல்கள் | ... | 89 |
| 15. குடும்பத் தலைவன் | ... | 94 |
| 16. குழுத்தலைவன் வளர்ச்சி | ... | 99 |
| 17. குழுவின் தலைவன் அரசனாதல் | ... | 104 |
| 18. பூர்விக நாகரிகங்கள் | ... | 110 |
| 19. பண்டை உலகத்தின் பெரிய நகரங்கள் | | 115 |
| 20. எகிப்தும் கிரீட்டும் | ... | 120 |
| 21. சீனதேசமும் இந்தியாவும் | ... | 126 |

பக்கம்

22. கடற்பிரயாணமும் வியாபாரமும் ... 131
23. மொழியும் எழுத்தும் எண்ணும் ... 139
24. பல வகுப்பு ஜனங்கள் ... 144
25. அரசர்களும் கோயில்களும் பூஜகர்களும் ... 149
26. பின்னோக்கம் ... 155
27. கற்படி மீன்களின் படங்கள் ... 159
28. கற்படி பொருள்களும் சிதைந்து போன நகரங்களும் ... 161
29. இந்தியாவுக்கு ஆரியர்கள் வந்தது ... 165
30. இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் நிலை... 170
31. ராமாயணமும் மஹாபாரதமும் ... 175

## படங்கள்

1. எகிப்தியர் சவப் பெட்டி.
2. அசோகர் கல்தூண்.
3. சூரியமண்டலமும் கிரகங்களும்.
4. சூரியன்.
5. சந்திரன்.
6. தவளையின் வளர்ச்சி.
7. பழங்கால மனிதன்.
8. கற்காலத்துக் கருவிகள்.
9. தீக்கடைதல்.
10. பழங்கால வீடு.
11. சித்திர லிபி.
12. நீராவிக் கப்பல்.
13. பாய்மரக் கப்பல்.
14. படகு.
15. பலவகை நாணயங்கள்.
16. கற்படி மீன்.
17. பழங்காலப் பிராணி.
18. ஆதிகாலத்து ஊரும் பிராணி.
19. பழங்காலத்துச் செடி.
20. இக்வாநோடன்.
21. பழங்காலத்து யானை.

# பதிப்புரை

அரசியல் உலகத்தில் இன்று இந்தியாவில் மகாத்மா காந்திக்கு அடுத்தபடியாக மக்கள் ஹிருதய பீடத்தில் அமர்ந்திருப்பவர் ஸ்ரீ ஜவாஹர்லால் நேரு. அவருடைய தூய வாழ்வும், தன்னலமற்ற தியாகமும், பெருந்தன்மையும் உலக முழுவதும் பாராட்டும் சிறப்பை உடையன. அரசியல் துறையில் அவர் செய்துள்ள தொண்டோடு இலக்கியத்துறையில் ஜனங்கள் அவரால் அடைந்த லாபம் சாமானியமானதன்று.

அவருடைய ஆங்கில எழுத்தில் ஒரு வேகமும் ஜீவனும் ததும்பும்; சில இடங்களில் அவர் எழுத்து, கவிதையின் எல்லையை எட்டி நிற்கும். அவர் பிறப்பிலே எழுத்தாளராகப் பிறந்தவர்.

ஜவாஹர்லால் நேரு அவர்களுடைய நூல்களை உலகிலுள்ள பெரியோர்களெல்லாம் பாராட்டிப் பேசுகின்றனர். அவர் எழுதிய சுய சரித்திரப் பிரதிகள் ஆயிரக்கணக்காகச் செலவாயின. வாசகர்கள் நாவல்களைவிட அதிக ஆர்வத்தோடு அதை 'அள்ளி'க்கொண்டு போயினர். அவர் எது எழுதினாலும் ரஸமாக எழுதுபவர். பிரசங்கமானாலும் சரி, சரித்திரமானாலும் சரி, வர்ணனை

யானுலும் சரி, கடிதமானுலும் சரி, எல்லாம் வாசிப்பவர்கள் நெஞ்சை அள்ளும் தன்மை வாய்ந்தவை.

அவர் தம் செல்வமகளாகிய ஸ்ரீமதி இந்திரா நேருவுக்கு எழுதிய கடிதங்கள் உலகத்திலுள்ள எல்லாச் சிறுவர்களும் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டியவை. பூவுலகத்தின் இளம் பருவத்தை அழகாக முப்பத்தொரு கடிதங்களில் தொடர்ச்சியாக எடுத்துரைக்கிருர். இந்த அரிய புஸ்தகம் ஹிந்தி, வங்காளி முதலிய வேறு பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டிருக் கிறது.

இப்போது இதனை இந்திய ஊழியர் சங்க அங்கத்தினராகிய ஸ்ரீ சி. ரா. வேங்கடராமன் அவர்கள் அன்புகூர்ந்து தமிழில் மொழிபெயர்த் துத் தந்தார். இந்நூலை மொழிபெயர்க்கவும் புஸ்தகமாக வெளியிடவும் அநுமதி அளித்த ஸ்ரீ ஜவாஹர்லால் அவர்களுடைய உதவியைப் பாராட்டி எங்கள் நன்றியறிவைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்
**பதிப்பாளர்.**

# முகவுரை

1928-ஆம் வருஷம் கோடைக்காலத்தில் என் மகள் இந்திரா ஹிமாலயத்தில் மசூரியில் இருந்தபோதும் நான் கீழே சமவெளியில் இருந்த போதும் இக்கடிதங்களை அவளுக்கு எழுதினேன். இக்கடிதங்களெல்லாம் பத்து வயதுள்ள ஒரு சிறுமிக்கு என்று எழுதப்பட்டவை. என் மதிப்பிற்குரிய சில நண்பர்கள் இக்கடிதங்களின் தன்மையை அறிந்து, அவற்றை வெளியாருக்கும் பயன்படும்படி செய்யவேண்டுமென்று என்னைத் தூண்டினர். வேறு சிறுவர்களும் சிறுமிகளும் இவற்றைப் படித்து மகிழ்வார்களோ என்னவோ எனக்குத் தெரியாது. இக்கடிதத்தை வாசிப்பவர்கள், இந்த உலகம் பல தேசங்களடங்கிய ஒரு பெருங்குடும்பம் என்று நினைப்பார்கள் என்று நான் கருதுகிறேன். இவற்றை எழுதுவதில் எனக்கு ஏற்பட்ட இன்பத்தில் ஒரு பங்கை இதை வாசிப்பவர்கள் அனுபவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

இக்கடிதங்கள் திடீரென்று முடிகின்றன. நீண்ட கோடைக்காலமும் முடிந்தது; இந்திராவும் மலையிலிருந்து கீழே வந்துவிட்டாள்.

1929-ஆம் வருஷக் கோடையில் அவள் மசூரிக்காவது, வேறு மலைகளுக்காவது போகவில்லை. கடைசி மூன்று கடிதங்களும் ஒரு புதிய காலப் பகுதியைப் பற்றியவை. அவை இந்த இடத்திற்குச் சிறிது பொருத்தமற்றவையே. ஆனால் அவற்றைத் தொடர்ந்து மேலே நான் எழுதுவது சந்தேகமாயிருப்பதால் அவற்றையும் இங்கே சேர்த்திருக்கிறேன்.

இக்கடிதங்கள் ஆங்கிலத்தில் இருப்பதால் இவற்றை ரஸிப்போர் சிலராகவே இருப்பார்கள் என்பதை நான் உணர்வேன். இது முற்றும் எனது குற்றமே. இக்குற்றத்தை ஒரு மொழி பெயர்ப்பின் மூலந்தான் தீர்க்கமுடியும்.

அலஹாபாத்
நவம்பர், 1929.

ஜ. நே.

# ஜவாஹர்லால் நேருவின் கடிதங்கள்

## 1

### இயற்கைப் புஸ்தகம்

நீயும் நானும் சேர்ந்திருக்கும்போது நீ பல விஷயங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்பது வழக்கம். நானும் அவற்றிற்கு விடை சொல்ல முயலுவேன். நீ இப்போது மசூரியில் இருப்பதாலும் நான் அலகாபாதில் இருப்பதாலும் நாம் அம்மாதிரி பேசிக்கொள்ள முடியாது. ஆகவே, நாம் வசிக்கும் இப்பூமியின் வரலாறு, இதில் அடங்கியுள்ள பெரியனவும் சிறியனவுமான பல தேசங்கள் இவற்றைப் பற்றிச் சுருக்கமாக அடிக்கடி உனக்கு நான் எழுதப்போகிறேன். இங்கிலாந்து தேச சரித்திரமும் இந்திய சரித்திரமும் நீ சிறிதளவு படித்திருக்கிருய்; ஆனுல் இங்கிலாந்து ஒரு சிறு தீவுதான்; இந்தியா ஒரு பெரிய தேசமானுலும், உலகப் பரப்பில் அது ஒரு சிறு பகுதியேயாகும். நாம் வசிக்கும் இந்தப் பூமியின் வரலாற்றைப் பற்றிச் சிறிது அறிந்துகொள்ள வேண்டுமானுல் இதில் அடங்கியுள்ள எல்லாத்

தேசங்களையும், இதில் வசித்த எல்லா மக்களையும் பற்றி நாம் அறிந்துகொள்ளவேண்டும்; நாம் பிறந்த ஒரு சிறிய நாட்டைப் பற்றி நினைத்தால் மட்டும் போதாது.

நான் எழுதும் இக்கடிதங்களில் மிகவும் சில விஷயங்களைப் பற்றித்தான் சொல்ல முடியும் என்று எண்ணுகிறேன். அவை சிலவேயானாலும் உனக்கு ருசியைக் கொடுக்குமென்றும், அவற்றினின்றும் உலகத்திலுள்ளார் அனைவரையும் உன் சகோதர சகோதரிகளென்று நீ கருதுவாயென்றும் நான் நம்புகிறேன். பெரியவளான பின்பு பெரிய புஸ்தகங்களில் பூமியைப் பற்றியும் அதில் வசிக்கும் ஜனங்களைப் பற்றியும் நீ வாசிப்பாய்; அவை யெல்லாம் நீ படித்துள்ள கதைகள், நாவல்களைவிட மிக்க சுவை யுள்ளனவாக இருக்கும்.

நாம் வசிக்கும் இப்பூமி மிக மிகப் பழையது, கோடானு கோடி வருஷங்கள் வயதுள்ளது என்று சொல்லுகிறார்கள். முதல் முதலில் வெகு காலம் வரை இந்த உலகில் ஆணாவது பெண்ணாவது வாழவில்லை. மனிதர்களுக்கு முன்பு மிருகங்கள் வாழ்ந்தன. மிருகங்களுக்கு முன்பாக இவ்வுலகில் ஒரு காலத்தில் உயிருள்ளவைகள் ஒன்றுமே வசித்திருக்கவில்லை. மனிதர்களும் மிருகங்களும் செடி கொடிகளும் பூச்சி புழுக்களும் இப்போது நிறைந்திருக்கும் இவ்வுலகில் ஒரு காலத்தில்

உயிருள்ளவைகளே ஒன்றும் இருக்கவில்லையென்றால் அது ஆச்சரியமாயில்லையா? ஒரு காலத்தில் இவ்வுலகமானது ஒரு நெருப்புப் பந்து போல எரிந்துகொண்டிருந்ததெனவும், அதன் வெப்பத்தினால் எவ்வுயிரும் உலகில் பிழைக்க முடியாதிருந்ததெனவும், படித்தவர்களும், பிரகிருதி சாஸ்திர நிபுணர்களும், இவ்விஷயங்களை ஆராய்ந்தவர்களும் சொல்லுகிறார்கள். அவர்கள் எழுதியுள்ள நூல்களைப் படித்து, மலைகளையும், பாறைகளுக்கிடையே படிந்து கிடக்கும் பழைய மிருகங்களின் எலும்புகளையும்(Fossils) நாம் கவனித்துப் பார்த்தால் அவர்கள் சொல்லுகிறபடிதான் இருந்திருக்கவேண்டுமென்று நமக்குத் தெரியவரும்.

சரித்திரத்தைப் புஸ்தகங்களில் நீ படிக்கிறாய். பண்டைக்காலத்தில் மனிதர்கள் இல்லாத போது புஸ்தகங்களை எழுதியிருக்கமுடியாது. எனின், அக்காலத்தில் நடந்தவற்றை நாம் எப்படி அறிவது? நாம் சும்மா உட்கார்ந்து கொண்டே கற்பனைசெய்து எல்லாவற்றையும் பார்க்கமுடியாது. இவ்வாறு செய்வது ருசிகரமான வேலைதான்: நாம் வேண்டுவதையெல்லாம் நினைத்துக்கொள்ளலாம்; மிகவும் அழகான தேவதைகளைப் பற்றிய கதைகளையும் கட்டலாம். ஆனால் அவையெல்லாம் உண்மையானவைகளாக இரா. நாம் நேரில் கண்டு எழுதினால் மாத்திரமே அவை உண்மையா

யிருக்கும். பண்டை வரலாறுகளை அறிந்து கொள்ளப் புஸ்தகங்கள் இல்லாமற் போயினும் அவற்றைவிட அதிகமான வரலாறுகளைத் தெரிவிக்க வேறு கருவிகள் இருக்கின்றன. மலைகளும், குன்றுகளும், சமுத்திரங்களும், நக்ஷத்திரங்களும், நதிகளும், பாலைவனங்களும், பண்டை மிருகங்களின் கற்படிந்த உருவங்களும் இருக்கின்றன. பூமியின் பூர்விக வரலாற்றை அறிய இவையும், இவைபோன்ற மற்றுமே நம் புஸ்தகங்களாகும். இக்கதையை நன்ருக அறிந்துகொள்ளவேண்டுமாஞல், பிறர் எழுதிய புஸ்தகங்களைப் படித்தால் மாத்திரம் போதாது. மாபெரும் புஸ்தகமான இயற்கையை நாம் அணுகவேண்டும். குன்றுகளினின்றும் மலைகளினின்றும் உலக வரலாற்றைப் படிக்க நீ விரைவில் கற்றுக் கொள்வாயென்று எண்ணுகிறேன். அது எவ்வளவு கவர்ச்சியுடையது என்பதைச் சற்று நினைத்துப் பார். வழியிலும் மலைச்சாரலிலும் நாம் காணும் ஒவ்வொரு சிறிய கல்லும் இயற்கைப் புஸ்தகத்தின் ஒரு தாளாக இருக்கலாம். அக்கல்லைச் சரியாகப் படிக்கும் திறமை உனக்கு இருந்தால் அது உனக்குப் பல விஷயங்களைச் சொல்லும். உதாரணமாக, ஹிந்தி, உருது அல்லது இங்கிலீஷ் மொழியை வாசிக்க வேண்டுமாஞல் அந்தப் பாஷைகளின் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். அம்மாதிரியே கற்களும் மலைகளும் அடங்கிய இயற்கைப் புஸ்தகத்தை வாசிக்க

வேண்டுமானால் நீ இயற்கையின் எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளவேண்டும். இப்போது கூட அவற்றை வாசிக்க உனக்குக் கொஞ்சம் தெரியும். வழியில் நீ காணும் உருண்டையான கூழாங்கல் உனக்குச் சில விஷயங்களைக் கற்பிக்கிறதல்லவா? அது கரடுமுரடாயில்லாமல், மிருதுவாக, வழுவழுப்பாக, பளிச்சென்று மூலை முடுக்கில்லாமல் எப்படி உண்டாயிற்று? ஒரு பெரிய கல்லைச் சிறு துண்டுகளாக உடைத்தால், உடைந்த ஒவ்வொரு துண்டும் கரடுமுரடாக இருக்கும்; கோணல் மாணலாக இருக்கும். அது வழுவழுப்பான உருண்டையான கல்லைப்போல் ஒருகாலும் இராது. கூழாங்கல் மாத்திரம் எவ்வாறு இங்ஙனம் உருண்டையான, மிருதுவான, வழுவழுப்பான வடிவம் அடைந்தது? கேட்பதற்கு நல்ல காதும் பார்ப்பதற்குக் கண்ணும் இருந்தால் அது தன் வரலாற்றை உனக்குச் சொல்லும். ஒரு காலத்திலே, வெகு நாட்களுக்கு முன்பாக இருக்கலாம், அது ஒரு தனிப் பாறையின் துண்டாக இருந்ததாம்; நீ ஒரு கல்லை உடைத்தால் அது பல துண்டுகளாகி ஒவ்வொரு துண்டும் கரடுமுரடாகவும் கோணல் மாணலாகவும் இருக்கும். அவைகளைப் போலவே அப்பாறையும் இருந்ததாம். ஒரு சமயம் அது ஒரு மலைச்சரிவில் இருந்ததாம். அப்போது 'சோ' என்று மழை வந்து அதைப் பள்ளத்தாக்கிற்குத் தள்ளிக் கொண்டுபோயிற்றாம். அங்கே ஒரு மலை

யருவியில் அது விழ அவ்வருவி அதைத் தள்ளிக் கொண்டு போய் ஒரு சிறிய ஆற்றில் சேர்த்தது. அச்சிறிய ஆறு அதை ஒரு பெரிய ஆற்றில் கொண்டுபோய்ச் சேர்த்தது. ஆற்றின் அடியில் உருண்டு உருண்டு போகையில் அதன் ஓரங்க ளெல்லாம் மழுங்கி அதன் உடம்பெல்லாம் மிருதுவாகவும் வழுவழுப்பாகவும் மாறிற்றும். இவ்விதமாகத்தான் நீ பார்க்கும் கூழாங்கல்லாக மாறியதாக அது தன் கதையைச் சொல்லும். எப்படியோ ஆறு அதை மேட்டில் விட்டு விட்டுப் போக அது உன் கண்ணில் பட்டது. ஆறு அதைத் தள்ளிக்கொண்டே போயிருந்தால் அது சிறிதாகிச் சிறிதாகிக் கடைசியில் மண லாகிச் சமுத்திரக் கரையில் மணலோடு மண லாய்ச் சேர்ந்திருக்கும். குழந்தைகள் சந்தோஷ மாய் விளையாடவும் வீடு கட்டவும் அம்மணல் உபயோகமாகிறது. ஒரு சிறிய கூழாங்கல்லே இவ்வளவு ஆச்சரியமான கதையைச் சொன் ஞல், பெரிய மலைகளும் குன்றுகளும் சொல்லும் கதைகள் எவ்வளவு விந்தையாக இருக்கும்?

## 2

## புராதன சரித்திரம் எழுதப்பட்ட விதம்

நேற்று நான் எழுதிய கடிதத்தில், இப்பூமியின் புராதன சரித்திரத்தை இயற்கைப் புஸ்தகத்திலிருந்து நாம் படித்து அறியவேண்டு மென்று சொன்னேன். நம்மைச் சுற்றியிருக்கும் மலைகள், குன்றுகள், பள்ளத்தாக்குகள், நதிகள், சமுத்திரங்கள், எரிமலைகள், போன்றவைகளே நமக்கு இயற்கைப்புஸ்தகமாகும். இப்புஸ்தகம் நம் கண்முன்னே திறந்தபடி கிடக்கின்றது. ஆனால் ஒருவரும் இதைக் கவனிப்பதில்லை, படிப்பதுமில்லை. இதை எப்படிப் படிப்பது, எப்படி அறிந்து கொள்வது என்பதை நாம் தெரிந்து கொண்டால், இது ஆச்சரியமான பல கதைகளை நமக்குச் சொல்லும். ஒரு கல் சொல் லும் கதையானது தேவதைகளின் கதைகளை விட அதிக விநோதமாயிருக்கும்.

மனிதர்களாவது மிருகங்களாவது இந்தப் பூமியில் இல்லாத அப்பண்டைக்கால வரலாற்றைப்பற்றி இவ்வியற்கைப் புஸ்தகத்தி லிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். படித்துக் கொண்டே போனால், முதல் முதலில், இவ்வுல கத்தில் சில மிருகங்களே இருந்தனவென்பதும்,

பிறகு அவை அதிகரித்தன வென்பதும் தெரிய வரும். பிற்பாடுதான் ஆண்களும் பெண்களும் உண்டானார்கள். ஆனால், அவர்கள் இக்காலத்த வர்களைப்போல அழகாக, நாசூக்காக இருக்க வில்லை. மிருகங்களுக்கும், அவர்களுக்கும் வித்தியாசமே இல்லையென்று சொல்லும்படி அவ்வளவு அநாகரிகமும் முரட்டுத்தனமும் உள்ளவர்களாக இருந்தார்கள். சிறுகச் சிறுக அனுபவம் பெற்று விஷயங்களை ஆலோசிக்கக் கற்றுக்கொண்டார்கள். பகுத்தறிவேதான் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் உள்ள வித்தியாசம். பகுத்தறிவின் வன்மை பெரிது. மிகப் பெரியனவும் பயங்கரமுமான மிருகங்களைக் காட்டிலும், மனிதனை இப்பகுத்தறிவு வன்மை யுள்ளவனாகச் செய்யும். இக்காலத்தில், ஒரு சிறிய மனிதன் ஒரு பெரிய யானையின் முதுகின் மேல் ஏறி உட்கார்ந்துகொண்டு அதைத் தன் சொற்படியெல்லாம் ஆட்டிவைக்கிறான். யானை பெரியது; பலமுள்ளது; அதன் கழுத்தின்மீது உட்கார்ந்திருக்கும் சிறிய யானைப் பாகனைவிடப் பன்மடங்கு பலமும் பருமனும் உடையது. ஆனால், யானைப்பாகன் பகுத்தறிவு உடையவன். அப்பகுத்தறிவின் பலத்தாலேதான் அவன் அவ்வளவு பெரிய யானையை அடக்கியாளும் திறமை பெற்றிருக்கிறான். ஆகவே, மனிதனுக்குப் பகுத்தறிவு அதிகரிக்க அதிகரிக்க, அவன் சாமர்த்திய சாலியாகவும், புத்திசாலியாகவும் ஆனான்.



‘......அசோகருடைய பெரிய கல்தூண் ஒன்றை நீ பார்த்
திருக்கிருயே......’ —ப. 11




‘ சூரியனைச் சேர்ந்த கிரகங்கள்.’ —ப. 14

நெருப்பு உண்டாக்கவும், பூமி திருத்திப் பயிர் செய்யவும், உடுக்கத் துணி நெய்யவும், குடியிருக்க வீடுகட்டவும் கற்றுக்கொண்டான். பல மனிதர்களும் பெண்களும் சேர்ந்து ஓர் இடத்தில் வசிக்க நேர்ந்ததிலிருந்து நகரங்கள் ஏற்பட்டன. நகரங்கள் ஏற்படுவதற்கு முன்பு ஜனங்கள் நாடோடிகளாக, ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் போவதும், கூடாரங்களில் வசிப்பதுமாகக் காலங் கழித்தார்கள். அக்காலத்தில் அவர்களுக்குப் பூமியைத் திருத்திப் பயிர் செய்யத் தெரியாமல் இருந்தது. ஆதலால், சாப்பிட அரிசியாவது ரொட்டி செய்யக் கோதுமையாவது அவர்களுக்குக் கிடைக்கவில்லை. காய்கறிகளும் இல்லை. இக்காலத்தில் நீ சாப்பிடும் பல உணவுகளும் அவர்களுக்குத் தெரியாமல் இருந்தன. அக்காலத்தில் சில காட்டுப் பழங்களும் கொட்டைகளும் இருந்திருக்கலாம். அவற்றையும் தாங்கள் கொன்ற மிருகங்களின் மாமிசத்தையுமேதான் தின்று அவர்கள் ஜீவித்திருக்க வேண்டும்.

நகரங்கள் வளரவே, ஜனங்கள் அழகிய பல கலைகளைக் கற்றார்கள்; எழுதக் கற்றுக் கொண்டார்கள். எழுதுவதற்குக் கடிதம் இல்லாததால், வெகு காலம்வரையில் அவர்கள் பூர்ஜ மரத்தின் பட்டையில் எழுதிவந்தார்கள்; (இம்மரத்தை ஆங்கிலத்தில் பர்ச்-Birch- என்று சொல்வார்கள்.) பனையோலையிலும் எழுதி

வந்தார்கள். இப்பொழுதுங்கூடப் பனையோலையிலும் பூர்ஜபத்ரத்திலும் எழுதிய பல நூல்களின் ஏட்டுப்பிரதிகளைப் பல புஸ்தகசாலைகளில் நீ பார்க்கலாம். பிறகு காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது; அதனுல் எழுதுவது எளிதாயிற்று. ஆனுல் அக்காலத்தில் அச்சு யந்திரசாலைகள் இல்லாமையால், இக்காலத்தில் புஸ்தகங்களை அச்சடிப்பதுபோல் ஆயிரக்கணக்கில் அச்சடிக்க முடியாமல் இருந்தது. ஒரு புஸ்தகத்தை ஒரு முறைதான் எழுதமுடிந்தது. பிறகு அதைப் பார்த்துக் கஷ்டப்பட்டு வேறு பிரதிகளை எழுதினுர்கள். ஆகவே அக்காலத்தில் பல புஸ்தகங்கள் இருந்திருக்க முடியாது. ஒரு புஸ்தக வியாபாரியிடமாவது, புஸ்தகக்கடைக்காவது சென்று நீ ஒரு புஸ்தகத்தை அக்காலத்தில் வாங்கமுடியாது. யாரேனும் ஒருவர் பார்த்து எழுதினுல்தான் ஒரு புஸ்தகம் கிடைக்கும். அப்படி எழுதுவதற்கு அதிக நாள் பிடித்தது. அக்காலத்தில் ஜனங்கள் வெகு அழகாக எழுதினுர்கள். இன்றைக்கும் நம் பெரிய புஸ்தகாலயங்களில் கையால் வெகு நேர்த்தியாய் எழுதப்பட்ட புஸ்தகங்களை நாம் பார்க்கலாம். முக்கியமாக இந்தியாவில் உள்ள புஸ்தகங்கள் ஸம்ஸ்கிருதத்திலும் உருதுவிலும் பாரசீக மொழியிலும் எழுதப்பட்டிருக்கின்றன. புஸ்தகத்தைப் பார்த்து எழுதியவன் சாதாரணமாய்ப் பக்கத்தின் ஓரங்களில் சித்திரங்களையும் புஷ்பங்களையும் அழகாக எழுதியிருக்கிறுன்.

பட்டணங்கள் வளரவும் மெள்ள மெள்ள நாடுகளும் தேசங்களும் உண்டாயின. ஒரு தேசத்தில் ஒருவருக்கொருவர் அருகில் வசிப்பவர்கள் ஒருவரையொருவர் நன்கு அறிந்துகொண்டனர். மற்றத் தேசத்தார்களைவிடத் தாங்களே மேலானவர் என்ற மூட எண்ணத்தால் அவர்களோடு சண்டையிட்டார்கள். சண்டைபோடுவதும் ஒருவரை மற்றொருவர் கொல்வதும் மதியீனர்கள் செய்யும் வேலையென்று அக்காலத்தவர்கள் அறியவில்லை; இக்காலத்திலும் ஜனங்கள் இன்னும் அறிந்துகொள்ளவில்லை. இதனால் ஒருவருக்கும் நன்மை ஏற்படாது.

பண்டைக்காலத்து நாடு நகரங்களைப் பற்றிய வரலாறுகளை அறியச் சில சமயங்களில் நமக்குப் பழைய புஸ்தகங்கள் கிடைக்கின்றன. ஆனால் இவை அதிகமாக இல்லை. வேறு சாதனங்கள் நமக்கு உதவியாக இருக்கின்றன. பண்டைக் காலத்தில் அரசர்களும் சக்கரவர்த்திகளும் தங்களுடைய அரசாட்சியைப் பற்றிய வரலாறுகளைக் கற்பலகைகளிலும் தூண்களிலும் வெட்டிவைப்பது வழக்கம். புஸ்தகங்கள் அதிக நாள் இரா. அவற்றின் தாள்கள் மக்கிப் போகின்றன; பூச்சிகளால் அரிக்கப்படுகின்றன. ஆனால் கற்களோ அதிக நாட்கள் அழியாமல் இருக்கும். அலகாபாத்துக் கோட்டையினுள் அசோகருடைய பெரிய கல் தூண் ஒன்றை நீ பார்த்திருக்கிறாயே. அது உனக்கு ஞாபகம்

இருக்கலாம். அதில் இந்தியாவைப் பல நூற்றுண்டுகட்கு முன்பு ஆண்ட பெரிய அரசரான அசோகருடைய பிரகடனம் ஒன்று வெட்டப்பட்டிருக்கிறது.

பல தேசங்களின் பூர்விக சரித்திரத்தைப் படிக்கும்போது, ஐரோப்பிய தேசங்களிலெல்லாம் காட்டு ஜாதிகள் நிறைந்திருந்த காலத்தில் சீன, எகிப்து தேசத்து ஜனங்கள் செய்த மாபெருஞ் செயல்களைப் பற்றிப் படிப்போம். இன்னும் ராமாயண, மஹாபாரத காலங்களில் இந்தியா அடைந்திருந்த மேன்மையையும், அதன் செல்வத்தையும், வீரத்தையும்பற்றி நாம் படிப்போம். இன்றைக்கு நமது நாடு வறுமையை அடைந்திருக்கிறது; அந்நியர்கள் நம்மை ஆளுகின்றனர். நமது சொந்த நாட்டில் நமக்குச் சுயேச்சை இல்லை; நம் இஷ்டம்போல் நடக்கமுடியாது. எப்பொழுதும் நாம் இந்நிலைமையில் இருக்கவில்லை. நாம் கஷ்டப்பட்டு முயன்றால் ஒரு சமயம் நமது நாடு மறுபடியும் சுயேச்சையை அடையும். சுயேச்சை பெற்றால் ஏழைகளின் நிலைமையை மேம்படுத்தலாம்; தற்காலத்து ஐரோப்பிய நாடுகள் ஜனங்கள் வசிப்பதற்கு எவ்வளவு சௌகரியங்கள் நிறைந்தனவாக இருக்கின்றனவோ அவ்வளவு சௌகரியங்கள் நிறைந்த தேசமாக நமது இந்தியாவையும் நாம் செய்யலாம்.

என்னுடைய அடுத்த கடிதத்தில் வசீகரம் மிகுந்த இப்பூமியின் கதையை முதலிலிருந்து ஆரம்பிப்பேன்.

# 3

## பூமி உண்டான விதம்

பூமி சூரியனையும், சந்திரன் பூமியையும் சுற்றுகின்றனவென்பது உனக்குத் தெரியும். பூமியைப் போலவே இன்னும் பல கிரகங்களும் சூரியனைச் சுற்றி வருகின்றனவென்பதும் உனக்குத் தெரியும். இவை எல்லாவற்றிற்கும், பூமியுட்படச் சூரியனைச் சேர்ந்த கிரகங்கள் என்று பெயர். சந்திரன் பூமியை ஒட்டியிருப்ப தால் அதற்கு உபக்கிரகம் என்று பெயர். மற்றக் கிரகங்களுக்கும் இம்மாதிரியான உபக்கிரகங்கள் உண்டு. சூரியனும் உபக்கிரகங்களோடு கூடிய மற்றக்கிரகங்களும் ஒன்றுசேர்ந்து சந்தோஷமாக ஒரு குடும்பம் போல் வாழ்கின்றன. இதற்குச் சூரியமண்டலம் என்று பெயர். சூரியன் மற்றக் கிரகங்களுக்குத் தகப்பன் என்ற முறையில் இருப்பதால்தான் அம்மண்டலத்தைச் சூரிய மண்டலம் என்று அழைக்கிறார்கள்.

இரவில் ஆயிரக்கணக்கான நக்ஷத்திரங்களை நீ வானில் பார்க்கிறாய். இவற்றில் வெகு சிலவே கிரகங்கள். இவற்றை நக்ஷத்திரங்கள் என்று சொல்லக்கூடாது. கிரகம் எது, நக்ஷத்திரம் எது என்று உனக்குக் கண்டு பிடிக்கத் தெரியுமா?

நக்ஷத்திரங்களைவிடக் கிரகங்கள், நமது பூமியைப் போல் அளவில் மிகச் சிறியன. ஆனல், அவை, நக்ஷத்திரங்களைவிடப் பூமிக்குப் பக்கத்தில் இருப்பதால் பெரியனவாகக் காணப்படுகின்றன. சந்திரனே ஒரு சிறு குழந்தையைப் போன்றது. அது நமக்கு அதிகப் பக்கத்தில் இருப்பதால் பெரியதாகக் காணப்படுகிறது. கிரகங்களுக்கும் நக்ஷத்திரங்களுக்கும் என்ன வித்தியாசம்? அவற்றை எப்படிக் கண்டுபிடிப்பது? நக்ஷத்திரம் விட்டுவிட்டுப் பளிச்சென்று பிரகாசிக்கும். கிரகம் விட்டு விட்டுப் பிரகாசிக்காது. சூரியனின் வெளிச்சத்தைப் பெறுவதனுலேதான் கிரகங்கள் பிரகாசிக்கின்றன. சூரிய வெளிச்சத்தைத்தான் நாம் கிரகங்களிடத்திலும் சந்திரனிடத்திலும் காண்கிறோம். ஆனல் நக்ஷத்திரங்களோ சூரியனைப் போன்றவை. அவைகளெல்லாம் தாமாகவே பிரகாசிக்கின்றன; அவைகளெல்லாம் வெப்பமானவை; கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருக்கின்றவை. உண்மையாகவே சூரியனும் ஒரு நக்ஷத்திரந்தான். சமீபத்தில் இருப்பதால் பெரியதாகத் தெரிகிறது. அதனுல்தான் அது நமக்கு ஒரு பெரிய நெருப்புப் பந்துபோலத் தோற்றுகின்றது.

நமது பூமி சூரியமண்டலத்தைச் சார்ந்தது. இந்தப் பூமி மிகவும் பெரிதென்று நாம் நினைக்கிறோம். அற்பப் பிராணிகளான நம்மைவிட அது

பெரியதுதான். ஒரு விசையான ரெயில் வண்டியிலாவது கப்பலிலாவது நாம் போவோமானல், இப் பூமியின் ஒரு கோடியிலிருந்து மற்ெருரு கோடிக்குப் போக அநேக மாதங்கள் செல்லும். பூமி மிகப் பெரியதாய் நமக்குத் தோன்றினலும் அது ஆகாயத்தில் காணும் ஒரு தூசியின் அளவுதான் உள்ளது. சூரியனே கோடானு கோடி மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. மற்ற நக்ஷத்திரங்கள் இன்னும் வெகு தொலைவில் இருக்கின்றன.

நக்ஷத்திரங்களின் இயல்பை அறிந்த வான சாஸ்திரிகள் நீண்டகாலத்திற்கு முன்பு ஒரு காலத்தில் பூமியும் மற்றக் கிரகங்களும் சூரியனேடு சேர்ந்திருந்தனவென்று சொல்லுகிருர்கள். சூரியன் அப்போதும் இப்போது இருப்பதைப் போல ஒரு நெருப்புப் பந்தாயிருந்தது; அதிக உஷ்ணமுள்ளதாக இருந்தது. சூரியனிடத்திலிருந்து சிறிய நெருப்புத்துண்டுகள் பொறிகள் போல் எப்படியோ பிரிந்து ஆகாயத்தில் பறந்தன. ஆனல் அவைகளெல்லாம் தங்கள் தந்தையை விட்டு முற்றும் பிரிந்து போக முடியாமல் இருந்தன. ஏதோ ஒரு கயிற்ருல் கட்டப்பட்டவைபோல அவை சூரியனைச் சுற்றிச் சுற்றி வருகின்றன. கயிற்றைப் போன்ற இவ்விசித்திரமான விசையானது சிறிய வஸ்துக்களைப் பெரிய வஸ்துக்களிடம் இழுக்கும் தன்மையுடையது. இந்த விசைதான் பளுவுள்ள



'......சூரியனின் வெளிச்சத்தைப் பெறுவதனாலேதான் கிரகங்கள் பிரகாசிக்கின்றன.' —ப. 15



'......ஒருவேளை சந்திரமண்டலத்தில் பனி ஆறுகளும் பனிவயல்களும் இருக்கின்றனவோ என்னவோ!'—ப. 18

சாமான்களையும் கீழே விழும்படி செய்கிறது. நம்மைச் சுற்றிலுமுள்ள வஸ்துக்கள் எல்லா வற்றையும்விட இந்த உலகமே பெரிது. அதனால்தான் இது நம்மிடமுள்ள எல்லா வற்றையும் தன்னிடம் இழுத்துக் கொள்ளு கிறது.

இவ்விதமேதான் இப்பூமி சூரியனினின்றும் சிதறியது. அப்போது அது அதிக வெப்ப முடையதாக இருந்திருக்கும். சூடான ஆவியும் காற்றும் அதைச் சூழ்ந்துகொண்டிருந்தன. சூரியனைவிட மிகச் சிறியதான இப்பூமி விரைவில் சூடு தணிந்து குளிர்ச்சி அடைந்தது. சூரியனின் வெப்பமுங்கூட முன் இருந்ததைவிட இப்போது குறைந்துவருகிறது. அது நன்றாகச் சூடு தணிந்து குளிர்ச்சியடைய இன்னும் அநேக கோடி வருஷங்கள் பிடிக்கும். பூமி வெகு சீக்கிரத்தில் குளிர்ச்சியடைந்தது. அது வெப்ப மாக இருந்தபோது அதில் மனிதனாவது, மிரு கங்களாவது, செடி கொடிகளாவது வசிக்க முடியாமல் இருந்தது. அப்போது எல்லாம் கருகிச் சாம்பலாயிருக்கும்.

எப்படிச் சூரியனினின்றும் சிதறிய பாகம் பூமியாயிற்றோ, அவ்விதமே சந்திரனும் ஒரு சிதறிய பாகத்திலிருந்து உண்டாகியது. அமெரிக் காவுக்கும் ஜப்பானுக்கும் நடுவிலுள்ள பெரும் பள்ளமான பசிபிக் மகாசமுத்திரத்திலிருந்து சந்திரன் வந்ததாகப் பலர் நினைக்கின்றனர்.

பூமியின் சூடு மெள்ள மெள்ளத் தணிய ஆரம்பித்தது. ஆனால், அதற்கு வெகு காலம் பிடித்தது. பூமியின் மேல்பக்கம் நாளடைவில் குளிர்ச்சி அடைந்ததெனினும் பூமியின் உட்புறம் அதிக வெப்பமாகவே இருந்தது. இப்போதும் நீ ஒரு நிலக்கரிச் சுரங்கத்தில் இறங்கிச் சென்றால் கீழே போகப் போக வெப்பம் அதிகரிப்பதை உணர்வாய். ஒரு சமயம் நீ பூமிக்குள் நெடுந் தூரம் செல்வாயே யானால் அங்கே கொல்லன் உலேபோல் சிவந்து சூடாக இருக்கும். சந்திரனுங் கூடப் பூமியைப்போல வெப்பந் தணிந்து குளிர்ச்சி அடைந்தது. அது பூமியைவிடச் சிறிய தாகையால் மிக விரைவில் குளிர்ச்சி அடைந்தது. சந்திரன் எவ்வளவு இன்பகரமான குளிர்ச்சியைக் கொடுக்கிறது! அதைத் 'தண்மதி' என்று சொல்லுகின்றனர். ஒருவேளை சந்திரமண்டலத்தில் பனி ஆறுகளும் பனி வயல்களும் இருக்கின்றனவோ என்னவோ!

பூமி குளிர்ச்சி அடைந்ததும் ஆகாயத்திலிருந்த நீராவியெல்லாம் நீராக மாறிப் பூமியில் மழையாகப் பெய்தது. அப்போது மழை ஜோவென்று விடாமல் பெய்திருக்கவேண்டும். அப்படிப் பெய்த மழை ஜலமானது பூமியிலிருந்த பள்ளங்களில் தேங்க, சமுத்திரங்களும் கடல்களும் உண்டாயின.

பூமியைப்போலவே சமுத்திரமும் குளிர்ச்சி அடைந்தது. அதனால் பூமியிலும் சமுத்திரத்

திலும் ஜீவராசிகள் வசிக்க ஆரம்பித்தன. ஆதியில் ஜீவன்கள் எப்படி உண்டாயின வென்பதை அடுத்த கடிதத்தில் கவனிப்போம்.

# 4

## முதல் முதலில் பூமியில் வாழ்ந்த ஜீவராசிகள்

உயிருள்ளவை எவையும் வசிப்பதற்குப் பூமியானது வசதியில்லாமல் வெகு காலம்வரையில் அதிக வெப்பமாயிருந்தது என்பதை நாம் சென்ற கடிதத்தில் அறிந்தோம். உலகில் உயிர் முதல் முதலில் எப்படி உண்டாயிற்று? முதலில் இப்பூமியில் வசித்தவை யாவை? இவை விநோதமான கேள்விகளே. ஆனால் இவற்றிற்கு விடை சொல்வதுதான் கஷ்டம். முதலில், உயிர் என்றால் என்னவென்று கவனிப்போம்.

மானிடவர்க்கமும் மிருகங்களும் உயிருள்ளவைகளென்று நீ சொல்வாய். ஆனால் மரங்களும் செடி கொடிகளும் காய்கறிகளும் பழங்களும் உயிரற்றவைகளா? உண்மையாகவே அவைகளுக்கும் உயிர் உண்டு. அவைகளும் வளர்கின்றன; ஜலத்தைக் குடிக்கின்றன; காற்றை உட்கொள்ளுகின்றன; கடைசியில் பட்டுப் போகின்றன. ஒரு மரத்திற்கும் மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்? மிருகம் நடக்கிறது; மரம் நடக்கிறதில்லை. லண்டனில் க்யூ தோட்டத்தில் (Kew Gardens) சில செடிகளை

நான் உனக்குக் காட்டினேன். உனக்கு ஞாபகம் இருக்கலாம். அவைகளுள் ஆர்கிட் செடிகளும் பானைச் செடிகளும் (Orchid and pitcher plants) ஈக்களைத் தின்கின்றன. மற்றும் கடலின் அடியில் உள்ள கடற் பஞ்சைப் போன்ற சில பிராணிகளும் உண்டு. அவை நகருவதில்லை. சில வேளைகளில் ஒரு வஸ்து மிருகமா அல்லது செடியா என்று சொல்வது மிகவும் கடினம். செடிகளைப் பற்றிய தாவர சாஸ்திரத்தையாவது மிருகங்களைப்பற்றிய விலங்கு நூலையாவது நீ படிக்கும்போது மிருகவர்க்கத்திலும் தாவர வர்க்கத்திலும் சேராத இவ்விதமான அதிசயப் பொருள்களைப்பற்றி அறிவாய்.

கற்களுக்கும் பாறைகளுக்கும் ஒரு வகை உயிர் உண்டென்றும் அவற்றிற்கு வேதனையை அறியும் ஒரு வகையான சக்தி உண்டென்றும் சிலர் சொல்லுகின்றனர். ஆனால் இதைக் கண்ணால் காண்பது அரிது. ஜெனிவாவில் நம்மைப் பார்க்க ஒருவர் வந்திருந்தது உனக்கு ஞாபகம் இருக்கும். அவர் பெயர் ஸர் ஜகதீச சந்திர வஸு. பல ஆராய்ச்சிகளை நடத்தி, செடிகளுக்கு உணர்வும் உயிரும் உண்டென்றும், கற்களுக்குங்கூட உயிர் உண்டென்றும் அவர் நிரூபித்திருக்கிறார்.

ஆகவே, உயிருள்ளவை எவை, உயிரற்றவை எவை என்று சொல்வது கஷ்டம். நாம் இப்போது கற்களைப் பற்றிக் கவனிக்க வேண்டாம்; செடிகளையும் மிருகங்களையும்

பற்றி மாத்திரம் கவனிப்போம். தற்காலத்தில் ஜீவராசிகள் பல இருக்கின்றன. அவை பல வகைப்பட்டவைகள். ஆண்கள் இருக்கின்றனர், பெண்கள் இருக்கின்றனர். இவர்களில் சிலர் அறிவாளிகள், சிலர் மூடர்கள். அம்மாதிரியே மிருகவகையிலும் உண்டு. யானே, குரங்கு, எறும்பு இவையெல்லாம் அறிவுள்ளன. அறிவற்ற மிருகங்களும் அநேகம் உண்டு. ஜீவவர்க்க ஏணியில் மீன்களும், மற்ற ஜீவன்களும் இன்னும் தாழ்மையான படியைச் சேர்ந்தவை. மீன்களுக்குக் கீழே கடல்பஞ்சும் சொறிமீனும் (Jelly fish) உள்ளன. அரைவாசி மிருகங்களின் குணமும் அரைவாசிச் செடிகளின் குணமும் உடைய ஜீவன்களும் இருக்கின்றன. இவைகள் எல்லாம் அடிப்படியைச் சார்ந்தவை.

பலதிறப்பட்ட ஜீவன்களெல்லாம் ஒரே காலத்தில் உண்டாயினவா, அல்லது வெவ்வேறு காலங்களில், நாளடைவில் ஒன்றன்பின் ஒன்ருக உண்டாயினவா வென்பதை நாம் அறிய வேண்டும். ஆனுல் இதை எப்படிக் கண்டு பிடிப்பது? புராதன காலத்தைப்பற்றிக் கோவையாகக் கூறும் நூல் எதுவும் இல்லே. ஆனுல் நமது இயற்கைப் புஸ்தகம் உதவி செய்யுமா? ஆஹா! அது உதவி செய்கிறதே. பழைய பாறைகளில் மிருகங்களின் தோல் பதிந்து கிடப்பதை நாம் பார்க்கிருேம். அவற்றைக் கற்படிபொருள்கள் (Fossils) என்பார்கள். நீண்டகாலத்

திற்கு முன்பு அப்பாறை உண்டானபோது அம்மிருகங்கள் உயிரோடு இருந்திருக்க வேண்டு மென்று அவற்றிலிருந்து நாம் ஊகிக்கலாம். பெரிதும் சிறிதுமான பல கற்படிபொருள்களை லண்டனில் தென் கென்ஸிங்டன் காட்சிச் சாலையில் நீ பார்த்திருக்கிறாய்.

ஒரு மிருகம் இறந்தால், அதன் மிருதுவான தோல், மயிர், மாமிசம் இவை நாற்றமெடுத்து வெகு சீக்கிரத்தில் அழிந்து போகின்றன. அவற்றின் எலும்புகள் மட்டும் அநேக ஆண்டுகள் வரை அழியாமல் இருக்கின்றன். ஆதிகாலத்தில் வசித்த மிருகங்களைப் பற்றிப் பல விஷயங்களை, நமக்கு, நாம் பார்க்கும் இவ்வெலும்புகள்தாம் சொல்கின்றன. ஆனால் சொறிமீன் போன்ற ஒரு பிராணிக்கு எலும்பே இல்லாவிடில் அது இறக்கும்போது ஒன்றுமே மிஞ்சியிராது.

பாறைகளை நன்றாகக் கவனித்துப் பழைய கற்படிபொருள்களையும் சேகரித்துப் பார்த்தால், வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகையான மிருகங்கள் இவ்வுலகில் வசித்திருந்தன என்பது விளங்கும். எங்கிருந்தோ அவைகளெல்லாம் ஒரேதடவையில் வந்து குதித்துவிடவில்லை. முதலில் ஓடுகளால் மூடப்பட்ட சிறிய கிளிஞ்சல் மீன்களாக இருந்தன. கடற்கரையில் நீ பொறுக்கி யெடுக்கும் அழகான கிளிஞ்சல்களெல்லாம் இறந்துபோன அச்சிறு ஜீவன்களின் எலும்பு மூடிகளேயாம். இவற்றிற்குப் பிறகு பாம்பு

களும் யானையைவிடப் பெரிய மிருகங்களும் பறவைகளும் இக்காலத்தில் காணும் மிருகங்களைப் போன்ற அதிநுட்பமாய் அமைக்கப்பட்ட பிராணிகளும் உண்டாயின. இவற்றிற் கெல்லாம் பிறகுதான் மனிதன் உண்டானுனென்பதற் கேற்ற அடையாளங்கள் இருக்கின்றன. பிராணிகள் இவ்வுலகில் தோன்றியபோது ஓர் ஒழுங்காகத் தோன்றினவென்று ஊகிக்கவேண்டியிருக்கிறது. முதலில் சிறிய பிராணிகளும் பிறகு அவற்றை விடச் சற்று உயர்ந்த அமைப்பையுடைய பிராணிகளும், பிறகு அதிநுட்பமானதும் சிக்கலானதுமான உடலமைப்புள்ள மிருகங்களும், கடைசியாக மனிதனும் உண்டானதாகத் தெரிகிறது. ஒரு சிறிய கடல் நுரையும் சொறி மீனும் எப்படி வளர்ந்தன, மாறின, மேம்பாடடைந்தன என்பதைப் படிக்கப் படிக்க விநோதமாயிருக்கும். அவற்றைப்பற்றியெல்லாம் நான் உனக்கு எப்பொழுதாவது ஒரு நாள் சொல்லக்கூடும். ஆனுல் இப்போது, உலகில் முதல் முதல் வசித்த பிராணிகளைப்பற்றி நாம் கவனிப்போம்.

பூமி வெப்பம் தணிந்து குளிர்ந்த சமயத்தில் எலும்பும் கூடும் ஒன்றுமே இல்லாத மிருதுவான சொறி மீன் (Jelly fish) போன்ற வஸ்துக்களேதான் சமுத்திரத்தில் வசித்திருக்க வேண்டும். இவற்றின் சின்னம் ஒன்றும் (Fossils) காணப்படவில்லை. இவற்றிற்கு எலும்புகள் இல்

லாமையால்தான் கற்படிபொருள்கள் இல்லை யென்று நாம் ஊகிக்கவேண்டியிருக்கிறது. சொறி மீனைப்போன்ற வஸ்துக்கள் இன்றைக் கும் கடல்களில் இருக்கின்றன. அவைகளின் உரு வம் வட்டமாயிருக்கும். ஆனால் அவற்றிற்கு எலும்பு இல்லாததால் உருவம் அடிக்கடி மாறு கிறது. அவைகளெல்லாம் ஏறக்குறைய இந்த மாதிரி இருக்கும்.



அவைகளின் நடுவில் ஒரு புள்ளி இருப்பதை நீ பார்க்கலாம். அது அவற்றிற்கு ஒரு ஹ்ருதயம் போன்றது. அந்த ஜீவன்கள் இரண்டாகப் பிரிந்துபோகும் தன்மை உடையன. அவை ஒரு பக்கத்தில் சிறுக ஆரம்பித்துப் பிறகு சிறிய தாகிச் சிறியதாகிக் கடைசியில் இரண்டாகப் பிரிந்து போகின்றன. பிரிந்த பிறகு பார்த்தால் அவை இரண்டும் ஒரேமாதிரி இருக்கும். அவை இம்மாதிரி இரண்டாகப் பிரியும்.



அந்தப் புள்ளி அல்லது ஹ்ருதயமும் இரண் டாகப் பிரிந்து போயிருக்கிறது பார். இவ்வித மாகத்தான் இந்த ஜீவராசிகள் பிரிகின்றன; பெருகுகின்றன.

இதைப் போன்ற ஒரு ஜீவன்தான் பூமியில் முதல்முதலில் வசித்திருக்கவேண்டும். ஆதியில் உயிர் எவ்வளவு சிறியதாகவும் சிக்கல் இல்லாத தாகவும் எளியதாகவும் இருந்திருக்கிறது பார்த் தாயா? அக்காலத்தில் பூமியில் இவற்றைவிட மேலான உயிராவது வஸ்துவாவது இல்லை. உண்மையான மிருகங்கள் அக்காலத்தில் இருக்க வில்லை. மனிதனும் அநேக கோடி வருஷங் களுக்குப் பின்னேதான் வரப்போகிறான்.

சொறி மீன் போன்றவைகளுக்குப் பின் கடற் கொடிகளும் ஓடுள்ள மீன்களும் நண்டு களும் புழுக்களும் உண்டாயிருக்க வேண்டும். பிறகு மீன்கள் உண்டாயின. இவற்றைப்பற்றி நமக்குப் பல விஷயங்கள் தெரிகின்றன. இவை களுக்குக் கெட்டியான எலும்பும் கூடுகளும் இருந்தன. இவைகள் இறந்து வெகு காலமாயி னும் நாம் இவற்றை நன்கு ஆராய்ந்து விவரங் களை அறிய முடிகிறது. முதலில் இவற்றின் எலும்புகள் மணலிலும் மண்ணிலும் புதைந் திருக்கவேண்டும். அவற்றின் பேரில் மறுபடியும் புதிய மண் வந்து மூடியிருக்க வேண்டும். அதனால்தான் அவ்வெலும்புகளெல்லாம் அப் படியே கெடாமல் பூமியில் பதிந்துகிடக்கின்றன. மேலேயுள்ள மணலின் கனத்தாலும் பளுவாலும் அவை இறுகிப் பாறையாகிவிட்டன. இம்மாதிரி சமுத்திரத்திற்கடியிலும் பாறைகள் உண்டாயின. அப்பாறையைப் பூகம்பம் மேலே கொண்டுவர

அதுவே பூமியாய்விட்டது. நாளடைவில், அப்பாறையை மழை ஜலமும், நதியின் பிரவாகமும் கரைத்துவிடப் பாறையினுள் பல்லாயிர வருஷங்களாக அடங்கியிருந்த எலும்புகளும் ஓடுகளும் தென்பட்டன. இவ்விதமாகத்தான், எலும்புகளும் ஓடுகளும் கற்படி பொருள்களும் நமக்குக் கிடைத்தன. இவற்றை ஆராய்ந்து, மனிதன் வருவதற்கு முன்பு இவ்வுலகம் எப்படி இருந்தது என்பதை நாம் அறிய முடிகிறது.

இச்சிறிய ஜீவன்கள் எப்படி வளர்ந்து தற்கால நிலைமையை அடைந்தன என்பதை அடுத்த கடிதத்தில் கவனிப்போம்.

## 5

## மிருகங்கள் தோன்றிய வரலாறு

சிறிய கடற்பிராணிகளும் நீரில் வளரும் சில செடிகளுமேதான் ஆதியில் இப்பூமியில் உயிருள்ளவற்றின் அறிகுறியாக இருந்தன என்பதை அறிந்தோம். தண்ணீரில் இருக்கும் போதுதான் அவை உயிரோடிருக்கும். வெளியே வந்து தரையில் கிடந்தால் அவை இறந்து போகும். இக்காலத்திலும் அதேமாதிரி சொறி மீன் தப்பித் தவறி மணல்தரையில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டால் அது உலர்ந்து இறந்து போகிறது. ஆனால் அக்காலத்தில் பூமியில் எங்கே பார்த்தாலும் இப்போது இருப்பதைவிடத் தண்ணீர் அதிகமாக நிறைந்திருந்தது; சதுப்பு நிலங்களும் அதிகமாக இருந்தன. கடினமான தோலுள்ள மற்றைக் கடல் பிராணிகளும் சொறி மீன்களும் மற்றவைகளைவிடத் தரையில் சீக்கிரம் காய்ந்து போகாமல் அதிக நேரம் உயிரோடு இருக்க முடிந்தது. ஆகவே மெள்ள மெள்ள மெல்லிய தோல் உள்ள சொறி மீன் போன்ற பிராணிகள் காய்ந்த தரையில் வசிக்க முடியாமல் இறந்துபோயின. கடினமான தோல் உள்ளவை

கள் நாளுக்கு நாள் அதிகரித்தன. இது நாம் கவனிக்கவேண்டிய ஒரு விஷயம். மெள்ள மெள்ளத் தாங்கள் வசிக்குமிடம், நிலைமை இவற்றிற்கு ஏற்றவாறு தங்களுடைய தேகத்தை ஜீவப் பிராணிகள் அமைத்துக் கொள்கின்றனவென்று தெரிகிறது. பனி நிறைந்திருக்கும் குளிர் நாடுகளிலும், குளிர் காலத்திலும், பறவைகளும் மிருகங்களும் பனிபோன்ற வெண்மை நிறத்தை அடைகின்றன. லண்டனில் தென் கென்ஸிங்டன் காட்சிச்சாலையில் இதை நீ பார்த்திருக்கிறாய். பச்சைச் செடி கொடிகளும் மரங்களும் நிறைந்துள்ள உஷ்ணதேசங்களில் அப்பறவைகளும் மிருகங்களும் பச்சை நிறத்தை யாவது அல்லது வேறு பிரகாசமான நிறத்தை யாவது அடைகின்றன. அதாவது, தங்கள் சுற்றுப் பக்கத்திற்கு ஏற்றவாறு அவை தங்கள் நிறத்தை அமைத்துக்கொள்கின்றன. சுற்றுப் பக்கத்தின் நிறமும் அவற்றின் நிறமும் ஒன்றாக இருப்பதால் அவற்றின் எதிரிகள் அவற்றை எளிதில் கண்டுபிடிக்க முடியாது. எதிரிகளிடமிருந்து அந்நிறம் அவைகளைக் காப்பாற்றுகின்றது. குளிர்நாடுகளில் உள்ள பிராணிகளுக்குக் கம்பளி போன்ற அடர்ந்த மயிர் (Fur) உண்டு. அது அவற்றிற்கு உஷ்ணத்தைக் கொடுக்கும். அம்மாதிரியே புலி மஞ்சள் நிறமுடையது, வரியுடையது. காடுகளில் மரங்களுக்கிடையில் வரும் சூரியவெளிச்சத்தைப்

போல் இருக்கும். ஓர் அடர்ந்த காட்டில் புலியைக் காண்பது கடினம்.

மிருகங்கள் தங்கள் சுற்றுப் பக்கத்திற்கு ஏற்றவாறு தங்களை அமைத்துக் கொள்கின்றன என்கிற அதியற்புதமான விஷயம் மிகவும் முக்கியமானது. மிருகங்கள் தாமாகவே இம்மாதிரித் தம்மை அமைத்துக் கொள்வதில்லை. ஆனால் சுற்றுப் பக்கத்திற்கு ஏற்றவாறு தம்மைத் திருத்தி அமைத்துக் கொள்ளும் பிராணிகள் தாம் அவ்விடத்தில் நன்றாக வாழமுடியும். ஆகவே அவைகளின் சந்ததி அதிகரிக்கின்றன; மற்றவைகளின் சந்ததி அதிகரிப்பதில்லை. இதனால் நமக்குப் பல விஷயங்கள் தெளிவாகின்றன. சிறிய பிராணிகள் மெதுவாகப் பெரிய பிராணிகளாக மாறிப் பல கோடி வருஷங்களுக்குப் பிறகு மனிதனாக மாறியிருக்கலாமென்று தெரிகிறது. நமது வாழ்க்கை குறுகியதாகையாலும், உலகத்தில் ஏற்படும் மாறுதல்களெல்லாம் மிகவும் மெதுவாக நடப்பதனாலும் நாம் இம்மாறுதல்களையெல்லாம் கண் கூடாகப் பார்க்க முடியாது. ஆனால் இயற்கையில் விஷயங்கள் நடந்து கொண்டும் மாறிக்கொண்டும் மேலும் மேலும் தேர்ச்சி அடைந்துகொண்டும் வருகின்றன. இயற்கை ஒருபோதும் சும்மா இருப்பதில்லை; ஓய்வெடுத்துக் கொள்வதில்லை.

உலகம் உஷ்ணம் தணிந்து மெதுவாகக் குளிர்ச்சியடைந்த விவரம் உனக்கு ஏற்கெனவே

தெரியும். அது குளிர்ச்சி அடைந்ததும் சீதோஷ்ண நிலையும் மாறிற்று; மற்றும் பல விஷயங்களும் மாறின. பூமி மாறவும் மிருகங்கள் மாறின. பழைய மிருகங்களைவிட மேலான, விருத்தியடைந்த மிருகங்கள் உலகத்தில் உண்டாயின. முதலில் எளிய கடற் பிராணிகள் இருந்தன. அந்தப் பிராணிகளே பிறகு பெரியவைகளாயின. சிறிது காலத்திற்குப் பின் உலர்ந்த பூமி ஏற்பட்டதும் முதலை, ஆமை, தவளை போன்ற நீரிலும் நிலத்திலும் வசிக்கும் பிராணிகள் உண்டாயின. இவைகளுக்கு அப்புறம் தரையிலேயே வசிக்கும் பிராணிகள் உண்டாயின. அவற்றிற்குப் பிறகு ஆகாயத்தில் பறக்கும் பறவைகள் உற்பத்தியாயின.

நான் மேலே சொன்ன தவளையின் ஜீவிய சரித்திரம் வெகு விசித்திரமானது. நீர்வாழும் பிராணிகள் எவ்விதம் நிலத்தில் வாழும் பிராணிகளாக மாறின என்பதை இத்தவளை காட்டுகிறது. முதலில் ஒரு மீனைப்போல் இருக்கிறது. பிறகு நீரிலும் நிலத்திலும் வசிக்கும் பிராணியாக மாறுகிறது. கடைசியாக, பூமியில் வசிக்கும் பிராணிகளைப் போலச் சுவாசப் பையால் சுவாசம் விடுகிறது.

பூமியில் பிராணிகள் வசிக்க ஆரம்பித்த காலத்தில் பெரிய காடுகள் இருந்தன. அக்காலத்தில் பூமியெங்கும் அடர்ந்த சோலைகளுள்ள சதுப்பு நிலங்கள் இருந்திருக்கவேண்டும். அச்

சோலைகளெல்லாம் பிற்பாடு மூடப்பட்டுப் போக, கல் மண் இவற்றின் பாரத்தால் அவைகளெல்லாம் நிலக்கரியாக மாறின. நிலக்கரி பூமிக்கடியிலுள்ள சுரங்கங்களிலிருந்து கிடைக்கின்றது என்பது உனக்குத் தெரியும். மூடிப்போன பண்டைக் காலத்துக் காடுகளே தற்காலத்து நிலக்கரிச் சுரங்கங்கள்.

முதல் முதலில் பூமியில் வாழ்ந்திருந்த மிருகங்களுள் பெரிய பாம்புகளும் பல்லிகளும் முதலைகளும் இருந்தன. இவைகளிற் சில நூறு அடி நீளம் இருந்தன. ஒரு பல்லி, பாம்பு நூறு அடி நீளமென்றால் என்ன ஆச்சரியம் பார்! இந்த ஜீவன்களின் கற்படி உருவத்தை லண்டனிலுள்ள காட்சிச்சாலையில் பார்த்தது உனக்கு ஞாபகம் இருக்கிறதா?

இவற்றிற்குப் பிறகு நாம் இக்காலத்தில் பார்க்கும் மிருகங்களைப் போன்ற தோற்றமுடைய மிருகங்கள் உண்டாயின. தங்கள் குட்டிகளைப் பால் கொடுத்து வளர்த்ததால் இவற்றை ஸ்தன்யபானிகள் (Mammals) என்று வழங்குகிறோம். இப்போது இருப்பதைவிட ஆதியில் இம்மிருகங்களெல்லாம் அதிகப் பருமனும் பெரியனவாயும் இருந்தன. ஸ்தன்யபானிகளுள் ஏறக்குறைய மனிதனை ஒத்திருக்கும் பிராணி குரங்கு அல்லது மனிதக் குரங்கு என்று சொல்லலாம். இதனால்தான் மனிதன் மனிதக் குரங்கிலிருந்து உண்டாயிருக்கவேண்டுமென்று




'......தவளையின் ஜீவிய சரித்திரம் வெகு விசித்திரமானது......' —ப. 31.








'ஆதி மனிதன்......பாதி குரங்காகவும் பாதி மனிதனுகவும் இருந்து ......வசித்திருக்கவேண்டும்.' —ப. 37

எண்ணுகிறார்கள். இதிலிருந்து ஓர் உண்மை தெளிவாகிறது. அதாவது ஒவ்வொரு பிராணியும் மெள்ள மெள்ளப் படிப் படியாக முன்னேற்ற மடைந்து சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன் சுபாவத்தையும் நடவடிக்கைகளையும் அமைத்துக்கொண்டு வந்திருக்கிறது. அம்மாதிரியே முதல் முதலில் மனிதனும் ஒரு மேலான குரங்காய்த்தான் இருந்திருக்கவேண்டும். உண்மையாகவே மனிதன் தன்னைத் தானே மேம்படுத்திக் கொண்டான். அல்லது இயற்கையே அவனை மேம்படுத்தியது என்று சொல்லலாம். இப்போது தனக்கு நிகர் ஒருவரும் இல்லையென்று மனிதன் நினைக்கிறான். மிருகங்களைக் காட்டிலும் எல்லாவகையிலும் தான் மேம்பட்டவன், தனிச் சிறப்புடையவன் என்று எண்ணுகிறான் மனிதன். நாம் மனிதக்குரங்குகளுக்கு அத்தான் அம்மான் சேய் முறையாகவேண்டும் என்பதை மாத்திரம் மறக்கக்கூடாது. இப்போதும் நம்மில் அநேகர் குரங்குகள் மாதிரி நடந்து கொள்ளுகிறோம் என்று எண்ணுகிறேன்.

## 6

## மனிதனின் தோற்றம்

ஜீவப்பிராணிகள் இந்த உலகத்தில் எப்படி முதலில் மிகச் சிறியனவாயிருந்தன, எப்படி கோடிக்கணக்கான வருஷங்களில் மெள்ள மெள்ள வளர்ந்து தற்காலத்தில் நாம் காணும் பலவகைப் பிராணிகளாக ஆயின என்பதைப் பற்றிப் போன கடிதத்தில் உனக்கு நான் எழுதினேன். ஜீவப் பிராணிகள் எப்படித் தங்கள் சூழ்நிலைக்கு ஏற்றபடி தங்கள் வாழ்க்கையையும் நடத்தையையும் அமைத்துக் கொள்ளுகின்றன என்ற முக்கியமானதும் ருசிகரமானதுமாகிய விஷயத்தை அறிந்தோம். இதன் காரணமாக அவைகளிடத்துச் சில புதிய குணங்கள் உண்டாயின. அம்மிருகங்களும் படிப் படியாக வளர்ந்து வரவர உயர்வையும் உடம்பைப் பொறுத்தமட்டில் நுட்பமான அமைப்பையும் அடைந்தன. இந்த வளர்ச்சியையும் மாறுதல்களையும் நாம் பலவகையில் அறியக்கூடும். முதல் முதலாக எலும்பு இல்லாத பிராணிகள் இருக்கின்றன. எலும்பு இல்லாத அவை அதிக நாள் ஜீவிக்க முடியாமையால் அவைகளுக்கு மெல்ல மெல்ல எலும்பு வளர

ஆரம்பித்தது. இவ்வாறு அவற்றிற்கு முதல் முதலில் உண்டான எலும்பு முதுகெலும்பு. இக் காரணத்தைக் கொண்டு பிராணிகளை இரண்டு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். ஒருவகை, எலும்பு உள்ள பிராணிகள்; இரண்டாவது வகை, எலும்பு இல்லாத பிராணிகள். நீ பார்க்கும் மனிதர் களுக்கும் மிருகங்களுக்கும் எலும்பு உண்டு.

மற்றும் எளிய ஜீவன்களாகிய மீன்கள் முட்டை இடுகின்றன. அம்முட்டைகளைக் காப் பாற்றாமல் விட்டுவிட்டுச் செல்கின்றன. ஒரு தடவையில் அவை ஆயிரக்கணக்கான முட்டை களை இடுகின்றன. ஆனால் அம்முட்டைகளை அவை பாதுகாப்பதில்லை. தாய்மீன் தன் குட்டிகளைக் கவனிப்பதில்லை. முட்டைகளை இட்ட பின்பு மீன்கள் மறுபடியும் அவற்றைக் கவனிப்பதும் இல்லை; திரும்பி வருவதும் இல்லை. கவனிப்பாரற்று அநேகம் முட்டைகள் அழிந்து போகின்றன. சில முட்டைகள் மாத்திரமே மீன் குஞ்சுகளாக மாறுகின்றன. எவ்வளவு சேதம் பார்! உயர்தரப் பிராணிகளை நோக்கு மிடத்து, அவைகள் முட்டையிடுவது மிகவும் சொற்பம். குஞ்சுகளைப் பெறுவதும் கொஞ்சம். எனினும் அவை தம் குஞ்சுகளையும் குட்டிகளையும் நன்றாகக் காப்பாற்றுகின்றன.

கோழி முட்டை இடுகிறது. அது முட்டை யின்மீது உட்கார்ந்து அடை காக்கிறது. குஞ்சுகள் வெளியில் வந்ததும் சில காலம் வரை

யில் அவற்றிற்கு ஆகாரம் கொடுத்துக் காப்பாற்றுகிறது. அவை பெரியவையானவுடன் தாய்க்கோழி அக்குஞ்சுகளை அவ்வளவு கவனிப்பதில்லை.

நான் ஸ்தன்யபானிகளைப்பற்றிச் சில விஷயங்களைச் சென்ற கடிதத்தில் சொன்னேன். இவைகளிடத்து அதிக வேற்றுமை காணப்படுகிறது. இப்பிராணிகள் முட்டையிடுவதில்லை. அம்முட்டைகளைத் தம் வயிற்றிலேயே வைத்துக்கொண்டு குழந்தைகள் வயிற்றிலேயே நன்றாக வளர்ந்தபின் அவற்றை ஈனுகின்றன. இம்மாதிரிதான் நாயும் பூனையும் முயல்களும் செய்கின்றன. பிறகு தாயானது அவற்றிற்குப் பால் கொடுத்து வளர்க்கின்றது. குழந்தைகளை அதிகமாகக் கவனித்துக் காப்பாற்றுகிறது. இங்கேயும் அதிகச் சேதம் உண்டாகிறது. உதாரணமாக, முயல் பல குட்டிகளைப் போட்டாலும் அவற்றில் அநேகம் இறந்து போகின்றன. ஆனால் யானையோ ஒரே ஒரு குட்டிதான் போடுகிறது. அக்குட்டியை யானை வெகு நன்றாகக் காப்பாற்றுகிறது.

ஆகவே பிராணிகள் பிறப்பில் உயர உயர, அவை முட்டையிடுவதில்லை. ஆனால் தங்களைப் போன்ற உருவமுடைய நன்றாக வளர்ந்த ஒரு சிறிய குஞ்சை ஈனுகின்றன. சாதாரணமாக உயர்தரப் பிராணிகளெல்லாம் ஒரு தடவையில் ஒரே குட்டியைத்தான் ஈனுகின்றன. தங்களுடைய

குழந்தைகளிடத்து உயர்தரப் பிராணிகளுக்கு அன்பு உண்டு. மனிதனே எல்லா ஜீவராசிகளி லும் உயர்ந்தவன். ஆகவே தாயும் தகப்பனும் தம் குழந்தைகளிடத்து ஏராளமான அன்பு பாராட்டி வளர்த்து வருகிறார்கள்.

கீழ்த்தரப் பிராணிகளிலிருந்து முதலில் மனி தன் இவ்விதமாகத்தான் முன்னேற்றம் அடைந் திருக்கவேண்டும். ஆதிமனிதன் நாம் பார்க்கும் இக்காலத்து மனிதர்களைப்போல் இருந்திருக்க முடியாது. அவன் பாதிக் குரங்காகவும் பாதி மனிதனாகவும் இருந்து குரங்கு போன்று வசித் திருக்கவேண்டும். ஜெர்மனியில் ஹீடல்பர்க்குக்கு நாங்கள் ஒரு பேராசிரியரைப் பார்க்கப் போன போது நீ எங்களுடன் வந்தது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அவர் கற்படிபொருள்கள் நிறைந்த ஒரு சிறு காட்சிச்சாலையை நமக்குக் காட்டினார். அதில் விசேஷமாக அவர் நமக்கு ஒரு பழைய மண்டை யோட்டைக் காட்டினது உனக்கு ஞாபகம் இருக்கும். அதை அவர் வெகு ஜாக் கிரதையாக ஓர் இரும்புப் பெட்டியில் பூட்டிவைத்திருந்தார். இந்த மண்டையோடு ஆதி மனிதன் ஒருவனுடையது என்று அவர் எண்ணுகிறார். அப்புராதன மனிதனை இப்போது ஹீடல்பர்க் மனிதன் என்று அழைக்கிறோம். ஏனென்றால் அந்த மண்டையோடு ஹீடல் பர்க்குக்குச் சமீபத்தில் மண்ணில் புதைந்து கிடந்ததாம். ஆனால் ஹீடல்பர்க் நகரமாவது

வேறு எந்த நகரமாவது அக்காலத்தில் இருக்க வில்லை.

முதல் மனிதன் ஸஞ்சரித்த அப்பண்டைக் காலத்தில் குளிர் அதிகமாயிருந்தது. பனி அதிக மாய் அக்காலத்தில் இருந்ததால் அதைப் பனி யுகம் என்று கூறுகிறார்கள். வடதுருவத்தில் தற் காலத்தில் காணப்படும் பனியாறுகள் ஒரு காலத்தில் இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் பரவி யிருந்தனவாம். அந்த நிலைமையில் ஜனங்கள் அதிகக் கஷ்டத்துடன் ஜீவித்திருக்கவேண்டும். பனியாறுகள் அல்லது உறைபனியில்லாத இடங் களில்தான் அவர்கள் வசித்திருக்கவேண்டும். அக்காலத்தில் மத்தியதரைக்கடலானது கடலாக இருக்க வில்லையென்றும் அது ஓர் ஏரியாக இருந்ததென்றும் விஞ்ஞான சாஸ்திரிகள் சொல்லுகின்றனர். அக்காலத்தில் செங்கடலும் இருக்கவில்லை. எல்லாம் பூமியாகவே இருந்தது. இந்தியாவும் ஒரு சமயம் ஒரு தீவாக இருந்திருக் கலாம். பஞ்சாபும் *நமது மாகாணத்திற் சில பாகங்களும் சமுத்திரமாக இருந்திருக்கலாம். தென்னிந்தியாவும் மத்திய இந்தியாவும், ஹிமாலயப் பிரதேசங்களினின்றும் ஒரு சமுத் திரத்தால் பிரிக்கப்பட்டு அவையெல்லாம் ஒரு தீவாக இருந்திருக்க வேண்டும் என்று நினைக்க இடம் இருக்கிறது! அப்போது நீ மசூரிக்குப்

* ஜவாஹர்லால் நேரு பிறந்த ஐக்கிய மாகாணம்.

போகவேண்டுமானால் கப்பலில் பாதிவழி பிரயாணம் செய்யவேண்டி வரும்!

மனிதன் உலகில் தோன்றியபோது அவனைச் சுற்றிலும் பல பெரிய பெரிய மிருகங்கள் இருந்திருக்கும். அவற்றிற்குப் பயந்தே அவன் வசித்திருக்கவேண்டும். இக்காலத்தில் மனிதன் உலகையே ஆள்கிறான். மிருகங்களைத் தன் இஷ்டம்போல் நடக்கும்படி செய்கிறான். குதிரை, பசு, யானை, நாய், பூனை போன்றவற்றைப் பழக்கி வீட்டில் வளர்க்கிறான். சிலவற்றைக் கொன்று தின்கிறான். சிங்கம் புலி போன்றவைகளை உத்ஸாகத்துடன் வேட்டையாடுகிறான். ஆனால் ஆதிகாலத்தில் அவனுக்கு ஆளுந்திறமை இருக்கவில்லை. அவனைப் பல துஷ்ட மிருகங்கள் துரத்தின. அப்போது அவன் நிலைமை பரிதாபகரமாயிருந்தது. இப்பெரிய துஷ்ட மிருகங்களுக்குப் பயந்து ஒளிந்து வசித்து வந்தான். மெள்ள மெள்ளப் பயத்தினின்றும் எழுந்தான். ஆற்றலில் எல்லா மிருகங்களைக் காட்டிலும் மேன்மையடைந்தான். இந்த நிலைமையை மனிதன் எப்படி அடைந்தான்? அவன் உடல் வலிமையினால் இந்நிலைமையை அடையவில்லை. யானை அவனைவிடப் பன்மடங்கு வலிமையுள்ளது. தன் அறிவினாலும் பகுத்தறிவினாலுமே மனிதன் இந்த உயர்ந்த நிலைமையைப் பெற்றான்.

ஆதிகாலம் முதல், தற்காலம்வரை மனிதனுடைய அறிவு வளர்ச்சியை நாம் அறிய

முடியும். நிஜமாகவே, பகுத்தறிவுதான் மனிதனை விலங்குகளினின்றும் வேறுபடுத்துகிறது. பகுத்தறிவில்லாத மனிதனுக்கும் மிருகத்திற்கும் உண்மையாகவே ஒரு வித்தியாசமும் இல்லை.

மனிதன் முதல் முதலில் கண்டுபிடித்த அதிசயங்களில் ஒன்று நெருப்பு. தீக்குச்சியால் இப்போது நாம் நெருப்பு உண்டாக்குகிறோம். ஆனால் தீக்குச்சிகளெல்லாம் சமீபகாலத்திலே தான் உண்டாயின. பழைய காலங்களில், இரண்டு சிக்கிமுக்கிக் கற்களை உரைத்து நெருப்புப் பொறியுண்டாக்கினார்கள். அப்பொறியால் உலர்ந்த சருகுகளைப் பற்றவைத்து நெருப்பு உண்டாக்கினார்கள். மலைப்பிரதேசங்களில் இன்றைக்கும் சில சமயங்களில், மரங்கள் ஒன்றோடொன்று உராய்வதனாலும் அல்லது கற்கள் ஒன்றோடொன்று தேய்வதனாலும் நெருப்பு உண்டாகிறது. இதினின்றும் மிருகங்கள் ஒன்றையும் அறிந்து கொள்ளமுடியவில்லை; அவற்றிற்கு அறிவில்லாமையேதான் இதற்குக் காரணம். ஆனால் மனிதன் மிருகத்தினும் அறிவுடையவன். நெருப்பின் உபயோகத்தை அறிந்து கொண்டான். குளிர்காலத்தில் அது அவனுக்கு உஷ்ணத்தைக் கொடுத்துக் குளிரைப் போக்கிற்று. அவனுடைய சத்துருக்களான பெரிய மிருகங்களை அவனண்டையில் நெருங்காவண்ணம் நெருப்பு அவற்றைப் பயப்படுத்தியது. ஆகவே ஓர் இடத்தில் நெருப்பு உண்டானதும் ஆண்களும்





மனிதர்கள் தங்கள் ஆயுதங்களையெல்லாம் கல்லி
னாலேயே செய்துகொண்டார்கள்.' —ப. 44



தீக்கடைதல் —ப. 40



'......ஏரிகளுக்கு நடுவில் தங்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டனர்......' —ப. 46.

பெண்களும் அது அணைந்து போகாவண்ணம் சருகுகளையும் இலைகளையும் போட்டுக் காப்பாற்றினார்கள். நெருப்பு அணைந்துபோகவிடாமல் அவர்கள் பார்த்துக் கொண்டார்கள். சிக்கிமுக்கிக் கற்களைக் கொட்டித் தாமே நெருப்புப் பொறி உண்டாக்கி அதினின்றும் நெருப்பை உண்டாக்குவதையும் அவர்கள் கண்டுபிடித்திருக்கவேண்டும். இது அவர்களுக்கெல்லாம் ஒரு புதுமையாக இருந்தது. எவரும் கண்டுபிடிக்காத ஒரு விஷயத்தைத் தாங்கள் கண்டுபிடித்ததாக எண்ணினார்கள். இதனால் அவர்கள் மிருகங்கள் முதலியவற்றை அடக்கியாள முடிந்தது. இவ்விதமாக மனிதன் படிப்படியாக உலகத்தை ஆள ஆரம்பித்தான்.

# 7

## பூர்விக மனிதர்

**ப**குத்தறிவுதான் மனிதனுக்கும் மிருகங்களுக்குமுள்ள முக்கிய வித்தியாசமென்று சென்ற கடிதத்தினுல் அறிந்தோம். மிகப் பெரிய மிருகங்களைக் காட்டிலும் மனிதன் அதிக அறிவாளியாகவும் பலமுள்ளவனுகவும் இருந்ததற்கு இந்தப் பகுத்தறிவே காரணம். இது இல்லாமற் போயிருந்தால் மிருகங்கள் மனிதனைக் கொன்று தின்றிருக்கும். மனிதனுக்கு அறிவு வளர வளரப் பலமும் அதிகரித்தது. ஆரம்பத்தில் தன் எதிரிகளோடு சண்டையிட மனிதனுக்கு விசேஷமாக ஆயுதம் ஒன்றும் இருக்கவில்லை. அவர்கள்மேல் கல்லைத்தான் எறிய முடிந்தது. பிறகு கல்லைக் கொண்டே கத்தி, கோடாரி, சூலம் போன்ற பல ஆயுதங்களையும் மிகவும் நுண்ணிய கல் ஊசிகளையும் செய்யக் கற்றுக்கொண்டான். தென் கென்சிங்டன் காட்சிச் சாலையிலும் ஜெனிவாவில் ஒரு காட்சிச்சாலையிலும் இக்கல் ஆயுதங்களிற் பலவற்றை நாம் பார்த்தோம்.

போன கடிதத்தில் நான் சொன்ன பனியுகமானது (Ice Age) மெதுவாக மறைந்து போக,

உறைபனியும் ஐரோப்பா ஆசியாக்கண்டங்களிலிருந்து மறைந்தது. பின்னர் வெப்பம் உண்டானதால் மனிதர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடியேறினர்.

அக்காலத்தில் வீடுகளாவது கட்டிடங்களாவது இல்லை. ஜனங்கள் குகைகளில் வசித்தனர். பூமியை உழுது பயிர் செய்யும் வியவசாயமும் இல்லை. பழங்களையும் கொட்டைகளையும் தாங்கள் கொன்ற மிருகத்தின் மாமிசத்தையும் மனிதர்கள் சாப்பிட்டார்கள். ரொட்டியாவது அல்லது சோருவது அவர்களுக்குத் தெரியாது. ஏனென்ருல் வயலில் ஒருவிதமான பயிரையும் அவர்கள் பயிர் செய்யவில்லை. அவர்களுக்குச் சமைக்கவும் தெரியாதிருந்தது. ஒரு சமயம் மாமிசத்தை மாத்திரம் எரிந்து கொண்டிருந்த பெரிய நெருப்பில் அவர்கள் வாட்டியிருக்கலாம். சமைக்கப் பாத்திரங்களாவது சட்டிகளாவது தட்டுக்களாவது அவர்களிடத்தில் இருக்கவில்லை.

ஆனல் ஓர் அதிசயம்: இந்த நாகரிகமற்ற காட்டு மனிதர்களுக்குப் படம் வரையத் தெரிந்திருந்தது. ஆனல் காகிதத்தாள்களாவது எழுதுகோலாவது மைதீட்டும் கருவியாவது அக்காலத்தில் இருக்கவில்லை. கல் ஊசிகளும் கூர்மையான கருவிகளுமே அவர்களிடம் இருந்தன. இவற்றைக்கொண்டு குகைகளின் சுவர்களில் அவர்கள் மிருகங்களின் உருவங்களைக் கீறி வரைந்தார்கள்.

அவர்கள் எழுதியுள்ள சித்திரங்களிற் சில மிகவும் நன்ருயிருக்கின்றன. ஆனுல் அவைகளெல்லாம் பக்கப் பார்வைப் படங்கள் (Profiles). பக்கப் பார்வைப் படங்களை வரைவது எளிது என்று உனக்குத் தெரியும். சிறு குழந்தைகள் அம்மாதிரிப் படங்களை எழுதுவதை நீ பார்த்திருக்கிருய். படங்கள் எழுதும்போது குகைகள் இருட்டாய் இருந்திருக்கும். அப்போது ஏதாவது விளக்கை அவர்கள் உபயோகித்திருக்க வேண்டும்.

இம்மனிதர்கள் கல்லினுல் செய்த கருவிகளைக்கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்ததால் அவர்கள் காலத்திற்குப் பழைய **கற்காலம்** (Palaeolithic Age) என்று பெயர். மனிதர்கள் தங்கள் ஆயுதங்களையெல்லாம் கல்லினுலேயே செய்துகொண்டார்களாதலால் அக்காலத்திற்குக் கற்காலம் என்று பெயர். உலோகங்களின் உபயோகம் அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது. இக்காலத்தில் நம் சாமான்களெல்லாம் உலோகங்களினுலேயே, சாதாரணமாய் இரும்பினுலேயே செய்யப்படுகின்றன. அக்காலத்தில் இரும்பாவது வெண்கலமாவது ஜனங்களுக்குத் தெரியாது. ஆகவே, வேலை செய்வதற்கு மிகவும் கடினமான கல்லைத்தான் அவர்கள் உபயோகித்தார்கள்.

கற்காலம் முடிவிற்கு வருமுன் உலகத்தின் சீதோஷ்ண நிலைமையானது பெரிதும் மாறி,

வெப்பம் அதிகரித்தது. உறைபனி மெள்ள மெள்ள மறைந்து வட துருவத்தில் மாத்திரம் காணப்பட்டது. மத்திய ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் பெரிய காடுகள் உண்டாயின. இக்காடுகளில் ஒரு புது ஜாதி மனிதர் வசித்ததாகத் தெரிகிறது. நாம் படித்த பழைய கற்கால மனிதர்களைவிட இவர்கள் பல வகையிலும் அறிவுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். எனினும் இவர்களுங்கூடக் கல்லினுலேயேதான் தமக்கு வேண்டிய கருவிகளைச் செய்து கொண்டனர். இவர்கள் பழைய கற்காலத்து ஜனங்களைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் இவர்கள் வசித்துவந்த காலத்தைப் பின்கற்காலம் அல்லது புதிய கற்காலம் (Neolithic) என்று சொல்லுகிருர்கள்.

புதிய கற்காலத்து மனிதர்களின் வாழ்க்கையைச் சோதிக்கும்போது அவர்கள் அதிக முன்னேற்றத்தை அடைந்திருந்ததாகத் தெரிகிறது. மனிதனுக்குப் பகுத்தறிவு இருப்பதால் அவன் மிருகங்களைக் காட்டிலும் பல துறைகளில் வேகமாக மேன்மை அடைந்திருக்கிருன். புதிய கற்கால மனிதர்கள் பயிர் செய்யும் ஓர் அதிசயத்தைக் கண்டுபிடித்தார்கள். பூமியை உழுது தங்களுக்கு வேண்டிய ஆகாரப் பொருள்களைப் பயிர் செய்தார்கள். அதனுல் அவர்களுக்கு ஒரு பெரிய காரியம் அகப்பட்டது. வேண்டுமளவும் ஆகாரம் அவர்களுக்கு எளிதில்

கிடைத்தது. எப்போதும் மிருகங்களை வேட்டையாடி அவற்றின் மாமிசத்தையே சாப்பிடும் கஷ்டமும் அவசியமும் ஒருவாறு குறைந்தது. இதனால் அவர்களுக்கு அதிக ஓய்வு நேரம் கிடைத்தது. அந்த ஓய்வு நேரத்தில் பல விஷயங்களைப் பற்றி ஆலோசிக்கவும் தம் கையையும் மூளையையும் உபயோகிக்கவும் சௌகரியம் ஏற்பட்டது. அவர்களுக்கு ஓய்வு நேரம் கிடைத்ததால் அதை, புத்தம் புதிய விஷயங்களையும் முறைகளையும் ஆலோசிப்பதிலும், தங்கள் வாழ்க்கை முறையைச் சீர்படுத்திக்கொள்வதிலும், தங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை அமைத்துக் கொள்வதிலும் கழித்தார்கள். மண்ணினால் சட்டிகள் செய்யப் பழகினார்கள். அதில் சமைத்தார்கள். தங்கள் கல் ஆயுதங்களை இன்னும் சிறப்பாகச் செய்து அவற்றிற்கு அழகான மெருகேற்றினார்கள். மாடு, நாய், செம்மறியாடு, வெள்ளாடு இவற்றைப் பிடித்து மெள்ள மெள்ளப் பழக்கினார்கள்; நெய்யவும் கற்றுக்கொண்டார்கள்.

வீடுகளிலாவது குடிசைகளிலாவது அவர்கள் வசித்தார்கள். துஷ்டமிருகங்களும் மற்றைய மனிதர்களும் தங்களை வந்து தாக்காமல் இருப்பதற்காக, ஏரிகளுக்கு நடுவில் தங்கள் வீடுகளைக் கட்டிக் கொண்டனர். இக்காரணத்தைக் கொண்டு அவர்களை ஏரிவாசிகளென்று சொல்லுகிறார்கள்.

அவர்களைப்பற்றி இவையெல்லாம் நமக்கு எப்படித் தெரிகிறதென்று நீ ஆச்சரியப்படலாம். அவர்களோ புஸ்தகங்கள் எழுதி வைக்கவில்லை. ஆனால் அம்மனிதர்களின் வரலாற்றை நாம் ஒரு பெரிய புஸ்தகத்திலிருந்து படிக்கிறோம். அதைப் பற்றி முன்னமேயே உனக்குச் சொல்லியிருக்கிறேன். அதுதான் இயற்கையென்னும் புஸ்தகம். அதைப் படிப்பது எளிதல்ல. அதற்கு அதிகப் பொறுமை தேவை. அநேகர் தங்கள் வாழ்நாள் முழுவதையும் அந்த இயற்கைப் புஸ்தகத்தை வாசிப்பதில் கழித்துப் பல கற்படிபொருள்களை யும் அழிந்துபோன பண்டைக்காலப் பண்டங்களின் துண்டுகளையும் சேகரித்து வைப்பதில் செலவழித்திருக்கிறார்கள். இக்கற்படி பொருள்களை யெல்லாம் சேகரித்துக் காட்சிச்சாலையில் வைத்திருக்கிறார்கள். புதுக் கற்காலத்து மனிதர் செய்த மெருகு கொடுத்த கற்கோடரி, சட்டிகள், கல் அம்புகள், ஊசிகள் போன்ற பலவற்றை நாம் அங்கே பார்க்கலாம். அவைகளில் பலவற்றை நீ பார்த்திருக்கிறாய். ஆனால் ஒருகால் நீ அவற்றை மறந்திருக்கலாம். நீ மறுபடியும் அவற்றைப் பார்த்தால் முன்னிலும் நன்றாக அவற்றைப்பற்றி அறிந்து கொள்வாய். ஜெனிவா காட்சிச் சாலையில், ஏரி நடுவே கட்டப்பட்ட வீட்டின் அழகிய சிறு மாதிரிக் கட்டிடம் ஒன்று இருந்தது. எனக்கு ஞாபகம் வருகிறது. ஏரியின் நடுவே மரக் கால்களை நாட்டி அவற்றின் குறுக்கே

மரத்தினுல் மேடை செய்து அதன்மீது வீடு கட்டப்பட்டிருக்கிறது. அந்த வீட்டிற்குப் போக ஏரியின் கரையிலிருந்து ஒரு பாலமும் போடப்பட்டிருக்கிறது.

புதிய கற் காலத்து மனிதர்கள் மிருகங்களின் தோலேயும் சில சமயங்களில் சணல்நாரினுல் செய்த கரடு முரடான துணியையும் உடுத்துக் கொண்டார்கள். சணல் ஒரு செடி. அதன் நாரிலிருந்து துணி நெய்யலாம். அதினின்றும் இப்போது லினன் (Linen) என்ற மிருதுவான துணி நெய்யப்படுகிறது. ஆனுல் அக்காலத்தில் சணலினுல் செய்த துணி மிகவும் கரடு முரடாயிருந்திருக்கும்.

அம்மனிதர்கள் முன்னேற்றமடைந்து வந்தார்கள். தாமிரத்திலும் வெண்கலத்திலும் கருவிகள் செய்ய ஆரம்பித்தனர். தாமிரமும் தகரமும் சேர்ந்தால் அது வெண்கலமாகிறது. வெண்கலம் மேற்கூறிய இரண்டைக் காட்டிலும் உறுதியானது. அவர்கள் தங்கத்தையும் உபயோகித்தார்கள். வெகு டம்பமாய் அதில் ஆபரணங்கள் செய்து கொண்டார்கள். அம்மனிதர்கள் சுமார் 10,000 வருஷங்களுக்கு முன்னர் வசித்திருக்கவேண்டும். ஆனுல் அவர்கள் வசித்த காலத்தைத் தீர்மானமாகத் தேதி வருஷங்களுடன் சொல்லமுடியாது. இதெல்லாம் ஏறக்குறைய உத்தேசத்தின்பேரில்தான் சொல்ல முடியும். இதுவரை நாம் கோடிக்கணக்கில்

வருஷங்களைப்பற்றிப் பேசிவந்தோம். இப்போது நாம் மெள்ள மெள்ள நமது காலத்திற்கு ஸமீப மாக வந்துகொண்டிருக்கிறோம். புதிய கற் காலத்து மனிதனுக்கும் இந்தக் காலத்து மனி தனுக்கும் நடுவில் ஒரு விதமான பிளவாவது, அல்லது திடீரென்று ஒரு மாறுதலாவது ஏற்பட வில்லை. இருந்தாலும் நாம் அவர்களைக் காட்டிலும் முற்றும் மாறுனவர்கள். மாறுதல்களெல்லாம் இயற்கையின் போக்கை ஒட்டி மெள்ள மெள்ள ஏற்பட்டன. பல இனங்கள் (Races) உண்டாயின. ஒவ்வோர் இனத்தினரும் தம் தம் இஷ்டம்போல் நடந்து தமக்கு ஏற்றபடி வாழ்ந்து வந்தனர். சீதோஷ்ண நிலைமை உலகத்தின் பல பாகங்களில் வெவ்வேறுவிதமாக இருப்பதால் ஜனங்கள் அதற்கு ஏற்றவாறு தம் வாழ்வை அமைத்துக் கொண்டார்கள். அதனுல் அவர் களுக்கும் மற்றவர்களுக்கும் வித்தியாசங்கள் ஏற்பட்டன. இதைப்பற்றிப் பிறகு பேசுவோம்.

இன்றைக்கு இன்னும் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். இந்தப் புதிய கற்காலத்தின் கடைசியில் மனிதனுக்கு ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. அந்தக் காலத்தில் மத்தியதரைக் கடல் இருக்கவில்லையென்று நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். இப்போது அது இருக்கும் இடத்தில் அக்காலத்தில் பல ஏரிகள் இருந்தன. அவற்றிலே நடுவில் மனிதர் வசித்துவந்தனர். திடீரென்று ஐரோப்பாவுக்கும் ஆப்பிரிகா

வுக்கும் மத்தியில் ஜிப்ரால்டருக்குச் சமீபத்தில் பூமி கரைந்துபோக, அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலிருந்து ஜலம் மத்தியதரைப் பள்ளத்திற்கு ஓடி அதை நிரப்பியது. ஜலமானது அதிக நாள் வரையில் அதில் வந்து விழுந்துகொண்டிருந்தது. கொஞ்சங் கொஞ்சமாக நீர் எங்கும் பரவியது. ஏரிகளுக்குச் சமீபத்தில் வசித்துவந்த ஆண்களும் பெண்களும் கணக்கில்லாமல் நீரில் மூழ்கி இறந்திருக்கவேண்டும். அவர்களுக்கு அதனின்றும் தப்பியோட வழி இல்லாமல் இருந்தது. சுற்றிலும் நூற்றுக்கணக்கான மைல் தூரத்துக்கும் தண்ணீர் சூழ்ந்துகொண்டிருந்தது. இவ்விதமாக அட்லாண்டிக் மஹா சமுத்திரத்திலிருந்து நீர் வந்து விழுந்துகொண்டே இருந்தது. மத்தியதரைப் பள்ளம் முழுவதும் நிறைந்து அது மத்தியதரைக் கடலாக மாறியது.

மஹாப்ரளயம் என்பதைப்பற்றி நீ கேள்விப் பட்டிருப்பாய். கிறிஸ்தவர்களின் வேத புஸ்தகமான விவிலிய (Bible) நூலில் இதைப்பற்றிச் சொல்லப்படுகிறது. நம் ஸம்ஸ்கிருதப் புஸ்தகங்களில் பல பிரளயங்கள் கூறப்படுகின்றன. இவற்றில் கூறப்படும் பிரளயமானது மத்தியதரைக் கடலில் ஏற்பட்ட பிரளயமாயிருக்கலாம். இப்பெரிய வெள்ளப்பெருக்கிலிருந்து உயிர்தப்பிய சிலர், இவ்வெள்ளப் பெருக்கைப் பற்றியும் அதனால் உண்டான சேதத்தைப்பற்றியும் தங்கள் குழந்தை

களுக்குக் கதை கதையாகச் சொல்லியிருப்பார்கள். அந்தக் குழந்தைகள் அந்தக் கதைகளையே மற்றவர்களுக்குச் சொல்ல, அவை கர்ண பரம்பரையாக நமக்கு வந்திருக்கின்றன.

## 8

## பல இனங்கள் உண்டான விதம்

ஏரிகளின் நடுவில் வீடு கட்டி வசித்துவந்த புதிய கற்கால மனிதர்களைப்பற்றிச் சென்ற கடிதத்தில் எழுதினேன். அவர்கள் பல துறைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தார்கள். விவசாயம் செய்யக் கற்றுக்கொண்டார்கள்; சமைக்கக் கற்றுக்கொண்டார்கள்; தங்கள் உபயோகத்திற்காக மிருகங்களையும் பழக்கி வளர்த்தார்கள். இவையெல்லாம் பல ஆயிரம் வருஷங்களுக்கு முன் நடந்தவை. ஆகையால் அவர்களைப் பற்றி நாம் அதிகமாக ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. ஆனால் தற்காலத்தில் இவ்வுலகில் வசிக்கும் பல ஜாதி யாரும் இப்புதிய கற்கால மனிதர்களின் சந்ததி களாகத்தான் இருக்கவேண்டும். இப்போது இந்த உலகில் வெள்ளை மனிதர், மஞ்சள் மனிதர், பழுப்பு மனிதர், கறுப்பு மனிதர் என்பவர் களைக் காண்கிறோம். இது உனக்குத் தெரியும்.

ஆனால் உலகிலுள்ள எல்லா மனிதர்களையும் மேற்கூறிய நான்கு இனங்களுக்குள் அடக்கித் தீர்மானமாக வகுக்க முடியாது. நாளடைவில்

ஓர் இனம் மற்ருேர் இனத்தோடு கலந்துவிட்டது. அவர்களில் அநேகரைப் பற்றி அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வது கஷ்டம். விஞ்ஞான சாஸ்திரிகள், மனிதர்களின் மண்டையை அளந்து பார்த்து அதினின்றும் அவன் எந்த இனத்தைச் சார்ந்தவன் என்பதைக் கண்டுபிடிக்கக் கூடும். இதைக் கண்டுபிடிக்க வேறு வகைகளும் உண்டு.

மேற்கூறிய பலவகை இனங்களெல்லாம் எப்படி உண்டாயின? இவர்களெல்லாம் ஆதியில் ஒருவருடைய சந்ததிகளாயிருந்தால் இப்போது அவர்கள் ஒருவருக்கொருவர் ஏன் இப்படி வித்தியாசப்படுகிருர்கள்? ஜர்மனி தேசத்தவன் ஒருவனுக்கும் நீக்ரோவுக்கும் வித்தியாசம் உண்டு என்பது உனக்குத் தெரியும். ஒருவன் வெள்ளை நிறமானவன்; மற்றவன் கறுப்பு. ஜர்மனி தேசத்தவனின் தலைமயிர் செம்பட்டை நிறமானது, நீளமுள்ளது. நீக்ரோவின் தலைமயிர் கறுப்பு, குட்டையானது, சுருட்டை. ஒரு சீன தேசத்தவனே இவ்விருவர்களையும்விட வித்தியாசமுள்ளவன். இவ்வித்தியாசங்கள் எல்லாம் எங்ஙனம் ஏற்பட்டன என்று சொல்வது கஷ்டம். ஆனல் இவ்வித்தியாசங்களின் காரணங்களிற் சிலவற்றை நாம் அறியலாம். மிருகங்கள் எப்படித் தாங்கள் வசிக்கும் சுற்றுப் பக்கத்திற்கேற்றபடி தங்களது வாழ்க்கையை அமைத்துக்கொண்டனவென்று முன்னமேயே

சொல்லியிருக்கிறேன். ஜர்மனி தேசத்தவனும் நீக்ரோவும் தாங்கள் ஒவ்வொருவரும் வெவ் வேறு இனத்தார்களின் சந்ததிகள் என்று இப் போது சொல்லிக் கொள்ளலாம். ஆனால் ஏதா வது ஒரு காலத்தில் அவர்களெல்லோரும் ஒரே இனத்தைச்சார்ந்த மனிதனிடத்திலிருந்துதான் உற்பத்தியாயிருக்கவேண்டும். அவர்களுக்குள் உள்ள வித்தியாசங்கள் எல்லாம் அவர்கள் தங்கள் சுற்றுப்பக்கத்திற்கு ஏற்றவாறு தம்மை அமைத் துக் கொண்டதால்தான் ஏற்பட்டிருக்க வேண் டும். மிருகங்களைப் போலவே அவர்களும் எளி தில் தங்கள் சுற்றுப்பக்கத்திற்கு ஏற்றவாறு நடந்து கொண்டிருக்கவேண்டும்.

உதாரணமாக, குளிர் மிகுந்ததும் பனி நிறைந்ததுமான வடதுருவத்தில் வசிக்கும் ஒரு மனிதனுக்குக் குளிரைத் தாங்கும் சக்தி ஏற்படு கிறது. எஸ்கிமோக்கள் என்பவர்கள் வடதுரு வத்தில் உறைபனியில் வசித்துவருகிறார்கள். அவர்கள் எவ்வளவு குளிராயிருந்தாலும் அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி யுடையவர்கள். நம்முடைய நாட்டைப்போன்ற வெப்பம் மிகுந்த ஒரு தேசத்திற்கு அவர்களைக் கூட்டிவந்தால் அவர்கள் ஒரு வேளை இறந்து போவார்கள். உலகத்தின் மற்றப் பாகங்களிலிருந்து அவர்கள் பிரிந்திருப்பதாலும் கடினமாக உழைத்து வாழ வேண்டியிருப்பதாலும், மற்ற ஜனங்கள் பல விஷயங்களை அறிந்திருப்பதுபோல அவர்கள்

அறிந்து கொள்ளவில்லை. ஆப்பிரிகாவில் உள்ள ஜனங்கள் வெப்பம் மிகுந்த பூமத்தியரேகைக்குச் சமீபத்தில் இருக்கிறார்கள். அந்த வெப்பமான தேசத்தில் வசிப்பது அவர்களுக்குப் பழகிப் போய்விட்டது. சூரியனின் கொடிய வெப்பத்தினால் அவர்களது நிறமும் கறுத்துப் போய் விட்டது. நீ வெயிலில் சமுத்திரக் கரையிலாவது வேறு எந்த இடத்திலாவது அதிகமாகக் காலங் கழித்தால் உன் தோல் கன்றிப்போகிறது, அல்லது கறுத்துப் போகிறது. வெயிலில் சில வாரங்கள் இருந்தாலே உன் நிறம் கறுத்துப் போனால் எப்பொழுதுமே வெயிலில் வசிப்பவர்கள் கன்னங்கறேலென்று இருப்பதில் என்ன அதிசயம்? அதேமாதிரி பல நூற்றாண்டுகளாக ஜனங்கள் வெப்பம் மிகுந்த நாடுகளில் வசித்தால் தகப்பன்மார்களும் அவர்கள் குழந்தைகளும் அக்குழந்தைகளின் குழந்தைகளும் அவர்களைப் போன்ற மற்றவர்களும் நாளுக்கு நாள் கறுப்பு நிறமுடையவர்களாகிக் கடைசியாக அதிகக் கறுப்பு நிறத்தை அடைகிறார்கள். உச்சிவேளையில் நல்ல வெயிலில் தோட்டத்தில் வேலை செய்யும் ஓர் இந்தியக் குடியானவனை நீ பார்த்திருக்கிறாய். அவன் மிகவும் ஏழை. துணிக்காக அவன் அதிகப் பணம் செலவழிக்க முடியாது. ஆகையால்தான் அவன் ஒரு சிறு துணியை மாத்திரம் அணிந்து கொண்டிருக்கிறான். அவன் உடம்பு முழுதும் வெயிலில் காய்கிறது. அவனுடைய வாழ்வு

முழுதும் இப்படியே கழிகின்றது. அவன் கறுப்பாயிருப்பதில் என்ன அதிசயம்?

ஆகவே, ஜனங்கள் வசிக்கும் தேசத்தின் சீதோஷ்ண நிலைமைதான் ஜனங்களின் நிறத்திற்குக் காரணம். இது ஒரு மனிதனுடைய மதிப்பு, நல்ல குணம் அல்லது அழகு இவற்றைப் பொறுத்ததன்று. ஒரு வெள்ளைக்காரன் அதிக நாள் ஓர் உஷ்ணதேசத்தில் வசித்தானேயானால், அவன் சூரியனுக்கும் வெப்பத்திற்கும் பயந்து விலாமிச்சம் வேரினால் செய்த தட்டி மறைவில் பங்கா போட்டுக்கொண்டு காலங் கழித்தாலொழிய, அவனும் கறுத்துப் போவது நிச்சயம். நாமெல்லாம் காஷ்மீரத்தைச் சேர்ந்தவர்கள் என்று உனக்குத் தெரியும். சுமார் 200 வருஷங்களுக்கு முன்பு நம் முன்னோர் காஷ்மீரத்தில் வசித்து வந்தார்கள். காஷ்மீரத்தில், குடியானவனும் தொழிலாளியும் எல்லோருமே மிகவும் சிவப்பான நிறமுடையவர்கள் என்பது உனக்குத் தெரியும். இதற்குக் காரணம் காஷ்மீர தேசம் குளிர் தேசம். இதே காஷ்மீர் தேசத்து ஜனங்கள் இந்தியாவின் உஷ்ணபாகங்களுக்குச் சென்றால், சில தலைமுறைகளுக்குப் பின்பு கறுத்துப் போகின்றனர். நம் காஷ்மீர் தேசத்து நண்பர்களில் அநேகர் மிகவும் சிவப்பு நிறமுடையவர்கள். சிலர் நல்ல கறுப்பு நிறமுடையவர்களாக இருக்கின்றனர். காஷ்மீர் தேசத்தாரின்குடும்பம் ஒன்று இந்தியாவில் அதிக நாள் வசித்திருந்தால்

அக்குடும்பம் கட்டாயமாய்க் கறுப்பாய்த்தான் இருக்கும்.

சீதோஷ்ண நிலைமையேதான் நிறத்திற்குக் காரணம். சிலர், உஷ்ணப்பிரதேசத்தில் வசித்தாலும், வெளியில் போய் வேலை செய்வதில்லை. பெரிய வீடுகளிலே வசித்துத் தங்கள் உடம்பையும் நிறத்தையும் மேனியையும் பாதுகாத்துக் கொள்கிறார்கள். அது வாஸ்தவந்தான். ஏனென்றால் அவர்களுக்குப் பணம் இருக்கிறது. இவ்விதமாகச் செல்வம் படைத்த ஒரு குடும்பத்தார் பல தலைமுறை உஷ்ணப்பிரதேசத்தில் வசித்திருந்தாலும் அந்த உஷ்ணம் அவர்களின் நிறத்தை மாற்றாது. ஆனால், தானாக உழைக்காமல் பிறருடைய உழைப்பினால் பிழைப்பது மெச்சத் தகுந்ததல்ல.

இந்தியாவில், வடக்கே காஷ்மீரத்திலும் பஞ்சாபிலும் ஜனங்கள் சாதாரணமாகச் சிவப்பு நிறமுள்ளவர்களாக இருக்கின்றனர். தெற்கே போகப் போக அவர்களின் நிறம் கறுப்பாயிருக்கிறது. சென்னையிலும் இலங்கையிலும் உள்ள ஜனங்கள் கறுப்பு. இதற்குக் காரணம் சீதோஷ்ண நிலைமையென்று சொல்வாய். நீ தெற்கே போகப் போக பூமத்திய ரேகைக்குச் சமீபத்தில் வருகிறாய். அங்கே வெப்பம் அதிகம். இது முற்றும் உண்மையே. இந்தியாவில் பல பாகங்களில் ஜனங்கள் நிறத்தில் மாறுபடுவதற்கு இதுதான் காரணம். இந்தியாவுக்கு முதல்

முதலில் வந்த சில இனத்தாருக்குள் இருந்த சில மாறுபாடுகளும் நாம் இப்போது காணும் வித்தியாசங்களுக்கு ஒரு காரணமாகும். அதைப் பற்றிப் பிறகு பார்ப்போம். ஆதிகாலத்தில் இந்தியாவிற்குப் பல இனத்தினர் வந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அநேக நாட்கள்வரையில் ஒருவரோடும் கலவாமல் விலகியிருந்தார்களெனினும் மற்றவர்களோடு கலந்து போகாமல் இருக்க முடியவில்லை. இந்தக் காலத்தில் ஓர் இந்தியன் இந்த இனத்தைத்தான் சேர்ந்தவன் என்று சொல்வது மிகவும் கடினம்.

௭

## இனங்களும் மனித பாஷைகளும்

இந்த உலகில் மனிதன் முதலில் எந்த இடத்தில் பிறந்தான், எந்த இடத்தில் வசித்தான் என்பவற்றை நாம் சொல்ல முடியாது. ஏறக்குறைய ஒரே சமயத்தில் உலகத்தின் பல இடங்களிலும் மனிதர்கள் ஒரு சமயம் உண்டாயிருக்கலாம். பனியுகத்தில் பெரிய உறைபனி கரைந்து திரும்பி வடக்கே சென்ற போது ஜனங்கள் அப்படி ஏற்பட்ட உஷ்ணப் பிரதேசங்களில் வசித்திருக்கலாம். உறைபனி வடக்கு நோக்கிச் சென்றபோது ஸைபீரியாவில் தற்காலத்திலுள்ள மரங்களில்லாத சமவெளிகளைப் போன்ற (tundras) பரந்த சாகுபடி செய்யமுடியாத சமவெளிகள் (steppes) இருந்திருக்கவேண்டும். பிறகு இவைகளெல்லாம் புல் தரைகளாயிருக்க வேண்டும். தங்கள் ஆடுமாடுகளின் தீனிக்குப் புல்லைத் தேடி மனிதர்கள் இவ்விடங்களில் அலைந்து திரிந்திருக்க வேண்டும். இவர்கள் எப்போதும் ஒரே இடத்தில் குடியிருப்பவர்கள் அல்லர்; ஊரூராய்ப் போய்க்கொண்டிருப்பார்கள். அதனால் இவர்களை நாடோடிகள்

என்று சொல்லுகிறார்கள். லம்பாடிகள் என்ற ஜாதியாரைப் போன்ற நாடோடி வகுப்பினர் இந்தியாவில் இருப்பதுபோலப் பல தேசங்களி லும் இருக்கின்றனர்.

முதல் முதலில் ஜனங்கள் பெரிய நதிக் கரைகளின் ஓரமாய்க் குடியேறியிருக்க வேண்டும். நதிக்கரையை அடுத்த பூமிகள் எப்போதும் செழிப்பானவை; பயிர் செய்வதற்கு ஏற்றவை. நீர்வளம் அதிகமாக இருந்ததனால் உண வுக்கு வேண்டிய தானியங்களைப் பயிர் செய்வது அனுகூலமாயிருந்தது. அதனால்தான் இந்தி யாவில் கங்கை சிந்து நதிக்கரைகளிலும், மெஸொபொடேமியாவில் டைக்ரீஸ் யூப்ரடீஸ் கரைகளிலும், எகிப்து தேசத்தில் நீல நதிக் கரையோரத்திலும் சீனாவிலும் ஜனங்கள் குடி யேறினார்கள்.

நமக்குத் தெரிந்தவரையில் இந்தியாவில் முதல் முதலில் வசித்து வந்தவர்கள் திராவிடர் கள். பிற்காலத்தில் ஆரியர்களும், கிழக்கேயிருந்து மங்கோலியர்களும் வந்தார்கள். இப்பொழுதுங் கூடத் தமிழ் நாட்டில் வசிப்போரில் பெரும்பாலர் திராவிடர்களின் சந்ததிகளேயாவர். அவர்கள் வடக்கத்தியவர்களைவிட நிறத்தில் கறுப்பு. அதற்குக் காரணம் திராவிடர்கள் இந்தியாவில் அதிக காலமாக வசித்திருக்கவேண்டும். திராவிடர்கள் மிகவும் முன்னேற்றமடைந்திருந் தார்கள். அவர்கள் தங்கள் பாஷையையே பேசி

வந்தார்கள்; பிற தேசத்தாரோடு ஏராளமாக வியாபாரம் செய்து வந்தார்கள். நான் அவசரப் பட்டுப் பல விஷயங்களை முன்னேயே சொல்லு கிறேன்.

பண்டைக் காலத்தில் மத்தியமேற்கு ஆசியா விலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஒரு புதிய ஜாதியார் வளர்ச்சியடைந்து வந்தனர். இவர் களைத்தான் ஆரியஜாதியினர் என்று சொல்லு கிறார்கள். ஸம்ஸ்கிருதத்தில் 'ஆர்ய' என்ற அதே வார்த்தை இருக்கிறது. அதற்குக் கௌரவ முள்ளவன் அல்லது மேற்குலத்திற் பிறந்த வன் என்பது பொருள். ஆரியர்கள் ஸம்ஸ் கிருதம் பேசிவந்ததால், தாங்கள் கௌரவ முள்ளவர்கள், மேற்குலத்திற் பிறந்தவர்கள் என்று எண்ணினார்கள். தற்காலத்தவர்களைப் போல அதிகக் கர்வம் படைத்திருந்தனர். இந்த உலகத்திலேயே தன்னைக் காட்டிலும் மேலானவன் ஒருவனும் இல்லையென்று ஓர் ஆங்கி லேயன் எண்ணுகிறான். அம்மாதிரியே ஒரு பிரான்சு தேசத்தவனும் தானும் தன் தேசத் தாருமேதான் உலகில் மேலானவர்களென்று எண்ணுகிறான். அம்மாதிரியே ஜர்மனிதேசத் தவர்களும் அமெரிக்கா தேசத்தவர்களும், மற்ற வர்களும் எண்ணுகிறார்கள்.

இந்த ஆரிய ஜாதியினர் வட ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் இருந்த விசாலமான மேய்ச்சல் தரைகளில் அலைந்து திரிந்தார்கள். ஆனால் இவர்

களின் தொகை அதிகரிக்கவும் பருவகால மழையின்றி நாடு வறட்சியடையவும், புல் இல்லாமற் போகவும் இவர்களெல்லாருக்கும் உண்ணப் போதுமான உணவு கிடைப்பதரிதா யிற்று. ஆகவே உணவைத் தேடிப் பூமியின் மற்றைப் பாகங்களுக்குச் செல்ல வேண்டிய தாயிற்று. இவர்கள் ஐரோப்பா முழுதும் பரவிப் பிறகு, இந்தியா, பாரசீகம், மெஸொபொடே மியாவுக்கும் வந்து சேர்ந்தார்கள். ஆகவே, ஐரோப்பா, வட இந்தியா, பாரசீகம், மெஸொ பொடேமியா என்னும் இடங்களில் உள்ள எல்லா ஜனங்களும் தற்காலத்தில் ஒருவருக் கொருவர் மாறுபட்டவர்களாகக் காணப்பட் டாலும் உண்மையாகவே ஒரே வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; அதாவது ஆரியவர்க்கம். இது நடந்து வெகுகாலமாயிற்று. இதன் நடுவில் பல மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன. ஜாதிகளெல் லாம் ஒன்றேடொன்று கலந்துவிட்டன. ஆகவே உலகத்திலுள்ள ஜனங்களெல்லாரும், ஆதியில் ஆரிய வகுப்பிலிருந்தே உண்டானவர்கள்.

அடுத்த ஒரு பெருங் கூட்டத்தார், மங்கோ லியர்களாவார்கள். இவர்கள் கிழக்காசியாவில் சீனம், ஜப்பான், திபேத், சியாம், பர்மா தேசத்தில் பரவினர்கள். இவர்களை மஞ்சள் ஜாதியார் என்றும் கூப்பிடுவது வழக்கம். இவர்கள் கன்னத்தின் எலும்பு உயர்ந்தும் கண் குறுகியும் இருப்பதைப் பார்க்கலாம். ஆப்பிரிகாக்

கண்டத்தில் வசிப்பவர்களெல்லாம் நீக்ரோ ஜாதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் ஆரியர்களுமல்ல, மங்கோலியர்களுமல்ல; அவர்கள் நிறம் வெகு கறுப்பு.

அரேபியாவிலும் பாலஸ்தீனத்திலும் வசிக்கும் அராபியர்களும், யூதர்களும் மற்றொரு கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

பல்லாயிர வருஷங்களில் இந்த ஜாதிகளெல்லாம் பல்வேறு சிறிய சிறிய ஜாதிகளாகப் பிரிந்து வேறு ஜாதியுடன் கலந்துபோயின. ஆனால் இப்போது அவற்றையெல்லாம் குறித்து நாம் கவனிக்கவேண்டியதில்லை. பல ஜாதியார்களின் பாகுபாட்டையும் மாறுதல்களையும் அறிய முக்கியமானதும் ருசிகரமானதுமாகிய ஒரு வழியென்னவென்றால் அவரவர்களின் பாஷைகளை ஆராய்வதுதான். ஆதியில் ஒவ்வொரு ஜாதியாரும் ஒரு பாஷையைப் பேசிவந்தார்கள். நாளடைவில் இந்த ஒரு பாஷையிலிருந்து பல பாஷைகள் உண்டாயின. எனினும் இந்தப் பாஷைகளெல்லாம் ஒரே தாயின் வயிற்றிற் பிறந்தவை; ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. இவற்றிற் கெல்லாம் பொதுவான சில வார்த்தைகள் இவற்றுள் இருப்பதை நாம் காணலாம். இதிலிருந்து ஒரு பாஷைக்கும் மற்றொரு பாஷைக்கும் உள்ள சம்பந்தத்தை நாம் காண நேருகிறது.

ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் ஆரியர்கள் பரவியபோது அவர்களிடையே போக்குவரத்தும் சம்பந்தமும் இல்லாமற் போயிற்று. அந்நாட்களில் ரெயிலாவது, தந்தி தபால் வசதியாவது, புஸ்தகங்களாவது இருக்கவில்லை. ஆகவே ஒவ்வோர் ஆரியக் கூட்டமும் தன் பாஷையைத் தன் இஷ்டம் போல் அமைத்துப் பேசி வந்ததில், நாளடைவில் அக்கூட்டத்தார் பேசி வந்த பாஷையானது தாய்ப் பாஷையினின்றும் முற்றும் வேறுபாடடைந்ததுமல்லாமல், மற்ற ஆரியக் கூட்டத்தார் வேறிடங்களில் பேசிவந்த பாஷையினின்றும் வேறுபாடடைந்திருந்தது.

தற்காலத்தில் உலகில் ஜனங்கள் பல பாஷைகளைப் பேசுவதற்கு இதுதான் காரணம்.

இருந்தாலும், நாம் இப்பாஷைகளையெல்லாம் ஆராய்ந்தால், இப்பாஷைகள் அதிகமாயிருந்தாலும் இவைகளெல்லாம் சில மூல பாஷைகளினின்றும் உண்டான கிளைமொழிகள் என்பதை நாம் அறியலாம். உதாரணமாக, ஆரியர்கள் எங்கெங்கே சென்ருர்களோ அவ்விடத்திலெல்லாம் வழங்கிய மொழி ஆரிய மொழியே. ஸம்ஸ்கிருதமும் லத்தீனும் கிரீக்கும் ஆங்கிலமும், பிரென்சும் ஜர்மனும் இத்தாலிய மொழியும் மற்றும் பலவுமெல்லாம் ஒரு தாய் வழி வந்தவை. அவைகளெல்லாம் ஆரியக் குடும்பத்தைச் சார்ந்தவை. நம் இந்திய மொழிகளிலும் ஹிந்தி, உருது, வங்காளி, மராட்டி, குஜராத்தி

மொழிகள் எல்லாம் ஸம்ஸ்கிருதத்தினின்றும் உண்டானவை ஆகையால் மேற்கூறிய மொழிகளெல்லாம் ஆரியக் குடும்பத்தைச் சார்ந்தவை.

மற்றும் ஒரு மொழிக் கூட்டம் சீன பாஷையைச் சேர்ந்தது. சீன பாஷை, பர்மிய பாஷை, திபேத்திய பாஷை, சியாமிய பாஷை எல்லாம் சீனக் குடும்பத்தைச் சார்ந்தவை.

மூன்றாவது கூட்டம் செமிடிக்கூட்டத்தைச் சார்ந்தது. அராபி பாஷையும் யூதர்கள் பாஷையும் இக்கூட்டத்தைச் சேர்ந்தவை.

துருக்கி பாஷை, ஜப்பானிய பாஷையைப் போன்ற சில பாஷைகள் மேற் கூறிய கூட்டங்கள் மூன்றில், ஒன்றிலும் சேராதவை. அவைகளெல்லாம் அலாதியானவை.

தென்னிந்தியப் பாஷைகளான, தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்றவை மேற் கூறிய கூட்டங்கள் ஒன்றிலும் சேராதவை. இவைகளெல்லாம் திராவிடக் கூட்டத்தைச் சார்ந்தவை; மிகவும் பழமையானவை.

# 10

## பாஷைகளின் சம்பந்தம்

ஆரியர்கள் பல நாடுகளில் பரவியதையும், தங்கள் பாஷையைத் தாங்கள் குடியேறிய இடம் எதுவாயிருந்தாலும் சரி, அந்த இடத்தில் எப்படிப் பரப்பினார்கள் என்பதையும் நாம் அறிந்தோம். தேசங்களின் சீதோஷ்ண நிலைமையும் மற்றச் சௌகரியங்களும் தேசத்திற்குத் தேசம் மாறுபட்டிருந்ததால், நாளடைவில் அந்த அந்தத் தேசத்தில் குடியேறிய ஆரியக்கூட்டத்தினர், வேறு தேசத்தில் குடியேறிய ஆரியர்களைக் காட்டிலும் மாறுபாட்டை அடைந்தார்கள். ஒவ்வொரு கூட்டமும் அதனதன் இஷ்டம் போல் புதிய பழக்க வழக்கங்களைக் கைக்கொண்டு மாறிவந்தது. அக்காலத்தில் பிரயாணம் செய்வது மிகவும் கடினமாயிருந்ததால், ஒரு கூட்டத்தார், வேறு தேசங்களிலுள்ள மற்றக் கூட்டத்தாரைச் சந்திக்கமுடியாமல் இருந்தது. ஒவ்வொரு கூட்டம் மற்றக் கூட்டத்திலிருந்து அறவே பிரிந்து போயிற்று. ஒரு தேசத்திலுள்ளவர்கள் புதிதாக ஏதாவது அறிந்துகொண்டால் அதை மற்றத் தேசத்தில் உள்ளவர்களுக்குச் சொல்ல முடியாமல்

இருந்தது. ஆகவே பல மாறுபாடுகள் ஏற்பட்டன. சில தலைமுறைகளுக்குப் பின் ஓர் ஆரியக் குடும்பத்தார் பல கிளைகளாகப் பிரிந்து போயினர். தாங்கள் எல்லாரும் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்பதையும் மறந்தார்கள். அவர்கள் முதலில் பேசிய ஒரு பாஷையிலிருந்து பல பாஷைகள் உண்டாயின. அவற்றில் ஒவ்வொன்றும் மற்றப் பாஷையினின்றும் மாறுபட்டிருந்தது.

ஆனால், அவைகளெல்லாம் மாறுபட்டனவாகத் தோன்றினாலும், அவற்றிற்கெல்லாம் பொதுவான அநேக வார்த்தைகளும் பொருத்தங்களும் இருந்தன. இப்போதுங்கூட, பல்லாயிரம் வருஷங்களுக்குப்பின் இந்தப் பொது வார்த்தைகளை நாம் பல மொழிகளில் காணலாம். அவற்றினின்றும் ஒரு காலத்தில் இந்த மொழிகளெல்லாம் ஒன்றாக இருந்திருக்கவேண்டுமென்று நமக்குத் தெரிகிறது. ஆங்கில பிரெஞ்சுப் பாஷைகளில் அம்மாதிரிப் பல வார்த்தைகள் இருப்பது உனக்குத் தெரியும். மிகவும் பழக்கமுள்ளனவும் எளியனவுமான 'Father', 'Mother' என்ற வார்த்தைகளை எடுத்துக்கொள்வோம். ஹிந்தியிலும், ஸம்ஸ்கிருதத்திலும் அவ்வார்த்தைகளின் பிரதிபதங்கள், 'பிதா', 'மாதா' என்று உனக்குத் தெரியும்; லத்தீன் பாஷையில் 'பேடர்', 'மேடர்' என்றும், கிரீக்கில் 'பேடர்', 'பீடர்' என்றும் ஜர்மன் பாஷையில் 'வேடர்' (பாதர் என்று

உச்சரிக்கவேண்டும்) 'முத்தர்' என்றும், பிரெஞ்சில் 'பேரி', 'மேரி' என்றும், இதைப் போன்றே இன்னும் பல பாஷைகளிலும் சொல்லுகிறார்கள். இவைகளெல்லாம் ஏறக்குறைய ஒரே மாதிரி ஒலிக்கின்றனவல்லவா? இவைகளெல்லாம் அத்தான் அம்மான்சேய் போல் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவையென்பது தெரிகிறதல்லவா? ஒரு பாஷை மற்றப் பாஷைகளிலிருந்து பல வார்த்தைகளைக் கடன் வாங்கியிருக்கலாம். இம்மாதிரி, இங்கிலீஷிலிருந்து ஹிந்தி பல வார்த்தைகளைக் கடன் வாங்கியிருக்கிறது. அம்மாதிரியே இங்கிலீஷ் மொழியும் ஹிந்தியிலிருந்து பல வார்த்தைகளைக் கடன் வாங்கியிருக்கிறது. ஆனால் 'Father', 'Mother' என்ற வார்த்தைகளைக் கடன் வாங்கியிருக்க முடியாது. அவை புது வார்த்தைகளாக இருக்கமுடியாது. ஆரம்பத்திலேயே ஜனங்கள் ஒருவருக்கொருவர் பேசிக்கொண்ட காலத்தில் தாய் தகப்பன்மார்கள் இருந்தார்கள்; அவர்களைக் குறிக்க வார்த்தைகள் இருந்திருக்க வேண்டும். ஆகவே, இந்த இரண்டு வார்த்தைகளும் எல்லாப் பாஷைகளுக்கும் பொதுவானவையென்று தெரிகிறது. இவ்விரண்டு வார்த்தைகளும் ஒரே குடும்பத் தலைவனிடமிருந்தாவது அல்லது குடும்பத்திலிருந்தாவதுதான் வந்திருக்கவேண்டும். இதினின்றும், இக்காலத்தில் பல தூரதேசங்களில் உள்ள ஜனங்கள் வேறு பாஷையைப் பேசிவந்த

போதிலும், ஆதிகாலத்தில் ஒரே இடத்தில் வசித்து ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்திருக்கவேண்டுமென்பதை நாம் அறியலாம்.

மொழிகளை ஆராய்ச்சி செய்வது எவ்வளவு ருசிகரமான தொழில் என்பதும், அதினின்றும் நாம் எவ்வளவு விஷயங்களை அறிந்துகொள்கிறோம் என்பதும் இதனால் உனக்கு விளங்குகின்றன அல்லவா? மூன்று நான்கு பாஷைகள் நமக்குத் தெரிந்திருந்தால், இன்னும் அதிகமான பாஷைகளை நாம் எளிதில் கற்றுக்கொள்ளலாம்.

ஒருவரை விட்டு மற்றவர் பிரிந்து, வெகு தூரத்தில் பல தேசங்களில் தற்காலத்தில் வசிக்கும் நாமெல்லோரும் வெகு காலங்களுக்கு முன்பு ஒரே ஜனங்களாயிருந்தோம் என்பது உனக்குத் தெரியவரும். அக்காலத்திலிருந்து நாம் அதிகமாக மாறிவிட்டோம்; நமது பழைய உறவையும் நம்மில் பெரும்பாலோர் மறந்துவிட்டனர். ஒவ்வொரு தேசத்திலுள்ளவர்களும், தாங்களே மேலானவர், புத்திசாலிகள், மற்றவர்களெல்லாம் தங்களுக்கு ஒரு படி தாழ்மையானவர்களென்று நினைக்கிறார்கள். ஓர் ஆங்கிலேயன் தான் பிறந்த தேசமும், தன் ஜாதியும் மேலானவையென்றும், ஒரு பிரெஞ்சுக்காரன் தன் தேசத்தையும், அதைச் சார்ந்த யாவற்றையும் தவிர உலகில் மேலானது வேறு எதுவுமில்லை யென்றும் நினைக்கின்றனர். அம்

மாதிரியே ஒரு ஜர்மன் தேசத்தவனும் இத்தாலி தேசத்தவனும் நினைக்கிறார்கள். அங்ஙனமே, ஆயிரக்கணக்கான இந்தியர்களும், இந்தியா தேசம் பல துறைகளிலும் உலகில் நிகரற்றது என்று எண்ணுகிறார்கள். இதெல்லாம் வீண் கர்வம், அறியாமை. தம் தேசத்தைப்பற்றியும் தம்மைப்பற்றியும் புகழ்ந்து பேசுவது மானிடர் இயல்பு. உண்மையாகவே, கொஞ்சமேனும் நல்ல குணமும் கொஞ்சம் கெட்ட குணமும் இல்லாத மனிதன் இல்லவே இல்லை. அதே மாதிரி, சிறிது நல்ல அம்சமும் சிறிது கெட்ட அம்சமும் இல்லாத தேசமே இல்லை. நல்ல அம்சங்கள் எங்கே காணப்பட்டாலும் அவற்றை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்; தீய குணங்கள் காணப்படின் அவற்றை விலக்கவேண்டும். இந்த விஷயத்தில் உண்மையாகவே, நமது தேசமாகிய இந்தியாவைப்பற்றித்தான் நமக்கு அக்கறை அதிகம். நம் நாடு தற்காலத்தில் பல துறைகளிலும் தாழ்மையுற்றிருப்பது வருந்தத்தக்க விஷயம். ஜனங்களில் செம்பாதி வறுமைப் பிணியால் வருந்துகின்றனர். வாழ்க்கையில் அவர்களுக்கு ஒரு களிப்பும் உத்ஸாகமும் இல்லை. எவ்விதமாக அவர்களைச் சந்தோஷமுறச் செய்வது என்பதைக் கண்டுபிடிப்பது நமது கடமை. நம்மவருடைய பழக்க வழக்கங்களில் எவையெவை மேன்மையானவையோ அவற்றை நாம் வளர்க்கவேண்டும். எவையெவை தீயனவோ

அவற்றைத் தள்ளவேண்டும். அன்றியும், அன்னிய நாட்டாரிடத்து நாம் காணும் மேன்மையான பழக்க வழக்கங்களை நாம் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

நாம் இந்தியர்கள் என்ற காரணத்தால் நாம் இந்தியாவிலேயே வசித்து இந்தியாவின் முன்னேற்றத்திற்காக உழைக்கவேண்டும். எனினும் இவ்வுலகத்தின் பரந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை மறக்கக்கூடாது. வேறு நாடுகளில் வசிப்பவர்களெல்லாம், பார்க்கப்போனால் நம் நெருங்கிய உறவினர்கள். உலக ஜனங்கள் யாவரும் சந்தோஷமாகவும் திருப்தியாகவும் வாழ்ந்திருப்பார்களேயானால் அதனினும் உயரிய நிலைமை ஒன்றும் இல்லை. ஆகவே, ஜனங்களெல்லாரும் சந்தோஷமாக வசிப்பதற்கு இந்த உலகை ஓர் ஏற்ற வீடாகச் செய்யவேண்டியது நமது கடமை.

## 11

### நாகரிகம் என்றால் என்ன?

இந்தக் கடிதத்தில் பண்டைக் கால நாகரிகத்தைப்பற்றி நான் உனக்குச் சொல்லப் போகிறேன். அதற்கு முன்பாக, நாகரிகம் என்றால் என்ன என்பதைப்பற்றிச் சில விஷயங்களை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அகராதியைப் புரட்டிப் பார்த்தால், நாகரிகத்திற்கு, மேம்பாடு, பரிசுத்தம், தீய நடத்தை நீங்கிய நன்னடக்கை என்ற அர்த்தத்தைக் காணலாம். முக்கியமாக, நாகரிகமென்பது ஒரு சமூகத்தாரையாவது, அல்லது ஒரு ஜனக் கூட்டத்தாரையாவது குறிக்கும். மிருகங்களைவிட ஒரு வகையிலும் முன்னேற்றம் அடைந்திராத நாகரிகமற்ற ஜனங்களின் நிலைமையை அநாகரிகம் என்று சொல்லலாம். நாகரிகம் என்பது அதற்கு நேர் எதிரிடையானது. நாம் எவ்வளவுக் கெவ்வளவு அநாகரிகமான வழக்கங்களை விலக்குகிறோமோ, அவ்வளவுக்கவ்வளவு நாம் நாகரிகமுள்ளவர்களாகிறோம்.

ஒரு சமூகம் நாகரிகமானதா, அல்லது அநாகரிகமானதா என்பதையும், அதேமாதிரி ஒரு

மனிதன் நாகரிகமுள்ளவனா அல்லது அநாகரிக முள்ளவனா என்பதையும் நாம் எப்படிக் கண்டு பிடிப்பது? ஐரோப்பாவிலுள்ள பல தேசத் தவர்கள் தாம் நாகரிகமுள்ளவர்கள், ஆசியா தேசத்திலுள்ளவர்கள் முற்றும் அநாகரிகர்கள் என்று எண்ணுகிறார்கள். ஆசியா, ஆப்பிரிகாக் கண்டங்களில் உள்ளவர்களைவிட ஐரோப் பியர்கள் அதிகமான துணிகளை அணிவதுதானா இந்த வித்தியாசத்திற்குக் காரணம்? துணிகளைச் சீதோஷ்ண நிலைமைக்கு ஏற்றவாறு நாம் அணி கிறோம். குளிர் தேசத்தில் இருப்பவர்கள் உஷ்ண தேசத்தில் இருப்பவர்களைவிட அதிகமான துணிகளை அணிகின்றனர். அல்லது, துப்பாக்கி இல்லாதவனைவிடத் துப்பாக்கியுள்ள ஒருவன் பலசாலியென்றும் அல்லது அதிக நாகரிகம் படைத்தவனென்றும் நாம் எண்ணலாமா? அவன் அதிக நாகரிகம் படைத்தவனாக இருக் கட்டும், இல்லாமற் போகட்டும், எளியவ னொருவன் அவனை நோக்கி, "நீ நாகரிகமற்றவன்" என்று சொல்லமுடியாது; சொன்னால் குண்டுக்கு இரையாகவேண்டியதுதான்!

சில வருஷங்களுக்கு முன்பு ஒரு மஹா யுத்தம் நடந்தது உனக்குத் தெரியும். அந்த யுத்தத்தில் உலகத்திலுள்ள பெரும்பான்மையான தேசங்கள் கலந்துகொண்டன. ஒவ்வொரு தேசத்தாரும் எதிர்க் கக்ஷியில் உள்ளவர்களில் எவ்வளவு பேரைக் கொல்ல முடியுமோ அவ்

வளவு பேரையும் கொல்ல முயன்றனர். ஒரு இங்கிலீஷ்காரன் ஜர்மனிக்காரனைக் கொல்லப் பகீரதப் பிரயத்தனம் செய்தான்; அதேமாதிரி ஜர்மனிக்காரனும் பிரயத்தனம் செய்தான். கோடிக்கணக்கான ஜனங்கள் இந்த யுத்தத்தில் மாண்டுபோயினர். பல்லாயிரக்கணக்கானவர்கள் அங்கஹீனர்களாயினர். கண்ணிழந்த சிலர் குருடர்களாயினர்; மற்றும் சிலர் கைகால்களை இழந்து தவிக்கின்றனர். சண்டையில் அடிபட்ட அநேகரை நீ பிரான்சிலும் மற்ற இடங்களிலும் பார்த்திருப்பாய். பாரீ நகரத்தில் மெட்ரோ என்று பூமிக்கடியில் ஓடும் ரெயில்வண்டித் தொடரில் அவர்களுக்கென்று தனிமையான இடங்கள் இருக்கின்றன. ஜனங்கள் ஒருவர்க் கொருவர் இவ்விதம் கொல்வதும் சண்டைபிடித் துக்கொள்வதும் அதிக நாகரிகம் படைத்தவர் களுக்கும் பகுத்தறிவுள்ளவர்களுக்கும் ஏற்ற தென்று நீ நினைக்கிறாயா? தெருவில் இருவர் சண்டை செய்தால் போலீஸ்காரன் அவர்களை விலக்குகிறான்; வேடிக்கை பார்க்கும் வழிப் போக்கர்கள் அவர்கள் மதியீனத்தைக் கண்டு அவர்களை இகழ்கின்றனர். மிகப் பெரிய தேசங்க ளெல்லாம் ஒன்றோடொன்று சண்டை போட்டுக் கோடிக்கணக்கான ஜீவன்களைக் கொல்வது இன்னும் எவ்வளவு மதியீனமான காரியம்! நாகரிக வாசனையே இல்லாத இரண்டு காட்டு மிராண்டிகள் - நர மாமிசபக்ஷிணிகள் - காட்டில்

சண்டையிட்டுக் கொள்வதற்கும் இதற்கும் ஒருவித வித்தியாசமும் இல்லை. காட்டில் வசிப்பவர்களை நாகரிகமற்றவர்கள், முரட்டு ஜாதியார் என்று சொன்னால், இம்மாதிரி நடந்துகொள்ளும் தேசத்தார் அவர்களைக் காட்டிலும் இன்னும் எவ்வளவு மடங்கு நாகரிகமற்றவர்களாயும் எவ்வளவு மடங்கு முரட்டுச் சுபாவமுள்ளவர்களாயும் இருக்கவேண்டும்?

இவ்விதமாக, நாகரிகம் என்னும் விஷயத்தைப்பற்றி நன்கு ஆராய்ந்து பார்த்தால், மஹா யுத்தத்தில் சண்டை செய்து தங்கள் ஜனங்களை ஆயிரக்கணக்காக இழந்த இங்கிலாந்து, ஜர்மனி, பிரான்சு, இத்தாலி போன்ற பல தேசங்களெல்லாம் சிறிதும் நாகரிகமடைந்தவையென்று நீ சொல்லமாட்டாய். இருந்த போதிலும், இத்தேசங்களிலேயே பல சிறந்த பொருள்களும் சிறந்த மனிதர்களும் இருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது நாகரிகம் என்பது என்ன என்று அறிந்து கொள்வது அவ்வளவு எளிதான விஷயம் அல்லவென்று உனக்குத் தெரியும். உண்மையே; அது மிகவும் கடினமான விஷயந்தான். அழகிய கட்டிடங்களும், அழகிய புஸ்தகங்களும், சித்திரங்களும், வனப்பு வாய்ந்த எல்லாப் பொருள்களும் உண்மையாகவே நாகரிகத்தின் அறிகுறிகளாகும். இவற்றைக்காட்டிலும் நற்குண நற்செய்கை

வாய்ந்து சுயநலமற்றவனும் பிறர் நலத்திற்காக உழைப்பவனுயும் உள்ள சிறந்த மனிதனே உண்மையான நாகரிகத்தின் அடையாளம். தனித்து உழைப்பதைக்காட்டிலும் ஒன்று சேர்ந்து உழைப்பதே மேல். பொது ஜனங்களின் மேம்பாட்டிற்காக உழைப்பதினும் சிறந்ததும் மேன்மையானதுமான தொழில் வேறு எதுவும் இல்லை.

## 12

### குழுக்கள் ஏற்பட்ட வரலாறு

முதல் முதலில் உலகில் மனிதன் தோன்றிய போது அவன் எவ்வாறு பலவகையிலும் மிருகங்களை ஒத்து இருந்தானென்று நான் முன்னால் உனக்கு எழுதிய கடிதங்களில் சொல்லியிருக்கிறேன். பல்லாயிர வருஷங்களில் அவன் சிறிது சிறிதாக முன்னேற்றமடைந்து விருத்தியடைந்திருக்கிறான். தற்காலத்தில் மிருகங்கள் எப்படித் தன்னந்தனியாக வேட்டையாடுகின்றனவோ, அதே மாதிரி மனிதன் ஆதியில் செய்திருக்க வேண்டும். பிறகு, வேறு மனிதர்களுடன் சேர்ந்து கூட்டமாகச் செல்வதே மேலானதென்றும் அபாயமற்றதென்றும் உணர்ந்தான். அநேக மனிதர்கள் ஒன்றாய்க் கூடியிருந்தால் அவர்களுக்குப் பலம் அதிகம் ஏற்படும்; மிருகங்களாவது அல்லது அவர்களின் விரோதிகளாவது தாக்கினால் அச்சமயத்தில் அவர்கள் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடிகிறது. மிருகங்களுங்கூடத் தங்களுக்கு அபாயம் ஒன்றும் நேராமல் இருப்பதற்காகக் கூட்டங் கூட்டமாகச் செல்கின்றன. குரும்பாடு

களும் வெள்ளாடுகளும் மான்களும் யானைகளும் இவ்வண்ணம் கூட்டங் கூட்டமாகவே செல்கின்றன. இவைகளின் கூட்டங்கள் தூங்கும் போது இவற்றில் சில பிராணிகள் கண்விழித்துக் காவல் காக்கும். நீ ஓநாய் மந்தைகளைப் பற்றிய கதைகளை வாசித்திருப்பாய். ருஷ்யா தேசத்தில் குளிர் காலத்தில் ஓநாய்களெல்லாம் கூட்டங் கூட்டமாய்த் திரியும். இரை அகப்படாமல் பசியால் வருந்தும் இந்த ஓநாய்கள் மனிதர்களைத் தாக்குகின்றன. ஓர் ஓநாய் தனியாக ஒரு மனிதனை எப்போதும் தாக்காது. ஆனல் கூட்டமாகச் சேர்ந்து அவை ஒரு மனிதக் கூட்டத்தைத் தாக்கும் பலமுடையவை. அந்தச் சமயத்தில் மனிதர்கள் உயிர்தப்ப ஓடவேண்டியதுதான். இம்மாதிரி, அடிக்கடி, பனித் தரையில் 'ஸ்லெஜ்' என்ற வண்டியில் மனிதர்கள் போகும்போது, ஓநாய்கள் அவர்களைத் துரத்துவதும் மனிதர்கள் அவற்றிற்குத் தப்பியோடுவதும் வெகு சகஜம்.

அவ்வாறே பூர்விக மனிதர்கள் தங்கள் நாகரிக வாழ்க்கையை ஆரம்பித்தபோது கூட்டங் கூட்டங்களாக வசிக்க ஆரம்பித்தனர். அவர்களைக் குழுவினர் என்றும் சொல்லுகிருர்கள். அவர்கள் ஒன்று கூடி வேலை செய்ய ஆரம்பித்தனர். அக்காலத்தில் ஒருவர்க்கொருவர் ஒத்தாசை செய்து கொள்ளும் வழக்கம் இருந்தது. ஒவ்வொருவனும் தன் குழுவின் நலமே முதன்மையானதென்று எண்ணி அதன்படி நடப்பான்;

பிறகுதான் தன் சொந்த வேலைகளில் கவனத்தைச் செலுத்துவான். குழுவிற்கு ஏதேனும் அபாயம் நேரிட்டால், அக்குழுவைச் சேர்ந்த ஒவ்வொருவரும் அதைக் காப்பாற்றச் சண்டையிடத் தயாராக இருக்கவேண்டும். குழுவைச் சேர்ந்த எவனுகிலும் ஒருவன் அதன் நன்மைக்காக உழைக்காவிட்டால், அவனை உடனே வெளியில் துரத்திவிடுவார்கள்.

ஜனங்கள் சேர்ந்து உழைப்பதாயிருந்தால், அவர்களெல்லாம் ஒழுங்கு தவருமல் நடந்து கொள்ளவேண்டும். ஒவ்வொருவனும் தன் இஷ்டம் போல் செய்வதாயிருந்தால் நாளடைவில் குழுவானது அழிந்துபோய்விடும். ஆகவே, யாரேனும் ஒரு தலைவன் வேண்டியது அவசியம். மிருகக் கூட்டங்களுக்குங்கூடத் தலைவர்கள் உண்டு. மானிடக் குழுவினர்கள் தங்களுக்குள் யார் பலசாலியோ அவனைத் தங்கள் தலைவனுகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் வாழ்க்கை முழுதும் சண்டையிட்டே வாழ வேண்டியிருந்ததால்தான், பலசாலியான ஒருவனைத் தங்கள் தலைவனுகத் தேர்ந்தெடுத்தார்கள்.

ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக்கொண்டால் அக்குழுவினம் வெகு சீக்கிரத்தில் கலைந்து போகும். ஆகவே, குழுவினத்தாரிடையே சண்டை சச்சரவுகள் ஏற்படாவண்ணம் தலைவன் கவனித்து வந்தான். ஆனுல் ஒரு குழுவினர் மற்றக் குழுவின

ரோடு சண்டை செய்யலாம்; செய்தும் வந்தார்கள். இது, ஆதிகாலத்தில் ஒரு மனிதன் தானாகவே தனியாய்த் தன்னெதிரிகள் ஒவ்வொருவருடனும் சண்டை போடும் வழக்கத்தைவிட மேலானது என்பது வெளிப்படை.

முதல்முதல் ஏற்பட்ட குழுவானது பெருங் குடும்பங்கள் சேர்ந்ததாக இருந்திருக்க வேண்டும். ஒரு குழுவைச் சேர்ந்தவர்கள் எல்லாம் உறவினர்களாக இருந்தனர். குடும்பங்கள் பெரிதாகப் பெரிதாகக் குழுவும் மிகப் பெரிதாயிற்று.

ஆதிகாலத்தில், குழுக்கள் ஏற்படாததற்கு முன்பு ஒரு மனிதனுடைய வாழ்க்கை மிகவும் கஷ்டமானதாக இருந்திருக்கவேண்டும். அவனுக்கு வீடும் இருக்கவில்லை; சில தோல்களைத்தவிர வேறு துணிகளும் கிடையா; அவன் எக்காலமும் சண்டையிட்டுக்கொண்டே கஷ்டப்பட்டுக்கொண்டு தன் வாழ்நாளைக் கழித்திருக்கவேண்டும். வேட்டையாடி மிருகங்களைக் கொன்றும், கொட்டைகளையும் பழங்களையும் சேகரித்தும் அவன் பிரதிதினமும் சாப்பிடவேண்டியிருந்தது. தன்னைச் சுற்றி எங்கும் தனக்கு விரோதிகள் இருப்பதாக அவன் நினைத்திருக்கவேண்டும். இயற்கையில் உண்டாகும் கல்மழை, பனி, பூகம்பம் இவற்றையும் அவன் தன் விரோதிகளாகக் கருதியிருக்க வேண்டும். பூமியில் பதுங்கி நகர்ந்தும்,

ஒன்றையும் அறிந்துகொள்ளும் தன்மையின் மையால் எதைக் கண்டாலும் பயந்துகொண்டும் பண்டைக்கால மனிதன், பாவம், அடிமை போன்று வாழ்ந்திருக்கவேண்டும். கல் மழை பெய்தால் மேகத்திலுள்ள சில தெய்வங்கள் தன்மேல் கோபங்கொண்டு தன்னைக் கற்களால் அடிக்கின்றன என்று எண்ணுவான். அதைக் கண்டு அவன் பயப்பட்டு, மேகத்திற்குள் மறைந்துகொண்டு கல் மழையையும் புயற் காற்றையும் பனியையும் உண்டாக்கும் அந்த ஆளை எப்படியாவது திருப்தி செய்யவேண்டுமென்று ஆசைப்பட்டான். அந்த ஆளை அவன் எப்படித் திருப்தி செய்வது? அவனுக்கோ விவரமும் தெரியாது, புத்தியும் இல்லை. மேகத்தில் இருக்கும் கடவுள் தன்னைப் போன்றவன் என்று அவன் எண்ணியிருக்கவேண்டும். தன்னைப் போலவே சாப்பாட்டில் ஆசையுள்ளவன் என்றும் எண்ணியிருக்கவேண்டும். ஆகவே, கடவுளின் பசியைத் தணிக்க அவன் கையிலிருந்த மாமிசத்தையாவது, அல்லது புதிதாக அதற்கென்றே ஒரு பிராணியைக் கொன்று கிடைத்த மாமிசத்தையாவது ஏதாவது ஓர் இடத்தில் வைத்துவிடுவான். இப்படி மாமிசத்தை அக்கடவுளுக்கு ஆகாரமாகக் கொடுத்து மழையையும் காற்றையும் நிறுத்திவிடலாம் என்று நினைத்தான்.

மழையும் காற்றும் பனியும் ஏன் உண்டாகின்றனவென்பதை அறிந்த நமக்கு இதெல்லாம் அறிவின்மை, பேதைமை என்று தெரிகிறது. ஒரு பிராணியைக் கொல்வதற்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. அப்படியிருந்தும் இக்காலத்திலும், அதேமாதிரி நடந்துகொள்ளும் அறிவிலிகள் இருக்கின்றனர்.

## 13

## சமயங்கள் உண்டானதும் தொழிற் பாகுபாடுகளும்

ஆதிகாலத்து மனிதர்கள் எதைக் கண்டாலும் பயந்துகொண்டு, தங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களெல்லாம் தெய்வங்களின் கோபத்தாலும் பொறாமையாலும் ஏற்பட்டனவென நினைத்தார்களென்று நான் உனக்குச் சென்ற கடிதத்தில் சொன்னேன். காடுகளிலும் மலைகளிலும் நதிகளிலும் மேகங்களிலும் மற்ற எல்லா இடங்களிலும் இம்மாதிரியான தெய்வங்கள் இருப்பதாக எண்ணினார்கள். கடவுள் நல்ல குணமுடையவரென்றும் கருணையுடையவரென்றும் அவர்கள் எண்ணவில்லை. மிகவும் முன்கோபமும், சண்டை பிடிக்கும் குணமும் உள்ளவர் கடவுள் என்று எண்ணினார்கள். அவர்கள் கடவுளின் கோபத்திற்கு அஞ்சி, அவருக்கு அடிக்கடி ஆகாரங்களை லஞ்சம் மாதிரி கொடுத்துப் பூஜித்து வந்தனர். சில சமயங்களில் பூகம்பமோ, வெள்ளமோ, ஏதாவது கொள்ளை நோயோ ஏற்பட்டு அதனால் பல ஜனங்கள் மாண்டுபோனால் அவர்கள் மிகவும்

பயப்பட்டார்கள். கடவுள் தங்கள்மேல் கோபித்துக்கொண்டு இங்ஙனம் செய்கிறார் என்று எண்ணினார்கள். ஆகவே, அக்கடவுளைச் சாந்தப்படுத்தவும், திருப்தி செய்யவும் சில சமயங்களில் மனிதர்களையும் பெண்களையும் தங்கள் குழந்தைகளையுங்கூடக் கொன்று அத்தெய்வங்களுக்குப் பலிகொடுப்பார்கள். இது வெறுக்கத்தக்கதும் அநாகரிகமானதுமான ஒரு வழக்கம். ஆனால் பயப்படும் ஒரு மனிதன் எதையும் செய்யத் துணிவான்.

உலகத்தில் மதம் அல்லது சமயம் என்பது இப்படித்தான் உண்டாயிருக்கவேண்டுமென்று தெரிகிறது. ஆகவே, முதல் முதலில், பயத்தினால் மதம் உண்டாயிற்று. பயந்துகொண்டு செய்யும் எக்காரியமும் தீதே. மதம் என்பது பல அழகான விஷயங்களைப்பற்றிச் சொல்லுகிறதென்பது உனக்குத் தெரியும். நீ பெரியவளான பிறகு உலகத்திலுள்ள பல சமயங்களைப்பற்றியும் அவற்றின் பெயரால் உண்டான நல்ல காரியங்களைப் பற்றியும் கெட்ட காரியங்களைப்பற்றியும் படிப்பாய். இருந்தபோதிலும் சமயம் ஆதியில் எப்படி உண்டாயிற்று என்பதை ஆராய்வது எவ்வளவு ருசிகரமான விஷயம். அது எப்படி வளர்ந்தது என்பதைப் பிறகு கவனிப்போம். அது எவ்வளவு பெரிதாக வளர்ந்து பரவியிருந்தாலும் இக்காலத்திலுங்கூட மக்கள் சமயச் சண்டையில் ஒருவர் மற்றவரை அடித்தும்

மண்டையை உடைத்தும் வருவதைப் பார்க்கிரோம். சமயம் என்ருல் இன்றைக்கும் பலர் அஞ்சுகின்றனர். மனத்திற்குத் தோன்றும் பல தெய்வங்களைத் திருப்தி செய்வதற்காகக் கோவில்களில் பூஜை செய்தும் மிருகங்களைக் கொன்றும் வருகிருர்கள். இதினின்றும் ஆதிகாலத்து மனிதனின் வாழ்வு மிகவும் கடினமானதாயிருந்தது என்று தெரிகிறதல்லவா? ஒவ்வொரு நாளும் அவன் இரை தேடவேண்டியிருந்தது. இல்லாவிடில் அவன் பட்டினி கிடக்க வேண்டியதுதான். அக்காலத்தில் சோம்பேறிகள் வசிக்க முடியாமல் இருந்தது. ஏராளமான ஆகாரத்தை ஒரே தடவையில் சேமித்து வைத்துவிட்டுப் பிறகு வெகு நாட்கள் சும்மா இருப்பதென்ற நிலைமை அக்காலத்தில் இல்லை.

குழு ஏற்பட்டதும் ஜனங்களுக்கு வாழ்வு சிறிது எளிதாயிற்று. குழுவைச் சார்ந்தவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து உழைத்தால், ஒவ்வொருவரும் தனித்தனியாய் உழைத்து எவ்வளவு உணவு சேகரிக்கமுடியுமோ அதைவிட அதிகமான உணவுப் பொருள்களைச் சேர்க்க முடியும். நாம் தனியாய் உழைப்பதனுல் செய்யமுடியாத பல காரியங்களை ஒன்று சேர்ந்து உழைப்பதால் செய்யமுடிகிறது. ஒன்று அல்லது இரண்டுபேர், பளுவான சுமையைச் சுமக்க முடியாது. ஆனுல் பலர் சேர்ந்து ஒருவர்க்கொருவர் ஒத்தாசை செய்தால், சுமையை வெகு

எளிதில் தூக்கிச் செல்லலாம். அக்காலத்தில் ஏற்பட்ட மற்ருெரு முன்னேற்றத்தைப்பற்றி முன்னமேயே நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன். அதுதான் **வியவசாயம்**. எறும்புகளுக்குங்கூட இந்த வியவசாயம் கொஞ்சம் தெரியுமென்பதை அறியும்போது நீ ஆச்சரியப்படுவாய். ஆனல் அவைகள் நிலத்தை உழுது, விதைகளை விதைத்துப் பிறகு அறுவடை செய்கின்றன என்று நான் சொல்ல வரவில்லை. எறும்புகள் ஏறக்குறையப் பின்வருமாறு செய்கின்றன; ஒரு செடியின் விதையையோ பருப்பையோ அல்லது கதிரையோ அவை தின்னும்போது அச் செடியைச் சுற்றிலும் முளைத்திருக்கும் புல்லைக் களை பிடுங்குவதுபோல் பூமியிலிருந்து பிடுங்குகின்றன. இப்படி எறும்புகள் செய்வதால் அச் செடி அதிக நாள் உயிரோடிருக்கவும் வளரவும் ஏதுவாகிறது.

எறும்பு செய்வதைப் போலவே மனிதர்களும் ஒரு காலத்தில் செய்திருக்கவேண்டும். வியவசாயம் என்பது என்னவென அவர்களுக்கு அக்காலத்தில் தெரியாமல் இருந்தது. நிலத்தை உழுது விதை விதைத்து வியவசாயம் செய்வதை அவர்கள் பல நாட்களுக்குப் பின்னரேதான் அறிந்திருக்கவேண்டும்.

வியவசாயம் ஏற்பட்டதும் உணவுப்பொருள்கள் எளிதில் கிடைத்தன. மாமிச இரையைத் தேடி மனிதன் எக்காலமும் வேட்டையாட

வேண்டிய அவசியம் ஒழிந்தது. ஆகவே, முன்னைப் போலல்லாமல், சிறிது கடினமற்ற வாழ்வு அவர்களுக்கு ஏற்பட்டது. மற்றும் ஒரு ருசிகரமான மாறுதலும் ஏற்பட்டது. வியவசாயம் தெரிவதற்கு முன்பு ஒவ்வொருவனும் வேட்டையாடியே வசித்துவந்தான். இந்த ஒரு வேலையைத் தவிர அக்காலத்தில் மனிதன் வேறு ஒரு வேலையையும் செய்ய அவசியம் இருக்கவில்லை. பெண்கள் வீட்டில் குழந்தைகளைப் பாதுகாத்தும் காட்டில் உள்ள பழங்களைச் சேகரித்தும் வந்திருக்கலாம். ஆனால் வியவசாயம் ஏற்பட்டதும் அதினின்றும் பல வேறு தொழில்கள் உண்டாயின. கழனியிலும் தோட்டத்திலும் வேலை ஏற்பட்டது; வேட்டையும் ஆடவேண்டியிருந்தது; ஆடுமாடுகளையும் பாதுகாக்க வேண்டியிருந்தது. பெண்கள் ஆடுமாடுகளைப் பாதுகாத்தும் மேய்த்தும் பால் கறந்தும் வந்திருக்கலாம். ஆடவர்களில் சிலர் ஒரு வகையான வேலையையும், மற்றும் சிலர் வேறு வகையான வேலையையும் செய்து வந்திருக்கலாம்.

இக்காலத்தில் உலகத்தில் ஒவ்வொரு மனிதனும் ஒரு குறித்த தொழிலைமாத்திரம் செய்து வருகிறான் என்பது உனக்குத் தெரியுமே. ஒருவன் வைத்தியத் தொழில் செய்கிறான்; மற்றொருவன் பாலங்கட்டுதல், ரோடுகள் போடுதல் முதலிய வேலைகளைச் செய்கிறான்; மற்றும் சிலர் தச்சு வேலையையும், கொல்

லன் வேலையையும், வீடுகட்டும் வேலையையும், செருப்புத் தைக்கும் வேலையையும், துணி தைக்கும் வேலையையும் மற்றும் இவை போன்ற வெவ்வேறு தொழிலேயும் செய்துவருகின்றனர். ஒவ்வொருவனும் தனித்தனியான தொழிலைச் செய்வதால், மற்றைத் தொழில்களைப் பற்றி ஒன்றும் அறியமுடியாது. இதைத்தான் தொழிற் பிரிவு, அல்லது வேலையைப் பகிர்ந்து செய்வது என்று சொல்லுகிறார்கள். ஒருவன் பல வேலைகளைச் செய்ய முயல்வதைவிட ஒரு வேலையைத் திறமையுடன் செய்ய முயன்றால், அவன் அதை வெகு நன்றாகச் செய்வான். தற்காலத்தில் உலகத்தில் தொழில்களெல்லாம் எண்ணிறந்த பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

இவ்வகையான தொழிற் பிரிவுகள் வியவசாயம் உண்டானபோதே ஒவ்வொரு குழுவிலும் ஏற்பட்டனவென்று நமக்குத் தெரிகிறது.

## 14

## வியவசாயத்தால் உண்டான மாறுதல்கள்

போன கடிதத்தில் நான் உனக்குத் தொழிற் பிரிவைப்பற்றிச் சிறிது சொன்னேன். மிகப் பண்டைக்காலத்தில் மனிதன் வேட்டையாடிப் பிழைத்தபோது இம்மாதிரியான தொழிற் பிரிவுகள் இருக்கவேயில்லை. ஒவ்வொருவனும் வேட்டையாடியேதான் வயிறு வளர்க்கவேண்டியிருந்தது; இருந்தாலும் சிற்சில சமயங்களில் அதிகக் கஷ்டப்பட்டால்தான் போதுமான உணவு கிடைத்துவந்தது. தொழிற் பிரிவு முதல்முதலில், ஆண்களுக்குள்ளும் பெண்களுக்குள்ளுந்தான் ஏற்பட்டிருக்க வேண்டும். புருஷன் வேட்டையாடி வந்திருக்க வேண்டும்; மனைவி வீட்டிலேயே இருந்து கொண்டு குழந்தைகளையும் கால் நடைகளையும் கவனித்து வந்திருக்கவேண்டும்.

மக்கள் வியவசாயம் செய்யத் தெரிந்து கொண்டதும் பல புத்தம் புதிய அபி விருத்திகள் ஏற்பட்டன. முதல் முதலில், முன்னிலும் அதிகமான தொழிற் பிரிவுகள் ஏற்பட்டன. சிலர் வேட்டையாடி வந்தனர்;

வேறு சிலர் பூமியைத் திருத்திச் சாகுபடி செய்தனர். மறுபடியும் நாட்கள் செல்லச் செல்ல ஜனங்கள் வேறு புதிய தொழில்களைக் கற்று அதில் தேர்ச்சி அடைந்தனர்.

நிலத்தைச் சாகுபடி செய்ய ஆரம்பித்ததில் ஏற்பட்ட மற்றும் ஒரு ருசிகரமான விசேஷம் என்னவென்றால், ஜனங்கள் கிராமங்களையும் பட்டணங்களையும் ஏற்படுத்தி அவற்றில் வசிக்க ஆரம்பித்தனர். வியவசாயம் தலையெடுப்பதற்கு முன்பு மக்கள் சுற்றித் திரிந்து வேட்டையாடி வந்தனர். ஒரே இடத்தில் குடியிருக்க வேண்டு மென்ற அவசியம் அவர்களுக்கு ஏற்படவில்லை. எங்கு வேண்டுமென்றாலும் சென்று வேட்டை யாட அவர்களால் முடிந்தது. அவர்களிடம் ஆடு மாடுகளும் மற்றும் கால்நடைகளும் இருந் தமையால், மேய்ச்சல் தரையை நாடி அடிக் கடித் திரியவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது. ஓர் இடத்தில் கால்நடைகளைச் சில நாட்கள் மேய்த்த பின்பு அங்கே மேய்ச்சலற்றுப் போகவும் அவர்கள் தங்கள் ஆடுமாடுகளோடு குடும்ப சகிதமாக வேறு மேய்ச்சல் தரையை நாடிச் சென்றார்கள்.

வியவசாயம் நிலைத்ததும், ஜனங்கள் நிலத்தி னருகே குடியிருக்க நேரிட்டது. தாங்கள் உழுது விதை விதைத்துப் பயிர் செய்த பூமியை விட்டு விட்டு அவர்கள் வேறு இடங்களுக்குப் போக முடியாமல் இருந்தது. ஆகவே அவர்கள் தங்கள்

வயலுக்கு அருகிலேயே ஓர் அறுவடை முதல் மறு அறுவடை வரையில் வசிக்க நேரிட்டது. கிராமங்களும் பட்டணங்களும் இவ்விதமாகத் தான் ஏற்பட்டன.

வியவசாயத்தினுல் ஏற்பட்ட மற்றெரு பெரிய மாறுதல், மக்களின் வாழ்வு எளி தாகியதே. எப்போதும் வேட்டையாடுவதைக் காட்டிலும் நிலத்தை உழுது பயிர்செய்வது மிக வும் எளிது. ஒரே தடவையில் தின்று தீர்க்க முடியாத அவ்வளவு அதிகமான உணவுப் பொருள்களை நிலம் கொடுத்தது. இதை ஜனங்கள் ஜாக்கிரதையாக வைத்துக் காப்பாற்றினுர்கள்.

மற்றும் சுவையுள்ள ஒரு மாறுதலைப்பற்றிக் கவனிப்போம். மனிதன் வேட்டையாடி வசித்த காலத்தில் அவன் எந்தச் சாமானையும் சேகரித்து வைக்க முடியாமல் இருந்தது. அவன் அன்ரு டங்காய்ச்சிபோல் வசித்து வந்தான். பணத்தை ஜாக்கிரதையாய்ப் போட்டுவைக்க அக்காலத்தில் நிதிகள் (Banks) இல்லை; வேறு சாமான் களைச் சேமித்து வைக்கவும் வசதி இல்லாமல் இருந்தது. ஒவ்வொரு நாளும் அவன் வேட்டை யாடியேதான் வயிறு வளர்க்க வேண்டியிருந்தது. வியவசாயம் தலையெடுத்ததும் ஒரே தடவையில் பூமியிலிருந்து அவனுடைய தேவைக்கு அதிக மான தானியம் கிடைத்தது. தன் தேவைக்கு அதிகமான அத்தானியத்தைச் சேமித்துப் பத் திரப்படுத்தி வைத்துக்கொண்டான். தேவைக்கு

அதிகமான ஆகாரம் முதல் முதலில் இவ்வித மாகத்தான் ஏற்பட்டது. தங்கள் சாப்பாட்டிற்கு வேண்டிய உணவுப் பொருள்களைப் பயிர் செய்ய எவ்வளவு வேலை செய்யவேண்டுமோ அதைவிட அதிகமாக வேலை செய்ததனுல்தான் இங்ஙனம் தேவைக்கு அதிகமான உணவுப்பொருள்கள் மிகுந்தன.

தற்காலத்தில் நம்மிடையே பாங்கிகள் இருப்பதும், அவற்றில் ஜனங்கள் பணத்தைச் சேமித்து வைப்பதும், வேண்டும்போது செக்குகள் (cheques) மூலமாகப் பணத்தைப் பெறுவதும் உனக்குத் தெரியும். இதைப்பற்றி நீ சற்று யோசித்துப் பார்த்தால், இந்தப் பண மெல்லாம் ஜனங்களின் தேவைக்கு அதிகமான பணம் என்று உனக்குத் தெரியும். அதாவது ஜனங்கள் தங்களிடமுள்ள பணத்தையெல்லாம் ஒரே தடவையில் செலவழிக்க விரும்பாமல் பாங்கியில் போட்டுவைக்கிருர்கள். தங்கள் தேவைக்கு அதிகமான பணம் உள்ளவர்களே பணக்காரர்கள். ஏழைகளுக்கு ஒன்றுமே இல்லை. தேவைக்கு அதிகமான பணம் ஒரு வனுக்கு எப்படிக் கிடைக்கின்றதென்பதை நீ அறிவாய். ஒருவன் மற்றவனைவிட அதிகமாய் உழைப்பதனுல் மாத்திரம் தேவைக்கு அதிகமான பணத்தைப் பெறுவதில்லை. ஆனுல் தற்காலத் தில் ஒரு வேலையும் செய்யாமல் சுகமாக இருப் பவனும் தேவைக்கு அதிகமான பணத்தைப்

பெறுகிறுன். கஷ்டப்பட்டு உழைப்பவனுக்கு இதில் ஒரு பங்குகூடக் கிடைப்பதில்லை. இந்த விதமான ஏற்பாடு ஒரு முட்டாள்தனமான ஏற்பாடாகும். இந்த முட்டாள்தனமான ஏற்பாட்டின் காரணமாகத்தான் தற்காலத்தில் உலகில் பல ஜனங்கள் ஏழைகளாக இருக்கின்றனர் என்று பலர் நினைக்கிருர்கள். இப்போது இதை நீ அறிந்துகொள்வது சற்றுக் கஷ்டமாயிருக்கும். அப்படிக் கஷ்டமாயிருந்தால் நீ அதற்காக வருத்தப்படவேண்டாம். வெகு சீக்கிரத்தில் இதை நீ அறிந்துகொள்வாய்.

வியவசாயத்தினுல் ஜனங்கள் ஒரே தடவையில் எவ்வளவு சாப்பிடமுடியுமோ அதனினும் அதிகமாகப் பயிர் செய்ய முடிந்தது என்று ஒரு விஷயத்தை மாத்திரம் நீ இப்போது கவனித்தால் போதுமானது. அதிகப்படியான தானியங்களைச் சேகரித்து வைத்தார்கள். அக்காலத்தில் பாங்கிகளும் இருக்கவில்லை; நாணயங்களும் கிடையா. எவனெருவனிடம் ஏராளமான ஆடு மாடுகளும் ஒட்டகங்களும் தானியங்களும் இருந்தனவோ அவனே பணக்காரன் என்று ஜனங்கள் எண்ணினுர்கள்.

# 15

## குடும்பத் தலைவன்

என் கடிதங்களெல்லாம் வர வரச் சற்றுச் சிக்கலாக இருக்கின்றனவோவென்று எண்ணு கிறேன். ஆனால் நம்மைச் சூழ்ந்துகொண் டிருக்கும் சமூகவாழ்க்கையே அம்மாதிரிச் சிக்க லானது. பண்டைக்காலத்தில் வாழ்க்கை மிக எளிதாக இருந்தது; ஆனால் நாம் இப்போது சமூகத்தில் சிக்கலான ஏற்பாடுகள் உண்டான காலத்தைப் பற்றிக் கவனிக்கவேண்டியிருக் கிறது. நாம் மெதுவாக இவ்விஷயத்தை ஆராய்ந்துகொண்டே போய் வெவ்வேறு காலங் களில் வாழ்க்கையிலும் சமூகத்திலும் ஏற் பட்ட மாறுதல்களின் உட்கருத்தை அறிய முயல்வோமானால், பல விஷயங்களை நன்றாக எளிதில் அறிந்துகொள்ள முடியும். அங்ஙனம் நாம் முயலாவிட்டால், நம்மைச் சுற்றிலும் நடக்கும் பல விஷயங்களை நாம் ஒரு காலும் அறியமுடியாது. இருண்ட காட்டில் திக்குத் தெரியாமல் தடுமாறும் ஒரு சிறு குழந்தையைப் போல் நாம் கஷ்டப்படுவோம். இக்காட்டினுள் ஒரு வழியைக் கண்டுபிடிப்பதற்காகத்தான்

மறுபடியும் திருப்பிக் காட்டிற்குள் நான் உன்னை அழைத்துச் செல்லவேண்டியிருக்கிறது.

மசூரியிலிருக்கும்போது, அரசர்கள் என்பவர்கள் யாரென்றும், அவர்கள் ஏன் அரசர்களானார்கள் என்றும் நீ என்னைக் கேட்டது உனக்கு ஞாபகம் இருக்கும். அரசர்கள் ஏற்பட்ட பண்டைக் காலத்தைப்பற்றி நாம் சிறிது கவனிப்போம். முதலில் அவர்களை அரசர்கள் என்று அழைக்கவில்லை. ஆனால் அவர்களைப்பற்றிச் சில விஷயங்களை நாம் தெரிந்துகொண்டால் அரசர்கள் உண்டான விதமும் நமக்கு நன்கு விளங்கும்.

குழுக்கள் எப்படி உண்டாயின என்பதைப் பற்றி முன்னமேயே நான் உனக்குச் சொல்லியிருக்கிறேன்.

எப்போது வியவசாயமும் வேலைப் பிரிவினைகளும் ஏற்பட்டனவோ, அப்போது அக்குழுவில் அவ்வேலைகளைச் சரிவர மேல்பார்வை செய்து வரவும் ஒழுங்குபடுத்தவும் ஒருவன் வேண்டியிருந்தான். இதற்கு முன்புங்கூட, ஒரு குழுவினர் மற்றக் குழுவினரோடு சண்டைக்குச் சென்றபோதுங்கூட ஒரு தலைவனைத் தேர்ந்தெடுத்து அவன் கட்டளைப்படி நடந்து வந்தனர். பொதுவாக, ஒரு குழுவினர் தங்களுக்குள் வயதானவனைத்தான் தலைவனாகத் தெரிந்தெடுப்பது வழக்கம். அவனைத்தான் மூப்பன், நாட்டாண்மைக்காரன், பட்டக்காரன், காரணவன் என்று

சொல்லுகிறார்கள். வயது முதிர்ந்தவனுதலால், மிக்க அனுபவமும் அறிவும் உள்ளவன் என்று அவனை ஜனங்கள் நினைத்தார்கள். இந்தக் காரணவனுக்கும் அக்குழுவைச் சேர்ந்த மற்ற வர்களுக்கும் அதிகமான வித்தியாசம் ஒன்றும் இல்லை. அவன் மற்றவர்களோடு வேலை செய்து விளைத்த தானியங்களை அக்குழுவில் எல்லோரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். அக்காலத்தில் எல்லாச் சொத்துக்களும் குழுவைச் சார்ந்திருந்தன. இக்காலத்தில் நாம் ஒவ்வொருவரும் தனி வீடும், பணமும், மற்றும் பல பொருளும் வைத்துக்கொண்டிருக்கிறோம். அக்காலத்தில் அப்படி இருக்கவில்லை. ஒருவன் எவ்வளவு சம்பாதித்தாலும் அது குழுவைச் சேர்ந்ததாகையால் அதைக் குழுவைச் சேர்ந்தவர்களெல்லோரும் சமமாகப் பங்கிட்டுக் கொண்டார்கள். குழுவின் தலைவனை மூப்பன், அல்லது நாட்டாண்மைக்காரன், அல்லது பட்டக்காரன் இவ்வாறு பகிர்ந்து கொடுத்தான்.

ஆனல் நாளடைவில் இது மாறியது. வியவசாயம் பரவவே புதிய புதிய தொழில்கள் ஏற்பட்டன. இப்புதிய தொழில்களைச் சரியாக நிறுவி நடத்துவதிலும், குழுவைச் சேர்ந்த யாவரும் தத்தம் வேலையைச் சரிவர நடத்துகிறார்களாவென்று பார்ப்பதிலுமே பட்டக்காரன் தன் காலம் முழுவதையும் கழிக்கவேண்டியிருந்தது. நாளடைவில் சாதாரண ஜனங்கள்

செய்துவந்த வேலையைத் தானும் செய்வதைப் பட்டக்காரன் நிறுத்தினான். இவ்விதமாக, சாதாரண ஜனங்களுக்கும் பட்டக்காரனுக்கும் வித்தியாசம் ஏற்பட்டது. வேறுவிதமான ஒரு தொழிற் பிரிவு ஏற்பட்டதை நாம் இங்கே காண்கிறோம். குழுவின் அலுவல்களை நிர்வகித்தும் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வேலையைக் கொடுத்து வேலைவாங்கியும், சிலரை வேட்டைக்கு அனுப்பியும், எல்லோரும் தனக்கு அடங்கி நடக்கும்படி செய்தும் வந்தான் பட்டக்காரன்.

இரண்டு குழுவினருக்குள் சண்டை சச்சரவு ஏதேனும் ஏற்படின், அச்சமயத்தில் பட்டக்காரன் சர்வாதிகாரியாகத் தலைமை வகித்து விளங்கினான். சண்டைக்குப் போகும்போது, தலைவனின்றி நன்றாகச் சண்டைபோட முடியாது. இக்காரணத்தைக் கொண்டுதான் பட்டக்காரன் சர்வாதிகாரியாக விளங்கினான்.

நிர்வாக வேலை அதிகரிக்கவே, அதைத் தானாகவே செய்யப் பட்டக்காரனுக்கு முடியாமற் போய்விட்டது. ஆகவே தனக்கு உதவியாகச் சிலரைச் சேர்த்துக்கொண்டான். இவ்விதமாகப் பல நிர்வாகிகள் ஏற்பட்டனர். எனினும் இவர்களெல்லோருக்கும் பட்டக்காரனே தலைவனாக விளங்கினான். இவ்விதமாகக் குழுவில் நாட்டாண்மைக்காரர்கள் அல்லது பட்டக்காரர்கள் என்றும், தொழில் செய்பவர்கள் என்றும் இரண்டு பிரிவுகள் ஏற்பட்டன.

இதனால் மனிதர்களுள் ஏற்றத் தாழ்வு ஏற்பட்டது. நாட்டாண்மைக்காரர்கள் தொழில் செய்பவர்களை ஏவியும் அடக்கி ஆண்டும் வந்தார்கள்.

அடுத்த கடிதத்தில் நாட்டாண்மைக்காரர்கள் அல்லது பட்டக்காரர்கள் எப்படி அதிகாரத்தைப் பெற்றார்களென்பதைக் கவனிப்போம்.

## 16

### குழுத்தலைவன் வளர்ச்சி

பண்டைக்காலத்துக் குழுக்களைப்பற்றியும் அவற்றின் தலைவர்களைப்பற்றியும் நான் சொல்லிவரும் வரலாறு உனக்குச் சுவையற்றதாகத் தோன்றுது என்று எண்ணுகிறேன்.

அக்காலத்தில் எல்லா விதமான பொருள்களும் ஒரு குழுவிற்கே சொந்தமாயிருந்தன. ஒரு குழுவைச் சேர்ந்த எவனுக்கும் அவற்றில் தனிப் பாத்தியம் அல்லது பங்கு இல்லை. குழுவின் தலைவனுக்குங்கூடத் தனிமையாக எதிலும் பங்கு இல்லை. அக்குழுவைச் சேர்ந்த தனிப்பட்ட ஒருவனுக்கு என்ன பங்குண்டோ அந்தப் பங்குதான் தலைவனுக்கும் இருந்தது. ஆயினும் அவன் குழுவின் நடவடிக்கைகளைக் கவனித்து நிர்வகித்து வந்ததால், குழுவைச் சேர்ந்த சொத்துக்களைக் காப்பாற்றுவதும் அவனுடைய பொறுப்பாயிருந்தது. அவனுடைய அதிகாரம் மேலும் மேலும் அதிகரிக்கவே அச்சொத்துக்களெல்லாம் தன்னையே சேர்ந்தனவென்றும் குழுவைச் சேர்ந்தவையல்லவென்றும் அவன் கருதினுன். அதாவது, தானே குழுவின் தலைவனுதலால்,

அதன் பிரதிநிதியென்ற முறையில் எல்லாச் சொத்துக்களும் தன்னைச் சேர்ந்தனவே என்று எண்ணினான். இதினின்றும் ஒருவன் ஒரு சொத்தைத் தன் உரிமையாகப் பாராட்டும் இயல்பு எப்படி ஏற்பட்டது என்பது தெரிகிறது. இக்காலத்தில் நாம் எப்போதும், "இது என்னுடையது", "அது உன்னுடையது" என்று நினைத்தும் பேசியும் வருகிறோம். ஆனால் நான் சொன்னபடி, ஆதியில் மனிதர்களும் பெண்களும் அம்மாதிரி நினைக்கவில்லை. எல்லாம் தங்கள் குழுவைச் சேர்ந்தனவென்றே எண்ணினார்கள்.

பழைய பட்டக்காரன், தான்தான் குழுவின் தலைவன் என்று நினைத்து அக்குழுவைச் சேர்ந்தனவெல்லாம் தனக்குரியனவே என்று எண்ணினான்.

அவன் இறந்துபோனால் குழுவினரெல்லாம் ஒன்றுகூடி மற்றொரு தலைவனைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், பொதுவாகத் தலைவனுடைய குடும்பத்தாருக்குக் குழுவின் நிர்வாகம் போன்ற விஷயங்கள் மற்றவர்களைவிட அதிகமாகத் தெரிந்திருந்தன. அவர்கள் எப்போதும் பட்டக்காரனுடன் இருந்து அவன் இட்ட வேலைகளைச் செய்து அவனுக்கு உதவி செய்து வந்தமையால் அவர்களுக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருந்தன. இதன் காரணமாக, ஒரு தலைவன் இறந்து போனால் குழுவினர் அவன்

குடும்பத்திலிருந்தே மற்றொருவனைத் தங்கள் தலைவனாகத் தேர்ந்தெடுக்கலானார்கள்.

நாளடைவில், தலைவனது குடும்பம் வேறு, குழு வேறு என்று ஜனங்கள் எண்ணித் தங்கள் தலைவனை அக்குடும்பத்திலிருந்தே தேர்ந்தெடுத்தார்கள். இதனால் பட்டக்காரனுடைய செல்வாக்கும் அதிகாரமும் பெருகின. ஒவ்வொரு தலைவனும் தனக்குப் பின் தன் மகனோ அல்லது சகோதரனோ தலைவனாக வேண்டுமென்று எண்ணி அவ்வாறே நடைபெற வேண்டிய முயற்சியைச் செய்துவந்தான். ஆகவே தனக்குப் பின் தலைமைப் பதவியை வகிப்பதற்கு வேண்டிய பயிற்சியைத் தலைவன் தன் மகனுக்கோ, சகோதரனுக்கோ, அல்லது தன் உறவினர்களில் ஒருவனுக்கோ, கொடுத்து வந்தான். தான் யாரைத் தெரிந்தெடுத்துப் பயிற்சிகொடுத்து வருகிறானோ அவனையே தனக்குப் பின் தலைவனாகத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று தன் குழுவினருக்குத் தலைவன் சொல்வதுண்டு. குழுவினர் தலைவன் இவ்விதம் சொன்னதை முதல்முதலில் விரும்பாமல் இருந்திருக்கலாம். ஆனால் நாளடைவில் இது பழக்கமாய்ப் போய்விடவே தலைவனது ஆணைப்படியே செய்துவந்தனர். இதனால் தலைவனைத் தெரிந்தெடுப்பதென்னும் செயலே மறைந்துவிட்டது. வயதான தலைவன் தனக்குப் பின் இன்னாரே தலைவனாகவேண்டுமென்று தீர்

மானித்துவிடுவான். அவனே பிறகு தலைவனாகி விடுவான்.

இதினின்றும் தலைவனது உத்தியோகம் பரம்பரை உத்தியோகமாக மாறியது. அதாவது ஒரே குடும்பத்தில் தகப்பனுக்குப் பின் அவன் மகனாவது அல்லது மற்ற உறவினர்களாவது தலைமைப் பதவியை அடைந்தனர். குழுவினைச் சேர்ந்த எல்லாச் சொத்துக்களும் திரவியங்களும் தனக்கே சொந்தமானவை என்ற திட நம்பிக்கையும் தலைவனுக்கு ஏற்பட்டது. அவனுக்குப் பின்பும் அச்சொத்துக்களெல்லாம் அவனுடைய குடும்பத்தையே சேர்ந்தனவாகக் கருதப்பட்டன. இதிலிருந்துதான், "என்னுடையது", "உன்னுடையது" என்று உரிமையும் பங்கும் கொண்டாடும் வழக்கம் ஏற்பட்டது.

ஆனால் ஆதியில் இம்மாதிரியான எண்ணமே இல்லாமல் இருந்தது. ஜனங்களெல்லாம் தங்களது குழுவின் நலத்தைக் கருதி உழைத்தார்களேயன்றித் தங்கள் சுயநலத்தைக் கருதவில்லை. அவர்கள் அதிகமான உணவுப் பொருள்களைப் பயிர் செய்தால் அக்குழுவிலுள்ள எல்லாரும் அவற்றைப் பங்கிட்டுக் கொள்வார்கள். குழுவில் ஏழையென்றும் பணக்காரனென்றும் வேறுபாடு இல்லை. குழுவைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம், குழுவின் எல்லாச் சொத்துக்களிலும் பாத்தியம் இருந்தது.

தலைவன் தன் குழுவினருக்குரிய சொத்தைத் தன்னுடையது என்று உரிமை கொண்டாட ஆரம்பித்தபோதுதான் பணக்காரன் என்றும் ஏழை என்றும் வித்தியாசங்கள் ஏற்பட்டன.

இதைப்பற்றி விவரமாக அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

# 17

## குழுவின் தலைவன் அரசனாதல்

**ப**ழைய குழுவின் தலைவனைப்பற்றி நாம் அதிக நேரம் பேசிக் கழித்துவிட்டோம் அல்லவா? நாம் அவனைப்பற்றிய வரலாறுகளை இதோ இப்போதே முடித்துவிடுவோம். அதாவது இப்போது அவனுடைய பெயரே வேறாக மாறி விடும். அரசர்கள் யார், அவர்கள் எப்படி உண்டானார்கள் என்பவற்றைப்பற்றிச் சொல்வதாக ஆரம்பத்திலேயே உனக்கு நான் சொன்னேன். அரசர்களைப்பற்றி அறிவதற்காகத்தான் நாம் குழுவின் தலைவர்களைப்பற்றிக் கவனிக்கவேண்டியிருந்தது. இந்தத் தலைவர்களே பிற்காலத்தில் ராஜாக்களாகவும் மஹாராஜாக்களாகவும் விளங்கினார்கள் என்பதை நீ இதற்குள் ஊகித்திருக்கலாம். தலைவனுக்கு ஆங்கிலத்தில் 'பேட்ரியார்க்' (patriarch) என்று பெயர். அது லத்தீன் பாஷையிலுள்ள 'பேடர்' என்ற பதத்திலிருந்து வருகிறது. அதற்குத் தகப்பன் என்று அர்த்தம். அவனே தன் ஜாதிக்குத் தலைவனாகவும் தகப்பனாகவும் விளங்கினான். 'பாட்ரியா' (patria) என்ற வார்த்தை அதே லத்தீன் பாஷையிலிருந்து வருகிறது. அதற்குத் தந்தை

நாடு அல்லது ஒருவன் பிறந்த நாடு என்பது பொருள். பிரெஞ்சுப் பாஷையில் அதற்குப் 'பாட்ரி' (patrie) என்று பெயரென்பது உனக்குத் தெரியும். ஸம்ஸ்கிருதத்திலும், ஹிந்தியிலும், நம் நாட்டைத் தாய் என்றும் தாய் நாடென்றும் கூறுகிறோம். உனக்கு எது பிரியம்?

குழுத்தலைவனது பதவி எப்பொழுது பரம்பரையாக ஏற்பட்டதோ, அதாவது எப்போது தலைவனுடைய மகன் தகப்பனுக்குப் பின் தலைவனாக ஆனானோ அப்போதே அவனுக்கும் அரசனுக்கும் ஒருவித வித்தியாசமும் இல்லாமற் போயிற்று. அவன் உண்மையிலேயே அரசனாக விளங்கினான். அரசனுக்கும், தன் நாட்டில் உள்ள எல்லாத் திரவியங்களும் தனக்கே சொந்தமானவை என்ற ஒரு விபரீத எண்ணம் உண்டாகியது. தானே தேசம் என்று எண்ணினான் அரசன். "அரசாங்கமே நான்", அல்லது, "நான்தான் அரசாங்கம்" என்று பிரசித்திபெற்ற பிரெஞ்சு தேசத்து அரசன் ஒருவன் ஒரு காலத்தில் சொன்னான். குடிகளுக்கு வேண்டிய ஆகாரத்தைச் சேகரித்துக்கொடுப்பதும், அவர்கள் வாழ்க்கைக்கு வேண்டிய பிற வசதிகளைச் செய்துகொடுப்பதும் தம் கடமை என்பதையும் அதற்காகத்தான் தம்மை அரசர்களாக ஜனங்கள் தேர்ந்தெடுத்தார்கள் என்பதையும் அரசர்கள் மறந்தார்கள். குழுவிலேயே அதிக புத்தியுள்ளவர்கள், அனுபவம் உள்ளவர்

கள் என்ற காரணத்தைக்கொண்டுதான் தம்மைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதையும் அவர்கள் அறவே மறந்தனர். நாட்டிலுள்ள எல்லோருக்கும் தாங்களே தலைவர்களென்றும் மற்றவர்களெல்லாம் தமது வேலையாட்களென்றும் கருதினர். உண்மையிலேயே அவர்களை நாட்டின் தொண்டர்களாக ஜனங்கள் கருதினர்.

இவ்வரசர்களுக்குக் கர்வம் தலைக்கேறவும், தங்களைத் தெரிந்தெடுக்கக் குடிகளுக்கு ஒருவிதமான அதிகாரமும் இல்லையென்று எண்ணினார்கள். இவற்றைப்பற்றிப் பிறகு சரித்திரத்தில் நீ வாசிப்பாய். கடவுளே தம்மை அரசர்களாகப் படைத்தார் என்று அவர்கள் சொன்னார்கள். இதைத்தான் அவர்கள் 'அரசர்களின் தெய்விக உரிமை' (Divine Right of Kings) என்று சொன்னார்கள். நீண்டகாலம் வரையில் அரசர்கள் இவ்விதமாக நீதி தவறி மிகச் சுகமாகவும் ஆடம்பரமாகவும் தங்கள் வாழ்க்கையை நடத்தினார்கள். ஆனால் அவர்களின் பிரஜைகளோ வறுமைப் பிணிவாய்ப்பட்டு வருந்தினர். இந்த அநீதியைக் கண்டு பொறுக்காமல், சிற்சில நாடுகளில் பொதுஜனங்களெல்லோரும் ஒன்றுகூடித் தம் அரசர்களை விரட்டியடித்துத் துரத்திவிட்டனர். ஆங்கிலப்பிரஜைகள் தங்கள் அரசனான முதல் சார்லஸ் என்பவனுடன் சண்டையிட்டு அவனை வென்று கடைசி

யாக அவனைக் கொன்றதையும் நீ ஆங்கில சரித்திரத்தில் வாசிப்பாய். அவ்விதமே, பிரான்சு தேசத்து ஜனங்களும் ஒரு புரட்சி செய்து அதன் பிறகு தங்கள் தேசத்திற்கு அரசர்களே வேண்டியதில்லையென்று தீர்மானித்தார்கள். பாரீஸ் நகரத்தில் கன்ஸியர் ஜரி என்ற சிறைச்சாலையை நாம் பார்த்தது உனக்கு ஞாபகம் இருக்கும். நீயும் வந்திருந்தாயே? இந்தச் சிறைச்சாலையில் தான் அரசகுடும்பத்தாரான மேரி அண்டாய்னட் போன்றவர்களைச் சிறை வைத்திருந்தனர். அம்மாதிரியே சில வருஷங்களுக்கு முன்பாக ருஷ்யா தேசத்தில் மிகப் பெரிய புரட்சியொன்று ஏற்பட்டுப் பிரஜைகளெல்லாம் 'ஜார்' என்ற தம் அரசனைத் துரத்திய விஷயத்தைப்பற்றியும் நீ வாசிப்பாய். ஆகையால் அரசர்களின் காலமும் ஒரு முடிவிற்கு வந்துகொண்டிருக்கிறது. இப்போது உலகில் பல தேசங்களில் அரசர்களே இல்லை. பிரான்சு, ஜர்மனி, ருஷ்யா, ஸ்விட்ஜர்லாந்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், சீனதேசம் போன்ற இன்னும் பல தேசங்களிலும் அரசர்களே இல்லை. அவைகளெல்லாம் குடியரசு நாடுகள். பிரஜைகளே தங்கள் தலைவர்களையும் அதிகாரிகளையும் அவ்வப்போது தேர்ந்தெடுக்கின்றனர். இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் சந்ததியார்கள் பரம்பரையாக அப்பதவிகளை வகிக்க முடியாது.

இங்கிலாந்தில் இன்னும் ஓர் அரசர் இருக்கிறார் என்பது உனக்குத் தெரியும். ஆனால் அவருக்கு அதிகாரம் இல்லை. அவராகத் தனியே ஒன்றுமே செய்யமுடியாது. ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் உட்கார்ந்து ஆலோசனை செய்யும் பார்லிமெண்டுக்குத்தான் எல்லா அதிகாரமும் உண்டு. லண்டனில் நீ பார்லிமெண்டு மகாசபையைப் பார்த்தது உனக்கு ஞாபகம் இருக்கும்.

இந்தியாவில் இன்னும் பல அரசர்களும் மஹாராஜாக்களும் நவாபுகளும் நம்மிடையே இருக்கிறார்கள். அவர்கள் பகட்டான ஆடைகளை அணிந்து விலைபெற்ற மோட்டார் வண்டிகளில் செல்வதையும் தங்கள் சௌகரியத்திற்காக அளவற்ற பணத்தைச் செலவழிப்பதையும் நீ பார்க்கலாம். இதற்கெல்லாம் பணம் எங்கிருந்து வருகிறது? இது ஜனங்கள் கொடுக்கும் வரிப் பணத்திலிருந்தேதான் அவர்களுக்குக் கிடைக்கிறது. நாட்டுமக்களின் நன்மைக்காகப் பள்ளிக்கூடங்கள் வைக்கவும், புஸ்தகசாலைகள், ஆஸ்பத்திரிகள், கண்காட்சிச் சாலைகள் ஏற்படுத்தவும், நல்ல ரஸ்தாக்கள் போடவும் மக்களுக்கு வேண்டிய வேறு பல சௌகரியங்களைச் செய்யவுமே பிரஜைகளிடமிருந்து வரி வசூல் செய்யப்படுகின்றது. ஆனால் நம் அரசர்கள் மஹாராஜாக்கள் ஒவ்வொருவரும், "நான்தான் ராஜ்யம்" என்று பழைய பிரான்சு தேசத்தரசன் நினைத்தது

போல் இன்னும் நினைக்கிறார்கள். பிரஜைகளின் பணத்தைத் தங்களது இன்பவாழ்க்கைக்காகவே செலவழிக்கின்றனர். மஹாராஜாக்கள் டாம்பீகமாய்த் தம் வாழ்க்கையை நடத்த, கஷ்டப்பட்டு வேலை செய்து வரிகொடுக்கும் பிரஜைகள் பசியால் வருந்துகின்றனர். அவர்களுடைய குழந்தைகள் படிக்கப் பள்ளிக்கூடங்கள் இல்லை.

## 18

## பூர்விக நாகரிகங்கள்

குழுத்தலைவர்களைப்பற்றியும் அரசர்களைப் பற்றியும் போதிய அளவு பேசியாகிவிட்டது. இனி நாம் பூர்விக காலத்து நாகரிகங்களைப் பற்றியும் அக்காலத்தில் வசித்த ஜனங்களைப் பற்றியும் கவனிப்போம்.

இந்தப் பூர்விக காலத்து ஜனங்களைப்பற்றி நமக்கு அதிகமாக ஒன்றும் தெரியாதிருந்த போதிலும் பழைய கற்காலத்தவர்களைப்பற்றியும் (palaeolithic) புதிய கற்காலத்தவர்களைப் பற்றியும் (neolithic) நமக்குத் தெரிந்திருப்பதை விட அதிகமாகவே இவர்களைப்பற்றி அறிய இடமிருக்கிறது. பல்லாயிர வருஷங்களுக்கு முன்பு கட்டின பெரிய கட்டிடங்களின் பாழ்களை இன்றைக்கும் நாம் பார்க்கிறோம். இக்கட்டிடங் களையும், கோவில்களையும், அரண்மனைகளையும் பார்க்கும்போது அக்காலத்து மக்கள் எப்படிப் பட்டவர்கள், எப்படி வாழ்ந்தார்கள் என்பதைப் பற்றி உத்தேசமாக நாம் அறிந்துகொள்ள முடிகிறது. முக்கியமாக, இப்பழைய கட்டிடங் களிலுள்ள சிலைகளும் சிற்பவேலைப்பாடுகளும் இதற்கு மிகவும் உதவியாக இருக்கின்றன.

இச்சிலைகளினின்றும் பழைய காலத்து மனிதர்கள் எம்மாதிரி ஆடை தரித்தார்கள் என்பது போன்ற பல விவரங்களும் சில சமயங்களில் நமக்குத் தெரியவருகின்றன.

முதல் முதலில் மனிதர்கள் எங்கே குடியேறி நாகரிகத்தை வளர்த்தார்கள் என்பதை நாம் தீர்மானமாகச் சொல்லமுடியாது. அத்லாந்திக் மஹா சமுத்திரத்தின் நடுவில், பண்டைக் காலத்தில் அத்லாண்டிஸ் என்ற ஒரு பெரிய தேசம் இருந்ததாகச் சொல்லுகிறார்கள். இந்தத் தேசத்தில் ஜனங்கள் வசித்திருந்ததாகவும், அவர்கள் அதிக நாகரிகம் அடைந்திருந்த தாகவும், ஒரு காலத்தில் அத்லாந்திக் மஹா சமுத்திரம் பொங்கியதால் அத்தேசம் மூழ்கிப் போயிற்றென்றும் சொல்லுகிறார்கள். இதற்குச் சாக்ஷியம் ஒன்றும் இல்லை. எல்லாம் கதைகளே. ஆகவே நாம் இதை விட்டுவிடலாம்; கவனிக்க வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்தபடியாக, அமெரிக்காவில் பண்டைக் காலத்தில் பிரசித்திபெற்ற நாகரிகங்கள் இருந்துவந்ததாகச் சொல்கின்றனர். கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததாகச் சொல்கின்றனர். அது உனக்குத் தெரியும். இதனால், கொலம்பஸ் கண்டுபிடிப்பதன் முன்பு அமெரிக்கா அவ்விடத்தில் இருக்கவில்லையென்று எண்ணக் கூடாது. அதாவது, ஐரோப்பாவிலுள்ள ஜனங்களுக்குக் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு

பிடிப்பதற்கு முன்பு அமெரிக்காக் கண்டத்தைப் பற்றித் தெரியாமல் இருந்தது. கொலம்பஸ் அங்கே போவதற்குப் பல ஆண்டுகள் முன்னரே ஜனங்கள் வசித்துவந்தனர்; ஒருவாறு நாகரிகமும் படைத்திருந்தனர். வட அமெரிக்காவில் மெக்ஸிகோ நாட்டில் உள்ள யுகடான் என்ற ஊரிலும், தென் அமெரிக்காவிலுள்ள பெருவென்னும் தேசத்திலும் சிதைந்துபோன பழைய கட்டிடங்களைப் பார்க்கலாம். ஆகவே யுகடானிலும் பெருவிலும் பல்லாண்டுகளுக்கு முன்னர் நாகரிகம் படைத்த மக்கள் வசித்திருந்தனர் என்பது தெளிவு. இக்காலத்தில் அவர்களைப்பற்றி அதிகமான விவரங்கள் நமக்குக் கிடையாவாகையால் இதற்குமேல் விசேஷமாக நாம் ஒன்றும் சொல்ல இடமில்லாமல் இருக்கிறது. ஒரு சமயம், பின்னுல் நாம் அவர்களைப்பற்றிய முழு விவரங்களையும் தெரிந்துகொள்ள நேரிடலாம்.

ஐரோப்பாவும் ஆசியாவும் சேர்ந்த யூரேஷியா என்ற கண்டங்களில், மெஸபொடேமியா, எகிப்து, க்ரீட், இந்தியா, சீனம் போன்ற தேசங்களிலேதான் பண்டைக்காலத்தில் நாகரிகம் முதல் முதலாக ஏற்பட்டது. எகிப்து தேசம் ஆப்பிரிகாவில் இருந்தாலும், அது ஐரோப்பாவையும் ஆசியாவையும் சேர்ந்தாற்போல் இருப்பதால், அது யூரேஷியாவைச் சேர்ந்தது என்றே சொல்லலாம். எந்த இடத்தில் ஆகாரப் பொருள்களை எளிதிற் பயிர்செய்ய முடியுமோ அந்த

இடத்தில் நாடோடிகளான பழைய ஜாதியினர் குடியேறினர். ஏனென்றால் அவர்கள் அந்தக் காலத்தில் வயல்களில் பயிர்செய்து விளைந்த தானியங்களையும் சாப்பிட்டு வந்தார்கள். விவசாயத்திற்கு நீர்வளம் இன்றியமையாதது. நீர் இல்லாவிடில் வயல்கள் வறண்டுபோகும்: அவற்றில் புல்லும் வளராது. பருவகாலத்தில் போதிய அளவு மழைபெய்யாவிடில் இந்தியாவில் தானியங்களைப் பயிர் செய்ய முடியாமற் போகிறது. அதனால் நாடெங்கும் பஞ்சம் ஏற்படுகிறது. உண்ண உணவின்றி ஏழைகள் பட்டினி கிடக்கின்றனர். ஆகையால் தண்ணீர் வசதி மிகவும் அவசியம். ஆகவே எந்த இடத்தில் ஏராளமான தண்ணீர் வசதி இருந்ததோ, அந்த இடத்தில் பண்டைக்காலத்தவர்கள் குடியேறியிருக்கவேண்டும். இது முற்றும் உண்மை என்பது இப்போது நமக்குத் தெரிகிறது.

மெஸபொடேமியாவில் டைக்ரீஸ், யூப்ரடீஸ் என்ற நதிகளுக்கிடையில் உள்ள செழிப்பான இடத்தில் அவர்கள் குடியேறினார்கள்; எகிப்து தேசத்தில் நீல நதிக்கரையில் குடியேறினார்கள். இந்தியாவில் கங்கை யமுனா நதிக்கரைகளில் அவர்கள் குடியேறிய இடங்களில் பெரிய பெரிய நகரங்கள் உண்டாயின. அவர்களுக்கு உணவையும் செல்வத்தையும் அளித்த நீர்வளம் மிகுந்த நதிகளைப் புனிதமாக அவர்கள் கருதினார்கள். அவர்களின் வாழ்க்கைக்கு நீர் அத்துணை இன்றி

யமையாததாயிருந்தது. எகிப்து தேசத்தில் நீல நதியை அவர்கள், "எங்களப்பன் நீலன்" என்று வணங்கி வந்தார்கள். இந்தியாவிலும் கங்கையை வணங்கிவந்தார்கள். இன்றைக்கும் ஜனங்கள் அதை ஒரு புண்ணிய நதியெனக் கருதுகின்றனர். அதைக் "கங்கம்மா" (गंगा माई) என்று கூப்பிடு கிறார்கள். யாத்திரிகர்கள் 'கங்காமாயி கி ஜய்' (गंगा माई की जय) என்று முழங்குவதை நீ கேட்டிருக்கலாம். ஜனங்கள் நதிகளை இங்ஙனம் வணங்குவதற்கு நதிகளினால் அவர்களுக்கு உண்டாகும் பலவகை நன்மைகளே காரணம். இந்நதிகள் அவர்களுக்குத் தண்ணீரைக் கொடுப்பதல்லாமல் வயல்களுக்குச் செழிப்பைத் தரும் வண்டல்களையும் மணலையும் வழங்குகின்றன. ஆற்றின் தண்ணீர் வசதியாலும் மணல்வண்டல்களாலும் நிலம் ஏராளமான உணவைக் கொடுத்தது. இதனால்தான் நதியை 'அப்பன்' என்றும் 'அம்மை' என்றும் அழைக்கிறார்கள் என்பதை ஜனங்கள் மறந்துவிடுகின்றனர். நீல நதியையும் கங்கை நதியையும் ஜனங்கள் புனிதமானவையென்று கருதி வணங்குவதற்குக் காரணம் அவை தண்ணீரும் உணவும் கொடுப்பதனால்தான் என்று நாம் நினைக்கவேண்டும்.

## 19

## பண்டை உலகத்தின் பெரிய நகரங்கள்

உணவுப்பொருள்களும் ஜலவசதியும் உள்ள பெரிய நதிக்கரை ஓரங்களிலும் செழிப்பான பள்ளத்தாக்கிலும் ஜனங்கள் முதல் முதலில் குடியேறினார்கள் என்பதை நாம் அறிந்தோம். அவர்களுடைய பெரிய நகரங்கள் யாவும் நதிக்கரையோரமாகவே கட்டப்பட்டன. இப் புராதனமான பெரிய நகரங்களிற் சிலவற்றைப் பற்றி நீ முன்னரே கேள்விப்பட்டிருக்கலாம். மெஸபொடேமியாவில் பாபிலோன், நினேவே, அசர் என்ற நகரங்கள் பிரசித்திபெற்றிருந்தன. ஆயினும் வெகு நாட்களுக்கு முன்பே இவை அழிந்துபோனமையால் தற்காலத்தில் ஜனங்கள் அவ்விடங்களில் ஆழமாகத் தோண்டிப் பார்க்கும் போது பாழடைந்த அந்நகரங்களின் கட்டிடங் களும் அமைப்பும் தோன்றுகின்றன. பல்லாயிர வருஷங்களாக அவற்றை மணலும் மண்ணும் முற்றும் மூடிவிட்டமையால் அவற்றின் அடை யாளம் ஒன்றுமே இப்போது இல்லாமற் போய் விட்டது.

சிற்சில இடங்களில் அழிந்துபோன நகரத் தின்மீது புதிய நகரத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

இப்புராதன நகரங்களைப்பற்றி அறிய வேண்டு பவர்கள் கீழே அதிக ஆழம் மண்ணைப் பறிக்க வேண்டியிருந்தது. அப்போது சிற்சில சமயங் களில் ஒரே நகரின்மீது மற்றொன்று கட்டப் பட்ட பல நகரங்களைக் கண்டனர்.

இந்நகரங்களெல்லாம் ஒரே காலத்தில் கட்டப்படவில்லை. ஒரு நகரம் பல நூற் றாண்டுகள் செழித்து வளர்ந்திருக்கும். அதில் ஜனங்கள் வசித்தும் இறந்தும் இருப்பார்கள். அவர்களின் குழந்தைகளும் பேரப் பிள்ளைகளும் அதிலேயே வசித்துப் பிறகு இறந்திருப்பார்கள். நாட்கள் செல்லச் செல்ல ஜனங்கள் அதை விட்டு நீங்கவே வெகு சிலரே அங்கே வசித்திருந் தார்கள். நகரம் க்ஷீணித்தது. கடைசியாக, அந்நகரம் வசிப்பாரற்று இடிந்து பாழடைந் தது. மண்ணும் மணலும் துரும்பும் தூசியும் குவிந்து அந்நகரத்தை மூடிக்கொண்டன. அவற்றை அகற்றுவாரற்று நகரம் பாழடைந் தது. பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தபின்னர் நகரம் முழுதும் இவ்விதமாக மண்ணாலும் தூசி யாலும் மூடப்பட்டு மறைந்துபோகவும், ஜனங் களுங்கூட ஒரு காலத்தில் இங்கே ஒரு நகரம் இருந்தது என்பதை மறந்துபோயினர்.

இது நடந்த பல நூறு வருஷங்களுக்குப் பின் னர் அந்நகருக்கு வேறு ஜனங்கள் வந்து தங்கி அப் பாழடைந்த நகரத்தின்மீதே மறுபடியும் புதிதாக ஒரு நகரத்தைக் கட்டியிருக்கவேண்டும். இப்

புதிய நகரமும் முதலிற் கூறிய நகரத்தைப்போல் பாழடைந்து குடிகளற்றுச் சிதைந்துபோயிருக்க வேண்டும். நாளடைவில் இந்நகரமும் மண்ணாலும் தூசியாலும் மூடப்பட்டு மறைந்தது. ஆகவே பல நகரங்களின் பாழ்கள் ஒன்றன் மீது ஒன்றாக இருப்பதை நாம் பார்க்கலாம். மணற்பாங்கான பிரதேசங்களில் நகரங்கள் இவ்வாறு வெகு சீக்கிரத்தில் பாழடைந்தன. ஏனென்றால் வெகு சீக்கிரத்தில் நகரங்களை மூடிப் பாழாக்கும் சக்தி மணலுக்கு உண்டு.

ஒரு நகரத்திற்குப் பிறகு அதன் மேல் மற்றொரு நகரம் எழுவதும், அதில் திரள் திரளான ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் வசிப்பதும் பிறகு அவர்களெல்லாம் க்ஷீணித்து மறைந்து போவதும் ஆச்சரியமல்லவா? பழைய நகரங்களின்மீது புது நகரங்கள் முளைக்கின்றன; புது ஜனங்கள் கூட்டங் கூட்டமாக அவற்றில் வந்து வசிக்கின்றனர். அவர்களும் தங்களுக்குப் பின்னால் எவ்விதமான துப்பும் அடையாளமும் விடாமல் மடிந்து போகின்றனர். இந்நகரங்களைப் பற்றிச் சில வாக்கியங்களில் நான் எழுதிவிட்டேன். ஆனால் இந்நகரங்களெல்லாம் நன்றாக மேன்மையடைந்து பிறகு க்ஷீணித்துப் போக எத்தனை ஆயிரம் வருஷங்கள் சென்றிருக்கும்! இவைகளுக்குப் பின்னர் வேறு நகரங்கள் ஏற்பட்டு வளர எவ்வளவு ஆயிர வருஷங்கள்

சென்றிருக்கும்! எழுபது அல்லது எண்பது ஆண்டுகள் நிறைந்த ஒரு மனிதனை நாம் வயதானவன் என்று சொல்லுகிறோம். ஆயினும் இப்பல்லாயிர வருஷங்களைப்பற்றி நினைக்கும் போது இந்த எழுபது எண்பது வருஷங்கள் எம்மட்டு? இந்நகரங்கள் செழித்திருந்தபோது இவற்றில் எவ்வளவு சிறிய குழந்தைகள் பிறந்து வளர்ந்து பெரியவர்களாகி வயதடைந்து இறுதியில் இறந்திருக்கவேண்டும்! இப்போது பாபிலோனும் நினேவேயும் பெயரளவில் இருக்கின்றன.

ஸிரியா தேசத்தில் உள்ள டமாஸ்கஸ் மற்றொரு பிரசித்தி பெற்ற நகரம். ஆனால் டமாஸ்கஸ் அழிந்து போகவில்லை. இன்றைக்கும் அந்நகரம் ஒரு பெரிய நகராக விளங்குகிறது. இக்காலத்தில் உலகத்திலுள்ள நகரங்களெல்லாவற்றினுள்ளும் இதுவே புராதனமானது என்று பலர் சொல்லுகிறார்கள்.

இந்தியாவிலுங்கூட நம் பெரிய நகரங்களெல்லாம் நதிக்கரையிலேயே கட்டப்பட்டிருக்கின்றன. மிகவும் புராதனமானவைகளில் இந்திரப்பிரஸ்தம் என்பது ஒரு நகரம். இது டில்லிக்குச் சமீபத்தில் இருந்தது. ஆனால் இக்காலத்தில் இந்திரப்பிரஸ்த நகரம் இல்லை. வாராணசி என்று சொல்லும் காசியும் புராதனமானதே; உலகத்திலுள்ள மிகப் புராதனமான நகரங்களுள் இதுவும் ஒன்று என்றுகூடச்

சொல்லலாம். நீ நினைக்கக்கூடிய மற்றும் பல பெரிய நகரங்களான அலஹாபாத், கான்பூர், பாட்னு போன்ற இன்னும் பல நகரங்களும் நதிக்கரையிலேயே அமைந்திருக்கின்றன. ஆனல் இவற்றுள் பிரயாகை அல்லது அலஹாபாத், பாட்னு அல்லது பாடலீபுத்திரம் இவையே புராதன நகரங்கள்; மற்றவை அத்தகையன வல்ல.

இவ்வண்ணமே சீனதேசத்திலும் பல புராதன நகரங்கள் இருக்கின்றன.

## 20

## எகிப்தும் கிரீட்டும்

**ப**ண்டைக்காலத்தில் இந்நகரங்களிலும் கிராமங்களிலும் வசித்துவந்த மனிதர்கள் எத்தன்மை வாய்ந்தவர்கள்? அவர்கள் கட்டிய பெரிய கட்டிடங்களினின்றும், வீடுகளினின்றும் நாம் அவர்களைப்பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளலாம்; கற்பலகைகளின்மீது அவர்கள் எழுதிவைத்திருப்பதினின்றுங்கூட அறியலாம். மற்றும் அக்காலத்து வரலாறுகளை நமக்கு உரைக்கும் சில புராதன நூல்களும் இருக்கின்றன.

எகிப்து தேசத்தில் முக்கோணக் கோபுரங்களும் (Pyramids) ஸ்பிங்ஸூம் (Sphinx), லக்ஸாரிலும் மற்றும் பல இடங்களிலும் பல கோயில்களும் நாம் இன்றளவும் பார்க்கலாம். நாம் சூயஸ் கால்வாயைக் கடந்து செல்லும் போது அவையெல்லாம் நமக்குச் சமீபத்தில் இருந்தனவெனினும் நீ அவற்றைப் பார்த்ததில்லை. ஆனால் நீ அவற்றின் படங்களைப் பார்த்திருக்கிறாய். ஒருகால் உன்னிடம் கார்டில்

அச்சடிக்கப்பட்ட அவற்றின் படங்களும் இருக்கலாம். ஸ்பிங்ஸ் என்பது பெண்ணின் தலையுள்ள ஒரு சிங்கத்தின் உருவம். அது மிகவும் பெரிது. அதை எதற்காகச் செய்தார்கள் என்பதும் அது என்ன கருத்தைக் குறிக்கிறது என்பதும் ஒருவருக்கும் தெரியாத விஷயமாகும். அப்பெண்ணின் முகத்தில் புன்சிரிப்புத் தோன்றுகிறது. எதைப் பார்த்து அப்பெண் புன்னகை கொண்டாள் என்பது யாவருக்கும் ஒரு விந்தையாக இருக்கிறது. ஒரு மனிதன் 'ஸ்பிங்ஸ்' மாதிரி இருக்கிறுன் என்ருல் அவனுடைய நோக்கம் எண்ணம் முதலியவற்றை அறிந்துகொள்ள முடியவில்லையென்று அர்த்தம்.

இம்முக்கோணக் கோபுரங்களெல்லாம் மிகப் பெரிய கட்டிடங்கள். உண்மையில் இவைகளினுள் எகிப்து தேசத்துப் புராதன அரசர்களான பாரோக்கள் (Pharoahs) என்பவர்களை அடக்கம் செய்திருக்கிறுர்கள். லண்டன் நகரில் கண்காட்சிச் சாலையில் எகிப்து தேசத்து உலர்ந்த சவங்களை (mummies) வைத்திருப்பதை நீ பார்க்கவில்லையா? நாற்றம் வீசாமலும் அழுகிப்போகாமலும் இருக்கும்படி எண்ணெய் தடவி வாசனை ஊட்டி வைத்திருக்கும் உலர்ந்த மானிட சவம் அல்லது மிருகத்தின் சவத்திற்கு 'மம்மி' என்று பெயர். பாரோக்கள் இறந்ததும் அவர்களின் சவத்திற்கு எண்ணெய் தடவி வாசனையேற்றி அவற்றை இம்

முக்கோணக் கோயில்களில் அடக்கம் செய்தனர். அச்சவங்களுக்குப் பக்கத்தில், வெள்ளியினுலும் தங்கத்தாலும் செய்த ஆபரணங்களேயும் நாற்காலிகளேயும் பெட்டிகளேயும் ஆகாரங்களேயும் வைத்தார்கள். இறந்த பிறகுங்கூடப் பாரோக்களுக்கு இவை வேண்டியிருக்கு மென்றே எண்ணினர்களாம். இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன்பாக துதாங்காமன் என்ற பாரோவின் சவத்தை இம் முக்கோணக் கோயில்கள் ஒன்றினுள் கண்டார்கள். அந்தப் பாரோவைச் சுற்றி அழகானவையும் விலேபெற்றவையுமான சாமான்கள் பல இருந்தன.

அக்காலத்திலுங்கூட, எகிப்து தேசத்தில் வியவசாயம் செய்யவும் நீர்ப்பாசன வசதிகளே ஏற்படுத்தவும் அழகான கால்வாய்களேயும் குளங்களேயும் வெட்டினர்கள். மெரிடு என்ற ஓர் ஏரி மிகவும் பிரக்கியாதி பெற்றிருந்தது. புராதன எகிப்தியர் எவ்வளவு சாமர்த்தியமும் முன்னேற்றமும் அடைந்திருந்தார்கள் என்பது இவற்றினின்று நன்ருக விளங்குகிறது. இங்ஙனம் பெரிய கால்வாய்களேயும், ஏரிகளேயும், பெரிய முக்கோணக் கோயில்களேயும் கட்டும் திறமை வாய்ந்த எஞ்ஜினீயர்கள் அக்காலத்தில் எகிப்து தேசத்தில் இருந்திருக்கவேண்டும்.

கிரீட் அல்லது காண்டியா என்பது மத்தியதரைக் கடலில் உள்ள ஒரு தீவு. போர்ட் ஸெத்திலிருந்து (Port Said) வெனீஸு (Venice) க்குப்

போகும்போது நாம் அதைத் தாண்டிச் சென்ருேம். இச்சிறிய தீவில் பண்டைக் காலத்தில் ஒரு சிறந்த அழகிய நாகரிகம் ஓங்கிவளர்ந்திருந்தது. கிரீட்டில் க்நாஸாஸ் என்ற ஊரில் ஒரு மகத்தான அரண்மனை இருந்தது. சிதைந்து போய்ப் பாழடைந்த அதன் காட்சியை நாம் இன்றைக்கும் பார்க்கலாம். இந்த அரண்மனையில் நேர்த்தியான ஸ்நான அறைகளும் தண்ணீர்க் குழாய்களும் இருந்தன. ஸ்நான அறைகளும் தண்ணீர்க் குழாய்களும் நவீன நாகரிகத்தின் சிருஷ்டியென்று சில பேதையர் கருதுகின்றனர். மற்றும் மண்ணுல் செய்யப்பட்ட அழகிய மட்பாண்டங்களும், சிலைகளும், ஓவியங்களும், உலோகத்தாலும் தந்தத்திலுைம் செய்த வேலைப் பாடமைந்த சாமான்களும் இருந்தன. இச் சிறிய தீவான கிரீட்டில் ஜனங்கள் அமைதியாக வசித்து அதிக முன்னேற்றத்தை அடைந்தார்கள்.

மைடாஸ் என்ற அரசனின் கதையை நீ படித்திருப்பாய். அவன் தொட்டதெல்லாம் தங்கமாக மாறியதால் அவனுக்குப் பல கஷ்டங்கள் ஏற்பட்டன வென்பது உனக்குத் தெரியும். தன் ஆகாரத்தைத் தொட்டமாத்திரத்திலேயே அது தங்கமாக மாறியதாம். தங்கமாக மாறிய ஆகாரத்திஞல் என்ன பயன்? அவனுடைய பணப்பேராசைக்காக அவன் இவ்வாறு தண்டிக்கப்பட்டான். பார்க்கப்போனுல் இது

ஒரு கட்டுக்கதை. பொதுவாக எல்லோரும் எண்ணுவது போல், தங்கம் விலைபெற்ற பொருளாயிருந்தாலும் அது அவ்வளவு உபயோகமுள்ள பொருள் அன்று என்பதே இந்தக் கதையால் அறிந்துகொள்ளவேண்டிய நீதியாகும்.

இந்தக் கிரீட் தீவைப்பற்றிய மற்றொரு கதையையும் நீ கேட்டிருக்கலாம். அது, பாதி மனிதனும், பாதி எருது வடிவமுங்கொண்ட மினோடார் என்ற ராக்ஷஸனின் கதை. சிறுவர்களையும் சிறுமியர்களையும் இவனுக்கு ஆகாரமாகக் கொடுத்தார்களென்று கூறுவர். புலன்களுக்கு எட்டாமல் இருப்பவைகளிடத்து உண்டான அச்சமேதான் மதத்தைப் பற்றிய எண்ணத்தை ஜனங்களிடை உண்டாக்கிற்று என்று நான் உனக்கு முன்னரே சொல்லியிருக்கிறேன். இந்தப் பயத்தினாலும் இயற்கை நியதியையும், உலக வியவகாரங்களையும் அறியாததாலும் ஜனங்கள் மூடத்தனமான பல செயல்களைச் செய்கின்றனர். தங்களுக்குத் தெரியாத ஒரு ராக்ஷஸன் இருக்கிறான் என்று நம்பி அவர்கள் சிறுவர்களையும் சிறுமியர்களையும் பலியிட்டிருக்கவேண்டுமேயல்லது உண்மையான ராக்ஷஸன் யாருக்கும் பலியிட்டிருக்கமுடியாது. அம்மாதிரி ராக்ஷஸர்கள் இல்லையென்றே நான் எண்ணுகிறேன். எல்லாம் வெறும் பயம்; பிரமை.

உலகம் முழுவதும் அந்நாளில் நரபலி கொடுக்கும் வழக்கம் இருந்துவந்தது. அதாவது

ஆண்களையும் பெண்களையும், தாங்கள் தொழுது வந்தனவும் உண்மையில் இல்லாதனவுமாகிய தெய்வங்களுக்குப் பலி கொடுத்து வந்தனர். எகிப்து தேசத்தில் ஜனங்கள் பெண்களை நீல நதியில் எறிந்து பலி கொடுத்தார்கள். அப்படிச் செய்தால், 'அப்பன் நீலன் சாந்தியடைவான், சந்தோஷப்படுவான்' என்று எண்ணினார்கள்.

அதிருஷ்டவசமாக, இக்காலத்தில் நரபலி கொடுக்கும் வழக்கம் நின்றுவிட்டது. சில சமயங்களில் உலகத்தில் தொலை தூரத்தில் எங்கேயாவது ஒரு மூலையில் நடப்பதைத் தவிர இது முற்றும் நின்றுவிட்டதென்றே சொல்லலாம். இப்பொழுதுங்கூட, ஜனங்கள் கடவுளைத் திருப்தி செய்வதற்காக மிருகங்களையும் பறவைகளையும் பலிகொடுக்கின்றனர். இவ்விதமாக வழிபடுவது என்பது யாருடைய வழிபாடாக இருந்தாலும் சரி, அது விபரீதமான வழிபாடேயாகும்.

## 21

## சீனதேசமும் இந்தியாவும்

**ப**ண்டைய நாகரிகங்கள் யாவும் மெஸ பொடேமியாவிலும், எகிப்து தேசத்திலும், மத்தியதரைக் கடலிலுள்ள சிறு தீவான கிரீட்டிலும் தலையெடுத்து ஓங்கிவளர்ந்தன வென்று கண்டோம். அதே சமயத்தில் இந்தியாவிலும் சீனத்திலும் மிகவும் மேன்மையான நாகரிகங்கள் தலையெடுத்து அவையிரண்டும் தத்தம் வழியே வளர்ந்துவந்தன.

மற்ற இடங்களில் செய்ததைப் போலவே சீன தேசத்திலும் ஜனங்கள் நதிக்கரையில் குடியேறினார்கள். அவர்கள் மங்கோலிய வர்க்கத்தாரைச் சேர்ந்தவர்கள். அவர்கள் முதலில் வெண்கலத்தாலும், பிறகு இரும்பினாலும் அழகான பாத்திரங்களைச் செய்தனர். கால்வாய்களை வெட்டினார்கள். அழகிய கட்டிடங்களைக் கட்டினார்கள். எழுதுவதில் ஒரு புதிய முறையையும் கண்டுபிடித்தார்கள். அவர்கள் எழுத்துக்கும், நாம் எழுதும் ஆங்கிலம், ஹிந்தி உருது ஆகிய எழுத்துக்களுக்கும் அதிக வேறு

பாடு உண்டு. அவர்கள் எழுதுவது ஒரு விதமான சித்திரலிபியாகும். ஒவ்வொரு வார்த்தையும், சிற்சில சமயங்களில் ஒரு சிறு வாக்கியங்கூடச் சித்திரங்களாகவே எழுதப்பட்டன. அவற்றை இப்போது ஹீரோக்ளிபிக் (Hieroglyphic) எழுத்துக்கள் என்கின்றனர். இம்மாதிரி எழுத்துக்களைச் சில கண்காட்சிச் சாலைகளிலும், புஸ்தகங்களிலும் நீ பார்த்திருக்கலாம். எகிப்திலும் மேல் நாடுகளிலும் இவ்வெழுத்துக்களை நாம் புராதனக் கட்டிடங்களில்தான் காணலாம். இவ்வெழுத்துக்களை அந்நாடுகளில் ஜனங்கள் எழுதும் வழக்கத்தை விட்டுப் பல வருஷங்களாகின்றன.

ஆனால், சீன தேசத்தில் இன்றைக்கும் ஜனங்கள் எழுதும் எழுத்துக்களெல்லாம் ஒரு வகைச் சித்திரவெழுத்துக்களே. அவற்றை மேலிருந்து கீழே எழுதவேண்டும். நாம் ஹிந்தி, இங்கிலீஷ் எழுதுவது போல இடமிருந்து வலமாகவோ, உருது எழுதுவது போல் வலமிருந்து இடமாகவோ அல்ல.

இந்தியாவில் பாழடைந்து சிதறுண்டுபோன பல புராதனக் கட்டிடங்களெல்லாம் இன்றும் மணலால் மூடப்பட்டுப் பூமியில் புதைந்து கிடக்கின்றன வென்று எண்ணுகிறேன். யாராவது ஒருவர் தோண்டிப் பார்க்கும்வரை அவைகளெல்லாம் நம் கண்மறைவாகவே இருக்கும். எனினும் வடக்கே ஏற்கனவே

புதைந்துபோன புராதனமான ஒரு நகரத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். ஆரியர்கள் இந்தியாவுக்கு வருவதற்கு ஆயிரம் வருஷங்களுக்கு முன்னரே இத்தேசத்தில் திராவிடர்கள் வசித்து வந்தார்களென்றும் அவர்கள் அதிக நாகரிகம் படைத்திருந்தார்களென்றும் நமக்குத் தெரிய வருகிறது. அவர்கள் அன்னிய நாட்டினரோடு வியாபாரம் செய்துவந்தனர்; மெஸபொடேமியாவுக்கும் எகிப்துக்கும் தங்கள் சரக்குகளை அனுப்பிவந்தார்கள். முக்கியமாகக் கடலைத் தாண்டி, அரிசி மிளகு போன்ற வாசனைத் திரவியங்கள், வீடுகட்டத் தேக்கு மரங்கள் இவற்றையும் வியாபாரம் செய்தார்கள்.

மெஸபொடேமியாவிலிருக்கும் உர் என்ற நகரத்தில் உள்ள மிகவும் புராதனமான அரண்மனைகளுள் சில, தென்னிந்தியாவிலிருந்து அனுப்பப்பட்ட தேக்கு மரத்தினால் கட்டப்பட்டனவென்று சொல்லுகிறார்கள். மற்றும், தென்னிந்தியாவிலிருந்து மேல்நாடுகளுக்குத் தங்கமும், முத்தும், யானைத் தந்தமும், மயில்களும், குரங்குகளும் அனுப்பினார்களென்றும் அறிகிறோம். இந்தியாவிற்கும் மற்றத் தேசங்களுக்குமிடையே அக்காலத்தில் ஏராளமான போக்குவரத்தும் வியாபாரமும் நடந்திருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஜனங்கள் நாகரிகம் அடைந்திருந்தால் தான் வியாபாரம் நிலைபெறும்.

இந்தியாவிலும் சீனத்திலும் அக்காலத்தில் சிறிய சிறிய ஸம்ஸ்தானங்களும் அரசாங்கங்களும் இருந்தன. இவ்விரண்டு தேசங்களில் ஒன்ருவது ஓர் ஆட்சியின் கீழ் முழுவதும் இருக்கவில்லை. ஒவ்வொரு நகரமும், அதைச் சுற்றியிருந்த கிராமங்களும் வயல்களும் தனித் தனி அரசாங்கங்களாக இருந்தன. இவைகளுக்கெல்லாம் **நகர அரசுகள்** (City States) என்று பெயர் சொல்வார்கள். இந்நகர அரசாங்கங்களிற் பல, அந்நாளிலேயே குடி அரசுகளாக (Republics) விளங்கின. அரசர்கள் இருக்கவில்லை. அரசாங்கத்தை நிர்வகிக்க ஒரு பஞ்சாயத்துச் சபையைத் தேர்ந்தெடுத்தார்கள். இவற்றுள் சிலவற்றை அரசர்களும் ஆண்டுவந்தார்கள். நகர அரசுகள் தனித்தனியாக ஆண்டு வந்தபோதிலும் சிற்சில சமயங்களில் அவைகளெல்லாம் உறவு பூண்டு, ஒன்றற்கு ஒன்று உதவி செய்தன. சில சமயங்களில் ஒரு பெரிய ராஜ்யம் அநேக சிறிய ராஜ்யங்களுக்குத் தலைமை பெற்று விளங்கியது.

சீனதேசத்தில் இச்சிறிய அரசுகள் எல்லாம் ஒரு பெரிய அரசில் மறைந்து ஏகாதிபத்தியம் ஏற்பட்டது. ஏகாதிபத்தியம் செழித்தோங்கிய காலத்தில்தான் சீனதேசத்தின் பெரிய மதிற்சுவரைக் (The great wall of China) கட்டினுர்கள். இம்மதிற்சுவரைப்பற்றி நீ படித்திருக்கிருய். இந்தச் சுவர் எவ்வளவு

பெரிய சுவர்! சமுத்திரக்கரையிலிருந்து வடக்கே உயர்ந்த மலையுச்சிவரை, வடக்கேயிருந்து வரும் மங்கோலியர்களின் படையெழுச்சியைத் தடுத்து அவர்கள் சீனதேசத்திற்குள் வராமல் இருக்க, இம்மதிற்சுவரைக் கட்டினார்கள். இது 1400 மைல் நீளமும் 20 முதல் 30 அடிவரை உயரமும் 25 அடி அகலமும் உள்ளது. இதன் நடுவில் உயர்ந்த கூண்டுகளும் (towers) கோட்டைகளும் ஆங்காங்கு உண்டு. இந்தியாவில் இம்மாதிரி ஒரு சுவரைக் கட்டினால் அது வடக்கே லாகூரிலிருந்து தெற்கே சென்னை வரையிலும் இருக்கும். இப்பெரிய மதிற்சுவர் இன்றைக்கும் இருக்கிறது. சீனதேசத்துக்குப் போக நேர்ந்தால் நீ அதை இன்றும் பார்க்கலாம்.

## 22

### கடற்பிரயாணமும் வியாபாரமும்

**ப**ண்டைக்காலத்து ஜனங்களுள் நம் கவனத்தைக் கவரும் மற்ெருரு ஜாதியினர் **பினீஷியர்** என்பவர்கள். அராபியர்களும் யூதர்களும் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களோ அதே ஜாதியைச் சேர்ந்தவர்கள் இந்தப் பினீஷியர். இவர்கள் ஆசியா மைனரின் (Asia Minor) மேற்குக்கரையோரத்தில், தற்காலத்துத் துருக்கி தேசத்தில் வசித்து வந்தார்கள். மத்தியதரைக் கடலின் கரையிலுள்ள ஏக்கர் (Acre), டைர் (Tyre), சிடன் (Sidon) என்பவைகளே அவர்கள் வசித்துவந்த முக்கியப் பட்டினங்கள். வியாபாரத்தின் நிமித்தமாகக் கடலில் நீண்ட நாட்கள் பிரயாணம் செய்வதில் அவர்கள் சிறப்பை அடைந்திருந்தார்கள். அவர்கள் மத்தியதரைக் கடல் முழுதும் யாத்திரை செய்து கடைசியாக இங்கிலாந்தின் கரையையும் எட்டினுர்கள்; இந்தியாவுக்குக்கூட வந்திருக்கலாம்.

அக்காலத்தில்தான் கடல் பிரயாணம், வியாபாரம் என்னும் இரண்டு ஸ்வாரஸ்யமுள்ளனவும் மகத்தானவையுமான விஷயங்கள் ஆரம்ப

மாயின. ஒன்றுக்கொன்று உபகாரமாக இருந்தன. இக்காலத்தில் நீ பார்க்கும் நீராவிக்கப்பல்களும், பெரிய வியாபாரக்கப்பல்களும் அக்காலத்தில் இல்லை. முதலில் ஏற்பட்ட படகுகளெல்லாம் சாதாரண மரத்தின் அடிப்பாகத்தைக் குடைந்து செய்த மரக்கலங்களாகவே இருந்திருக்கவேண்டும். கைத்துடுப்புகளைக்கொண்டு தண்ணீரை விலக்கி மரக்கலத்தை ஓட்டுவார்கள். பாய்மரங்களைக் கட்டிப் படகைக் காற்றில் விசையாக ஓடவும் செய்வார்கள்.

அக்காலத்தில் சமுத்திர யாத்திரை மயிர் சிலிர்க்கும் அனுபவமுள்ளதாகவும் ருசிகரமுள்ளதாகவும் இருந்திருக்கும். கைத்துடுப்பும் பாய் மரமும் கூடிய ஒரு சிறிய படகில் அரபிக் கடலைத் தாண்டுவதென்றால், என்ன, எளிதான வேலையா? நினைத்துப் பார். அதில் நகருவதற்கும் இடம் அரிதாயிருந்திருக்கும்; சிறிது காற்றடித்தாலும் அது சுழன்றும் தலைகீழாகப் பாய்ந்தும் சில சமயங்களில் மூழ்கியும் போயிருக்கலாம். துணிவுள்ளவர்களே அக் காலத்தில், அம்மரக்கலங்களில் ஏறித் திக்குத் திசை தெரியாத பரந்த சமுத்திரத்தில் யாத்திரை செய்ய முன்வந்திருக்கவேண்டும்.

கடல் யாத்திரை துன்பம் நிறைந்தது. மாதக்கணக்காக அவர்கள் பூமியின் கங்குகரை தெரியாமல் பரந்த கடலில் தவித்திருக்க வேண்டும். சமுத்திர மத்தியில் பிரயாணம்

செய்யும்போது உணவு தட்டிப் போனால் மீன் பிடிக்கவாவது வேண்டும்; அல்லது பறவை களையாவது பிடிக்கவேண்டும். இவை இரண் டும் இல்லாவிடில் பட்டினி கிடக்கவேண்டியது தான். கடல் யாத்திரை நெஞ்சைக் கலக்கும் பயங்கரமான அனுபவங்களும் வீர ஸம்பவங் களும் நிறைந்தது. மாலுமிகளைப்பற்றியும் அவர் களுக்கு ஏற்பட்ட விசித்திரமான அனுபவங்களைப் பற்றியும், மனத்தைக் கவரும் பல பழங்கதைகள் உண்டு.

எனினும் இத்துன்பங்களைக் கவனியாமல் ஜனங்கள் சமுத்திர யாத்திரை செய்து பல தேசங்களுக்குச் சென்றனர். சிலர் தங்கள் வீரத்தைக் காட்டுவதற்காகவே அங்ஙனம் செய்திருக்கலாம். ஆனால் பெரும்பாலோர் தங்கத்தின்மீதும் பணத்தின்மீதும் தங்களுக்கு இருந்த ஆசையினாலேயே கடல் பிரயாணம் செய்தார்கள். தங்களிடம் உள்ள சரக்குகளைப் பிறநாட்டாருக்கு விற்கவும் பிறநாட்டுப் பொருள் களை வாங்கி வந்து தங்கள் நாட்டில் விலைசெய்து லாபம் பெறவும் அவர்கள் சென்றார்கள். இவ் விதமாக அவர்கள் பணம் சம்பாதித்தனர்.

வாணிகம் என்பது என்ன? அது எங்ஙனம் ஆரம்பித்தது? இக்காலத்தில் நீ பெரிய கடை களைப் பார்க்கிறாய். அக்கடைகளுள் நுழைந்து உனக்கு வேண்டும் சாமான்களை வாங்குவது மிகவும் எளிது. ஆனால் நீ வாங்கும் சாமான்

கள் எங்கிருந்து வருகின்றனவென்று எப்போதாவது நினைக்கிருயா? நீ அலஹாபாத்தில் ஒரு கம்பளிச் சால்வையை வாங்கலாம். அச்சால்வை வெகுதூரத்திற்கு அப்பாலுள்ள காஷ்மீரத்திலிருந்து வந்திருக்கலாம். அக்கம்பளி மயிரெல்லாம் காஷ்மீர், லடாக் மலைகளிலுள்ள ஆடுகளின் முதுகில் வளர்ந்தவையாயிருக்கலாம். நீ வாங்கும் பல்பசையானது கப்பலிலும் ரெயிலிலும் அமெரிக்காவிலிருந்து அலஹாபாத்திற்கு வந்திருக்கலாம். அவ்விதமே, சீனம், ஜப்பான், பாரிஸ், லண்டன் என்னும் இடங்களில் செய்த சாமான்களையும் வாங்கலாம்.

கடையில் விற்கும் அன்னியநாட்டுத் துணியைப்பற்றிச் சற்று ஆலோசிப்போம். அதற்கு வேண்டிய பருத்தி இந்தியாவில் விளைகிறது. அதை இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்கிருர்கள். இங்கிலாந்தில் ஒரு பெரிய யந்திரசாலையில் அப்பருத்தியைச் சுத்தப்படுத்தி நூலாக நூற்றுப் பிறகு அதினின்றும் துணி நெய்கிருர்கள். அந்தத் துணியேதான் மறுபடியும் இந்தியாவுக்கு வந்து கடையில் விற்பனையாகிறது. விற்பனைக்கேற்றதாக ஆவதற்கு முன்பு, முன்னும் பின்னுமாக அது எவ்வளவு ஆயிரம் மைல் யாத்திரை செய்திருக்கிறது! இந்தியாவில் உற்பத்தியாகும் பருத்தி தொலைதூரத்திலுள்ள இங்கிலாந்துக்குச் சென்று அங்கே துணியாக நெய்யப்பட்டுத் திரும்பியும் இங்கே வருகிறதென்ருல் அது

எவ்வளவு கேவலம்! இதனால் எவ்வளவு வீண் கஷ்டம்! பணச்செலவு, நேரச்செலவு! பஞ்சைத் துணியாக இந்தியாவிலேயே நெய்வதனால் விலை சரசமாவதுடன் தேசத்திற்கும் அனுகூலமாகும். நாம் அன்னியநாட்டுத் துணிகளை வாங்குவதும் இல்லை, அணிந்துகொள்வதும் இல்லையென்பது உனக்குத் தெரியுமே. நாம் கதரையே அணிகிறோம். ஏனென்றால் கூடியவரையில், நம் தேசத்தில் செய்யப்படும் சாமான்களையே வாங்குவதுதான் அறிவாளிகளுக்கு அழகு. நாம் கதரை வாங்கி அணிவதால் எளியவர்களான நூல் நூற்பவர்களையும், துணி நெய்பவர்களையும் ஆதரிப்பவர்களாகிறோம்.

இக்காலத்து வியாபாரம் ஒரு சிக்கலான விஷயமென்று உனக்கு இப்போது விளங்கும். பெரிய வியாபாரக்கப்பல்கள் ஒரு நாட்டினின்றும் மற்றொரு நாட்டிற்குச் சாமான்களை ஏற்றிச் செல்கின்றன. ஆனால் முன்பு இவ்விதம் நிகழவில்லை.

ஆதிகாலத்தில் மனிதர்கள் ஓர் இடத்தில் குடியேறியபோது வியாபாரமே இல்லாமல் இருந்தது. ஒருவன் தனக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் தானே தேடிக்கொண்டான்; அல்லது செய்துகொண்டான். ஆனால் அக்காலத்தில் அவனுடைய தேவைகளும் மிகச் சொற்பமாகவே இருந்தன. பிறகு நான் முன்பே கூறியபடி, குழுவினிடையே தொழிற்பிரிவுகள்

ஏற்பட்டன. ஜனங்கள் பலவகைத் தொழில் களைச் செய்து வெவ்வேறு விதமான பொருள் களை உண்டாக்கினர். சிற்சில சமயங்களில் ஒரு ஜாதியாரிடத்து ஏதாவது ஒரு பொருள் அதிக மாயும், மற்றொரு ஜாதியாரிடம் வேறு ஒரு பொருள் அதிகமாயும் இருந்திருக்கவேண்டும். ஆகவே, தங்களிடத்துள்ள பொருள்களை இவ் விரு ஜாதியார்களும் தங்களுக்குள் மாற்றிக் கொண்டிருக்கவேண்டும். உதாரணமாக, ஒரு ஜாதியினர் தங்களிடம் இருக்கும் மாட்டைக் கொடுத்து மற்ற ஜாதியாரிடமிருந்து ஒரு மூட் டைத் தானியத்தைப் பெற்றுக்கொண்டிருக் கலாம். அக்காலத்தில் நாணயங்கள் இல்லை. பண்டங்களைத்தான் மாற்றிக்கொள்ளவேண்டும். இதனால் பரிவர்த்தனை ஏற்பட்டது. இது மிகவும் அசௌகரியமாயிருந்திருக்கும். ஒருவனுக்கு ஒரு மூட்டைத் தானியம் வேண்டின், அவன் ஒரு மாட்டையாவது ஓட்டிக்கொண்டு போகவேண் டும், அல்லது இரண்டு ஆட்டுக்குட்டிகளை யாவது தூக்கிச் செல்லவேண்டும். ஆனாலும், இக்கஷ்டங்களுக்கு இடையே வியாபாரமும் வளர்ந்தது.

தங்கத்தையும் வெள்ளியையும் கண்டுபிடித் ததும் ஜனங்கள் அவற்றைக் கொடுத்து வியா பாரம் செய்ய ஆரம்பித்தார்கள். அவற்றை எடுத்துச் செல்வது எளிதாயிருந்தது. நாளடைவில் தங்கத்தையும் வெள்ளியையும்



சித்திர லிபி —ப. 127



நீராவிக் கப்பல் —ப. 132



பாய்மரக் கப்பல் —ப. 132



படகு —ப. 132



பலவகை நாணயங்கள் —ப. 137

கொடுத்துப் பொருள்களை வாங்கும் வழக்கம் ஏற்பட்டது. இதை முதல் முதலில் பழக்கத்தில் கொண்டுவந்த மனிதன் ஒரு பெரிய அறிவாளியா யிருந்திருக்கவேண்டும். தங்கத்தையும் வெள்ளி யையும் உபயோகிக்க ஜனங்கள் ஆரம்பித்ததும் வியாபாரம் மேலும் மேலும் அதிகரித்தது. ஆனால் தற்காலத்தில் இருப்பதுபோல அக்காலத்தில் நாணயங்கள் இருக்கவில்லை. தங்கத்தைத் தராசில் நிறுத்துப் பிறகு யாருக்குக் கொடுக்கவேண்டுமோ அவர்களுக்குக் கொடுத்தார்கள். பல வருஷங் களுக்குப் பின்னரே நாணயங்கள் ஏற்பட்டன. அதனால் வியாபாரமும் பரிவர்த்தனையும் எளிதில் நடைபெற வகை ஏற்பட்டது. யாவருக்கும் ஒரு நாணயத்தின் விலைமதிப்புத் தெரிந்திருந்த மையால் தராசில் வைத்து நிறுக்கவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

இக்காலத்தில் எங்கும் நாணயங்களைத்தான் உபயோகிக்கின்றனர். ஆனால் பணத்தால் மாத் திரம் நமக்கு ஒரு விதமான நன்மையும் இல்லை யென்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். நமக்கு வேண்டிய பொருள்களை நாம் அடைவதற்கு மாத்திரம் இது ஒத்தாசையாக இருக்கிறது. நம் சாமான்களைப் பரிவர்த்தனை செய்ய முடிகிறது. ஏராளமான தங்கத்தைப் பெற்றிருந்த மைடாஸ் என்ற அரசன் ஒன்றும் சாப்பிடமுடியாமற் போன கதை உனக்குத் தெரியும். ஆகவே, நமக்குத் தேவையான

பொருள்களைப் பெறுவதற்குப் பணம் உதவா விடில், அது பயனற்றதேயாகும்.

இக்காலத்திலுங்கூடச் சில சமயங்களில் சிறு கிராமங்களிலும் ஜனங்கள் தானியங்களைக் கொடுத்துத் தமக்கு வேண்டுவனவற்றை வாங்குகின்றனர். பணம் கொடுப்பதில்லை. ஆனால் பொதுவாகச் சௌகரியத்தைக் கருதிப் பணத்தைத்தான் உபயோகிக்கின்றனர். பணமேதான் எல்லாம் என்றெண்ணிப் பல மூட மனிதர்கள் அதைச் சேகரித்து வைக்கின்றனர்; செலவழிப்பதில்லை. பணம் எதற்காக ஏற்பட்டது, அதை எப்படி ஜனங்கள் உபயோகித்துவந்தனர், அது உண்மையில் என்ன ஆகிய விஷயங்கள் அவர்களுக்குச் சிறிதும் தெரியாவென்பது இதனால் நன்கு விளங்கும்.

## 23

## மொழியும் எழுத்தும் எண்ணும்

பல மொழிகளைப் பற்றியும், அவை ஒன்றுக்கொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டிருக்கின்றன வென்பதைப்பற்றியும் நாம் முன்பே கவனித்தோம். இருந்தாலும், மொழிகள் முதல் முதலில் எப்படி உண்டாயிருக்கலாமென்பதை நாம் சற்று யோசிப்போம்.

மிருகங்களுட் சில பேச்சுப் பேசுவதை நாம் காண்கின்றோம். எளிய விஷயங்களைத் தெரிவிக்கக் குரங்குகள் சில மொழிகளைப் பேசுகின்றன; அதாவது சில விதமாகக் கத்துகின்றன வென்று சொல்லுகிறார்கள். அவ்விதமே, வேறு மிருகங்களும் அச்சங்கொள்ளும்போதும், தங்களுக்கு நேரிடவிருக்கும் அபாயத்தைத் தம் இனங்களுக்குத் தெரிவிக்கும்போதும் ஒருவிதமான சத்தம் போடுவதையும் நீ உணரலாம்.

ஆதியிலே மனிதனும் மிருகங்களைப் போலவேதான் பேச ஆரம்பித்திருக்கவேண்டும். முதல் முதலில், பயத்தையும் எச்சரிக்கையையும் காட்டுவதற்கு மனிதர்கள் சில சப்தங்களைச் செய்திருப்பார்கள். இதற்கப்புறம், எல்லாரும்

ஒன்று கூடி வேலைசெய்யும்போது ஒருவிதமான சப்தம்போட ஆரம்பித்திருக்கலாம். பலர் கூடி வேலை செய்யும்போது எல்லோரும் சேர்ந்து ஒரு விதமாகச் சப்தம் போடுகிறார்கள். ஜனங்கள் ஒன்று சேர்ந்து ஏதாவதொன்றை இழுப்பதை நீ பார்த்ததில்லையா? அல்லது பலர் ஒன்று சேர்ந்து பளுவான சாமான்களைத் தூக்குவதைப் பார்த்ததில்லையா? எல்லாரும் ஒன்றாகச் சேர்ந்து கத்தினால் அது அவர்களுக்குச் சிறிது அனுகூலமாயிருக்கிறதுபோலும்! மனிதன் முதலில் பேசத் தொடங்கின வார்த்தைகளெல்லாம், இங்ஙனம் வேலை செய்யும்போது போட்ட கூச்சல்களும் சப்தமுமாகத்தான் இருந்திருக்கவேண்டும்.

பிறகு மெள்ள மெள்ள, எளிய வார்த்தைகளான நீர், நெருப்பு, குதிரை, கரடி முதலியவை பழக்கத்தில் வந்திருக்கவேண்டும். அவைகளில் பெயர்ச்சொற்கள்மட்டுமே இருந்திருக்கும். வினைச் சொற்களே இருந்திரா. ஒருவன் தான் கரடியைக் கண்டதாகப் பிறருக்குத் தெரிவிக்கவேண்டின் ‘கரடி’ என்ற ஒரு வார்த்தையை மாத்திரம் சொல்லி, ஒரு சிறு குழந்தையைப் போல் கையால் சுட்டிக் காட்டுவான். ஜனங்கள் அதிகமாகச் சம்பாஷணை செய்திருக்க முடியாது.

மொழி வளர்ந்தது. முதலில் சிறிய வாக்கியங்களும், பிறகு பெரிய வாக்கியங்களும் உண்டாயின. உலகத்திலுள்ள பல ஜனங்களும் எக்

காலத்திலும் ஒரே மொழியைப் பேசியிருக்கவும் மாட்டார்கள்; ஒரு காலத்தில், இக்காலத்தைப் போலப் பல்வேறு மொழிகள் இருந்திருக்கவும் முடியாது. நான் முன் கூறியதுபோல் ஆதியில் சில மொழிகளே இருந்தன. ஒரு குடும்பம் எப் படிப் பல கிளைகளாய்ப் பிரிந்து பரவுகின்றதோ அம்மாதிரியே ஒவ்வொரு மொழியினின்றும் பற்பல கிளைமொழிகள் உண்டாயின.

நாம் இப்போது பிரஸ்தாபித்துக் கொண் டிருக்கும் பூர்விக நாகரிகங்கள் ஓங்கிய காலத்தி லேயே மொழி நல்ல வளர்ச்சியை அடைந் திருந்தது. நல்ல பாட்டுக்களும் இருந்தன. அவற்றைப் பாடகர்களும் கவிகளும் பாடி னார்கள். அக்காலத்தில் எழுதும் பழக்கமும் புஸ்தகங்களும் இல்லாமையால் ஜனங்கள் இக் காலத்தவர்களைவிட அதிகமான விஷயங்களைத் தங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டி யிருந்தது. தேனிசை மொழியும் பாட்டுக்களை ஞாபகம் வைத்துக் கொள்வது எளிது. ஆகவே, பண்டை நாகரிகம் எந்த எந்த நாடுகளில் பரவி யிருந்ததோ, அந்த அந்தத் தேசங்களிலெல்லாம் இனிய இசையும் எளிய நடையும் பொருந்திய பாட்டுக்கள் ஜனங்களிடையே சாதாரணமாய்ப் பரவியிருந்தன.

மாண்டுபோன வீரர்களின் பிரதாபத்தைப் பாராட்டியே பாடகர்களும் கவிகளும் பாடி னார்கள். அக்காலத்து ஜனங்களுக்குச் சண்டை

யென்றால் அதிக உத்ஸாகம். ஆதலால் பாட்டுக் களெல்லாவற்றிலும் போர்வீரம் ததும்பியது. இந்தியாவிலும், மற்ற நாடுகளைப் போலவே இத்தகைய பாட்டுக்களை ஜனங்கள் பாடி வந்ததை நாம் காண்கின்றோம்.

எழுத்துக்கள் உண்டான விதமும் மிக ருசிகரமானது. சீன தேசத்தவர்கள் எப்படி எழுதுகிறார்கள் என்பதைப்பற்றி நான் முன்னமேயே சொல்லியிருக்கிறேன். எல்லா எழுத்துக்களும் ஆதியில் சித்திரங்களாகவே இருந்திருக்கும். மயிலைப் பற்றிய விவரங்களைச் சொல்லவேண்டிய ஒருவன் மயிலைப் போன்ற ஓர் உருவத்தை எழுதியிருப்பான். இவ்விதமாக எழுத ஆரம்பித்தால் ஒருவனும் அதிகமாக எழுத முடியாது. நாளடைவில் இச்சித்திர எழுத்துக்களெல்லாம் எளிய முறையில் எழுதப்பட்டன. வெகு காலத்திற்குப் பின் எழுத்துக்களின் அவசியத்தை உணர்ந்து எழுத்துக்களை உண்டாக்கினார்கள். அது முதற்கொண்டு எழுதுவதென்பது மிகவும் எளிதாயிற்று; வெகு சீக்கிரத்தில் இது பரவியது.

எண்களையும் கணக்குப் போடுவதையும் கண்டு பிடித்தது விந்தையினும் பெரிய விந்தையாகக் கருதப்பட்டிருக்கவேண்டும். கணக்கும் எண்களும் இல்லாமல் வியாபாரம் எங்ஙனம் விருத்தி அடையுமென்பதை எண்ணிப் பார்ப்பது இயலாததாகும். எண்களைக் கண்டுபிடித்த

மனிதன் மிக்க அறிவுடையவனாகவும் மேதாவியாகவும் இருந்திருக்கவேண்டும்.

முதல் முதலில் ஐரோப்பியர்கள் எழுதிவந்த எண்கள் லக்ஷணமாக இருக்கவில்லை. ரோமன் எண்கள் என்பவை எப்படியிருக்கும் என்பது உனக்குத் தெரியும். I, II, III, IV, V, VI, VII, VIII, IX, X என்று இம்மாதிரி அவை எழுதப்படும். அவைகளெல்லாம் கடினமானவை; அழகற்றவை. எல்லா மொழிகளிலும் நாம் இப்போது எழுதுகிற எண்கள் மிகவும் சுலபமானவை. இவைதாம், 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10 என்பவை. இவைகளுக்கு அராபிய எண்களென்று பெயர். ஐரோப்பியர்கள் முதல் முதலில் இவ்வெண்களை அராபியரிடமிருந்தே கற்றார்களாதலால், இவற்றிற்கு அப்பெயர் கொடுத்தார்கள். ஆனால் அராபியர்கள் இவ்வெண்களை இந்தியர்களிடமிருந்தே கற்றுக் கொண்டார்களாதலால், இவ்வெண்களை இந்திய எண்கள் என்று அழைப்பதே பொருத்தமாயிருக்கும்.

நான் அவசரப்பட்டுப் பல விஷயங்களை முன்னதாகவே சொல்லுகிறேன். நாம் இன்னும் அராபியர்களைப்பற்றிக் கவனிக்க ஆரம்பிக்கவில்லையே!

## 24

### பல வகுப்பு ஜனங்கள்

சரித்திரப் பாடங்களையெல்லாம், சிறுவர் சிறுமியர்களுக்கும் பெரியவர்களுக்குங்கூட விபரீதமாகக் கற்றுக்கொடுக்கிறார்கள். கேவலம் அரசர்களுடைய பெயர்களையும், மற்றவர்களுடைய பெயர்களையும், சண்டைகள் நடந்த தேதிகளைப் போன்ற விஷயங்களையுமே அவர்கள் அறிந்து கொள்கிறார்கள். சண்டைகளைப்பற்றியாவது, சில அரசர்களைப் பற்றியாவது, சேனாதிபதிகளைப் பற்றியாவது கூறுவது மாத்திரம் சரித்திரமாகாது. சரித்திரம் என்றால், ஒரு தேசத்தின் ஜனங்களைப்பற்றியும், அவர்கள் எப்படி வாழ்ந்தார்கள், அவர்கள் என்ன செய்தார்கள், அவர்கள் சிந்தையில் வளர்ந்த எண்ணங்கள் யாவை என்ற இவ்விஷயங்களைப் பற்றியும் எடுத்துச் சொல்லவேண்டும். அவர்களுடைய சுகதுக்கங்கள், கஷ்ட நிஷ்டுரங்கள், அவற்றை அவர்கள் எப்படி வென்றார்கள் என்பவற்றையும் சரித்திரம் சொல்லவேண்டும். இந்நோக்கத்துடன் நாம் சரித்திரத்தைப் படித்தால் அதினின்றும் நாம் பல விஷயங்களை அறிந்து

கொள்ளலாம். ஒரு நாட்டினருக்கு ஏற்பட்ட கஷ்டத்தைப் போல நமக்கும் கஷ்டம் ஏற்பட்டால் சரித்திரத்தைப் படிக்கலாம். அவர்கள் அக் கஷ்டத்தை எங்ஙனம் தீர்த்துக்கொண்டார்கள் என்பதை அறிந்து அவ்விதமே நாமும் நம் கஷ்டங்களைத் தீர்த்துக்கொள்ளச் சரித்திரம் நமக்கு வழிகாட்டும். முக்கியமாக, நாம் பண்டைக்கால வரலாறுகளைப் படிப்பதால், ஜனங்கள் நாளுக்கு நாள், முன்னேற்றம் அடைந்து வந்தார்களா, இல்லையா என்பதை அறியலாம்.

பண்டைக் காலத்துப் பெரிய மனிதர்கள், பெண்மணிகள் இவர்களைப்பற்றி ஒவ்வொருவரும் கட்டாயம் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். அதனோடு பண்டைக்காலத்தில் பற்பல ஜாதிகளும் ஜனங்களும் என்ன நிலைமையில் இருந்தார்கள் என்பதையும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்.

உனக்குப் பல கடிதங்கள் நான் எழுதியிருக்கிறேன். அவற்றுள் இது 24-ஆம் கடிதமாகும். இதுவரையில் நமக்கு அதிகமாகத் தெரியாத பண்டைக் காலத்தைப்பற்றியே ஆராய்ந்தோம். இது நிஜமாகச் சரித்திரம் ஆகாது. வேணுமென்றால் இதைச் சரித்திரத்தின் ஆரம்பம், அல்லது ‘சரித்திரோதயம்’ என்று சொல்லலாம். இனி, நமக்கு இன்னும் அதிகமாகத் தெரிந்த, சரித்திர காலம் என்று கூறப்படும் பிற்காலங்

களைப்பற்றி நாம் வெகுசீக்கிரத்தில் கவனிப்போம். எனினும், இப்பண்டைக்காலத்துச் சரித்திரத்தை முடிப்பதற்கு முன்பு அக்காலத்தில் எவ்வளவு வகையான ஜனங்கள் வசித்துவந்தார்கள் என்பதைச் சற்றுக் கவனிப்போம்.

பூர்விக ஜாதியார்கள் பலவித வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள் என்பதை ஏற்கனவே கவனித்தோம். அக்காலத்தில் தொழிற் பிரிவு ஏற்பட்டிருந்தது. குழுத்தலைவன் எவ்வாறு தன் குடும்பத்தை மாத்திரம் குழுவிலின்றும் பிரித்துத் தான் ஒரு வேலையும் செய்யாமல் தன் குழுவை ஆண்டு வந்தான் என்பதைக் கவனித்தோம். இதனால், அவனும் அவனுடைய குடும்பமும் உயர்ந்த வகுப்பென்றும் மற்றவர்கள் தாழ்ந்த வகுப்பினரென்றும் கருதும் வித்தியாசம் ஏற்பட்டது. இவ்விதமாக ஜனங்களிடையே இரண்டு வகுப்புக்கள் ஏற்பட்டன. ஒரு வகுப்பு அதிகாரம் செலுத்திப் பிற வகுப்பாரிடமிருந்து வேலைவாங்கிற்று. மற்ற வகுப்பினர் அவர்கள் இட்ட வேலையைச் செய்து வந்தனர். அதிகாரம் பெற்ற வகுப்பினர் தங்களுக்கு இருந்த யதேச்சாதிகாரத்தைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய வேலைகளையெல்லாம் செய்வித்துக் கொண்டனர். வேலைசெய்பவர்களிடமிருந்து மேலும் மேலும் அதிகமான பொருளை எடுத்துக்கொண்டதால் குழுத்தலைவர்கள் பணக்காரர்கள் ஆனார்கள்.

இவ்வாறு தொழில்களிலே பிரிவுகள் ஏற்படவும் வெவ்வேறு விதமான வகுப்புக்கள் உண்டாயின. உதாரணமாக, அரசன், அவனது குடும்பம், அவன் அமைச்சர்கள் இவர்கள் ஒரு வகுப்பினர். இவர்கள் நாட்டின் அலுவல்களைக் கவனித்து அதிகாரம் செலுத்தி வந்தனர்; எதிரிகளோடு சண்டையிட்டு நாட்டைக் காப்பாற்றி வந்தனர். இதைத் தவிர இவர்கள் வேறு ஒரு தொழிலையும் செய்யவில்லை.

மற்றொரு வகுப்பினர், கோயில் பூஜகர்களும், கோயிலில் ஊழியம் செய்பவர்களுமாவர். அக்காலத்தில் அவர்கள் அதிகச் செல்வாக்கைப் படைத்திருந்தனர். அவர்கள் செய்த வேலையைப் பற்றிப் பின்பு கவனிப்போம்.

மூன்றாவதாக, வியாபாரம் செய்பவர்கள் வேறு ஒரு வகுப்பினர். இவர்கள் ஒரு நாட்டின் சாமான்களை மற்றொரு தேசத்திற்குக் கொண்டு சென்று விற்றனர். அந்நாட்டுச் சரக்குகளையும் வாங்கிக் கடை வைத்து வியாபாரம் செய்தார்கள்.

நான்காம் வகையினர் தொழிலாளர்கள். இவர்கள் பலவிதமான சாமான்களைச் செய்தனர். நூல் நூற்றுத் துணி நெய்தனர்; மட்பாண்டங்கள் செய்தனர்; பித்தளைப் பாத்திரங்களையும் தங்கத்தாலும் தந்தத்தாலும் அழகான நகைகளையும் வேறு பல பொருள்களையும் செய்தனர். இவர்களுள் பெரும்பான்மையோர் நகரங்களுக்குச்

சமீபத்தில் வசித்தனர். எனினும் கிராமங்களிலும் பலர் வாழ்ந்து வந்தனர்.

தோட்டத்தில் வேலைசெய்யும் வியவசாயிகளும், பட்டணங்களில் வேலைசெய்யும் தொழிலாளிகளும் மற்றொரு வகுப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தொகை மற்றெல்லா வகுப்பினரையும்விட மிகவும் அதிகம். மற்றெல்லா வகுப்பினரும் இந்தக் கடைசி வகுப்பாரைக் கொண்டு கொஞ்சம் கொஞ்சம் லாபம் அடைந்து வந்தார்கள்.

## 25

## அரசர்களும் கோயில்களும் பூஜகர்களும்

சென்ற கடிதத்தில் ஐந்து வகையான வகுப்புக்கள் உண்டானதைப்பற்றிச் சொன்னேன். அவற்றில் பெரும்பான்மையான வகுப்பினர் வியவசாயிகளும் தொழிலாளர்களுமேயாவர். வியவசாயிகள், பூமியை உழுது பண்படுத்தி ஆகாரத்திற்கு வேண்டிய தானியங்களை உற்பத்தி செய்தனர். வியவசாயிகள் சாகுபடி செய்திராவிட்டால், அல்லது வேறு யாரும் பூமியை உழுது பயிர் செய்திராவிடின் ஜனங்களுக்கு உண்ண உணவே கிடைத்திராது; கிடைத்திருந்தாலும் அது மிகவும் சொற்பமாகவே இருந்திருக்கும். ஆகையால் வியவசாயிகள் சமூகத்திற்கு எவ்வளவு உபயோகமுள்ள வகுப்பினர் என்பது இதனால் விளங்குகிறது. அவர்களுக்குக் கூலி மிகக் குறைவாகவே கிடைத்தது. அவர்கள் உண்டாக்கிய பொருள்களில் பெரும்பகுதியை அரசனும் அவனைச் சார்ந்தவர்களும் அமைச்சர்களுமாகிய மற்றவர்கள் பிடுங்கிக்கொண்டனர்.

அரசனும் அவனுடைய வகுப்பாரும் மிகுதியான அதிகாரத்தைப் பெற்றிருந்தனர் என்பதை

நாம் கவனித்தோம். குழுவினர் வாழ்ந்த ஆதி காலத்தில் எல்லா நிலமும் அந்தக் குழுவினருக்கே பொதுவாக இருந்தது. தனியாக எவனுக்கும் பூமி சொந்தமாயிருக்கவில்லை. ஆயினும் அரச வர்க்கத்தாரின் அதிகாரம் அதிகரித்ததும், அவர்களெல்லாம் பூமி தங்களைச் சேர்ந்தது என்று சொன்னார்கள். நன்ருக உழைத்துப் பூமியைச் சாகுபடி செய்த குடியானவர்கள் சாதாரண வேலைக்காரர்களானார்கள். அரசர்களே பூமிக்கு எஜமானர்களானார்கள். குடியானவன் பூமியில் என்ன சாகுபடி செய்தாலும் அதில் பெரும்பகுதியை அரசன் பங்கிட்டு எடுத்துக் கொண்டான்.

சில கோயில்களுக்கும் ஏராளமான பூமி சொந்தமாயிருந்தது.

கோயில்கள் என்பவை என்ன, அவற்றில் பூஜை செய்துவந்த பூஜகர்கள் யார் என்பவற்றைப்பற்றிக் கவனிப்போம். முன் ஒரு கடிதத்தில், பூர்விக மனிதர்கள் தங்கள் அறிவீனத்தால், தாங்கள் அறியமுடியாத விஷயங்களைக் கண்டு பயந்தார்களென்றும் அதனால் பல தெய்வங்களைத் தொழ ஆரம்பித்தார்கள் என்றும் சொன்னேன். ஆறு, மலை, சூரியன், மரம், மிருகங்கள், தாங்கள் கண்ணால் பார்க்கமுடியாத பேய், பிசாசு என்பவைகளையெல்லாம் தேவன் அல்லது தேவி என்று பாவித்து வந்தார்கள். அவர்களுக்கு ஏற்பட்டிருந்த பயத்தினால், கடவுள் தங்களுக்கு

எப்பொழுதும் துன்பத்தையும் கஷ்டத்தையும் உண்டாக்கித் தண்டித்து வந்தாரென்று நினைத்தார்கள். தங்களைப் போலவே, தங்கள் தெய்வங்களும் கொடூரமானவையென்று எண்ணி, அவைகளைத் திருப்தி செய்து சாந்தப்படுத்தப் பலவிதமான பலிகொடுத்து வந்தனர்.

இத்தெய்வங்களுக்கென்று பல கோயில்களைக் கட்டினர். கோயிலினுள் கர்ப்பக்கிருகம் என்ற ஒரு புனிதமான தனிப்பட்ட அறையில் கடவுளை எழுந்தருளச் செய்து தொழுதார்கள். தங்கள் கண்ணுக்குத் தெரியாத எதையும் வணங்குவதற்கு அவர்களுக்கு முடியாமல் இருந்தது. இது சற்றுக் கடினமான விஷயந் தான். சாதாரணமாக, ஒரு குழந்தை தான் கண்ட பொருள்களையே நினைக்கும். ஆதி காலத்து மனிதர்களும் ஒரு விதத்தில் குழந்தைகளைப் போன்றவர்களே. உருவங்களன்றிக் கடவுளை அவர்கள் தொழமுடியாமையால், கோயிலில் தாங்கள் வழிபடும் தெய்வத்தின் விக்கிரகம் ஒன்றை வைத்துத் தொழுது வந்தார்கள். இந்த விக்கிரகங்களெல்லாம் அழகற்றனவாக இருந்தன. சில மிகவும் கோரமாயும் அவலக்ஷணமாயும் இருந்தன. மிருகம் போன்றும் மனிதன் போன்றும், பாதி மிருகம் பாதி மனிதன் போன்றும் உள்ள விக்கிரகங்களை வைத்து வணங்கினார்கள். ஒரு காலத்தில் எகிப்து தேசத்தில் பூனையையும் மற்றொரு

காலத்தில் குரங்கையும் வணங்கி வந்தார்களென்று எண்ணுகிறேன். கோரமான மிருகங்களின் உருவங்களை மனிதர்கள் ஏன் தொழுதார்களென்பது நாம் அறியக்கூடாததாய் இருக்கிறது. ஒரு விக்கிரகத்தை வணங்கவேண்டுமானால் ஓர் அழகான சிலையை வைத்து ஏன் வணங்கக்கூடாது? கடவுளுக்குப் பயந்து ஜனங்கள் நடக்கவேண்டுமென்று எண்ணி அதற்காகவே இச்சிலைகளைப் பயங்கரத் தோற்றமுடையனவாகச் செய்தனர் போலும்.

கடவுள் ஒருவரே என்றும் அவர் சர்வசக்தி வாய்ந்தவரென்றும், இக்காலத்தில் நினைப்பது போல அக்காலத்தில் ஜனங்கள் நினைக்கவில்லை. எண்ணிறந்த பல தெய்வங்களும் தேவியரும் இருந்ததாகவும், அவர்களுங்கூட ஒருவருக்கொருவர் அடிக்கடி சண்டையிட்டுக்கொண்டனரென்றும் எண்ணினார்கள். வெவ்வேறு நகரங்களிலும் நாடுகளிலும் வெவ்வேறு தெய்வங்களைத் தொழுது வந்தனர்.

கோயில்களில் ஆண்பூஜகர்களும் பெண்பூஜகர்களும் நிறைந்திருந்தனர். எல்லாப் பூஜகர்களுக்கும் எழுதப்படிக்கத் தெரிந்திருந்தமையால், மற்றவர்களைவிட இவர்கள் அதிகம் அறிந்தவர்களாயிருந்தார்கள். ஆகையால் அரசர்கள் இவர்களைத் தங்களுக்கு யோசனை சொல்ல வைத்துக் கொண்டனர். அக்காலத்தில் புஸ்தகங்களை எழுதினவர்களும் இவர்களே. வேறு புஸ்தகங்



‘கற்படி மீனின் படம்.’ —ப. 159



'ஆதிகாலத்தில்...ஊர்வனவெல்லாம்...வித்தியாசமாயும் மிகவும் பெரியனவாயும் இருந்தன.' —ப. 161

அறுபது அடி நீளமுள்ள பழங்காலப்பிராணி
(The Cetiosaurus)

களைப் பார்த்துக் கையெழுத்துப் பிரதிகளையும் செய்தார்கள். இவர்கள் கொஞ்சம் அறிவாளி களாயிருந்தமையால் ஜனங்கள் இவர்களை ஞானி கள் என்று எண்ணினார்கள். இவர்களுக்கு வைத்தியமும் தெரிந்திருந்தது. தாங்கள் அதிக அறிவாளிகள் என்பதை ஜனங்களுக்குக் காட்ட சில ஜாலவித்தைகளையும் அடிக்கடி செய்தார் கள். இதனாலும் ஜனங்களுக்கு இவர்களி டத்து நம்பிக்கையும் மரியாதையும் ஏற்பட்டன. கள்ளங்கபடற்ற ஜனங்கள் இப்பூஜகர்களையெல் லாம் மந்திரவாதிகளென்று நினைத்து இவர் களைக் கண்டு அஞ்சினர்.

ஜனங்களது வாழ்க்கையின் பல அம்சங் களிலும் இப்பூஜகர்கள் கலந்துகொண்டனர். இவர்களுக்கு எல்லா விஷயங்களும் தெரியு மென்று எண்ணி, ஜனங்கள் தங்களுக்குக் கஷ்டம் நேரிட்டபோதும், வியாதி வந்தபோதும் இவர்களுடைய உதவியை நாடிவந்தனர். ஜனங் களுக்காக இவர்கள் பெரிய திருவிழாக்களையும் நடத்தினர். அக்காலத்தில் மாதம் தேதி பார்க்க ஜனங்களுக்குத் தெரியாது. பண்டிகைகளையும் திருவிழாக்களையும் கொண்டுதான் காலத்தைக் கணக்கிட்டு வந்தனர்.

பல தடவைகளில் இப்பூஜகர்கள் பாமர ஜனங்களை ஏமாற்றினர். எனினும் இவர்கள் பாமர ஜனங்களின் முன்னேற்றத்திற்காகப் பல துறைகளில் உழைத்து வந்தனர்.

முதல் முதலில் ஜனங்கள் ஓர் இடத்தில் குடியேறியபோது அவர்களை இப்பூஜகர்களே அடக்கி ஆண்டார்கள்; அரசர்கள் ஆளவில்லை. பூஜகரைவிட அரசனுக்குப் போர்புரியும் சக்தி இருந்தமையால் சில காலத்திற்குப் பிறகு, இப்பூஜகர்களைத் தள்ளிவிட்டு அரசனே ஜனங்களின் தலைவனாக விளங்கினான். எகிப்து தேசத்துப் பாரோக்களைப் போலச் சில தேசங்களில் ஒருவனே அரசனும் பூஜகனாகவும் இருந்தான். பாரோக்கள் உயிரோடு வாழ்ந்த காலத்திலேயே அவர்களைத் தெய்வத்தின் பாதி அம்சம் பெற்றவர்களென்று நினைத்தார்கள். மரித்தபின்பு அவர்களை ஸாக்ஷாத் கடவுளாகவே கருதி வழிபட்டனர்.

## 26

### பின்னோக்கம்

என் கடிதங்களைப் படித்து உனக்குச் சலிப்பு ஏற்படவில்லையா? நீ கொஞ்சம் கட்டாயம் ஓய்வு எடுத்துக்கொள்ளவேண்டும். இதோ பார்! இன்னும் கொஞ்ச நாட்களுக்குப் புதிய விஷயங்கள் ஒன்றையும் நான் எழுதப் போவதில்லை. ஆனால் நாம் இதுவரையில் பிரஸ்தாபித்து வந்த விஷயங்களைப்பற்றி நீ சிறிது ஆலோசித்துப் பார்க்கவேண்டுமென்று நான் விரும்புகிறேன். கோடிக்கணக்கான வருஷங்களின் செய்திகளைச் சில கடிதங்களில் வெகு விரைவில் கவனித்துவிட்டோம். பூமி, முதலில் சூரியனைச் சேர்ந்த ஓர் உஷ்ணத் துண்டாக இருந்ததென்பதையும் பிறகு அது பிரிந்துபோய் எப்படி மெதுவாகக் குளிர்ந்ததென்பதையும் கண்டோம். அதன் பிறகு சந்திரன் உண்டாயிற்று. நெடுங்காலம் வரையில் இவ்வுலகில் உயிரே இருக்கவில்லை. பிறகு கோடானு கோடி வருஷங்களில் மெள்ள மெள்ள உயிருள்ளவை உண்டாயின. கோடி வருஷமென்றால் எவ்வளவு நீடித்த காலம்

என்பது உனக்குத் தெரியுமா? கோடானு கோடி வருஷங்கள் என்ருல் உத்தேசமாய் அறிந்து கொள்வதுகூட மிகக் கடினம்.

உனக்கு இப்போது வயது பத்து; இருந்தாலும் நீ எவ்வளவு பெரியவளாகிவிட்டாய். நீ இப்போது ஓர் இள மங்கை! நூறு வருஷம் என்பதே உனக்கு ஒரு நீண்டகாலமாகத் தோற்றும் என்ருல், ஆயிர வருஷங்களோ! ஒரு கோடி வருஷம் என்பது பத்தாயிரம் ஆயிரம் வருஷங்கள் கொண்டது. இந்தக் கணக்கெல்லாம் நமது சிறிய மூளையில் ஏருது என்று நான் எண்ணுகிறேன். நாம் மிகவும் புத்திசாலிகள், மேதாவிகள், சூரர்கள் என்றெல்லாம் நினைத்துக் கொள்ளுகிருேம். ஆனல் சிறிய விஷயங்களெல்லாம் நமக்கு மனக்குழப்பத்தைக் கொடுத்து நமது சிறுமையை நமக்கு வெளிப்படுத்துகின்றன. நீண்ட உலக சரித்திரத்தில் இச்சிறிய சம்பவங்களையெல்லாம்பற்றி நாம் ஏன் தொந்தரவு செய்துகொள்ளவேண்டும்? உலக சரித்திரத்தில் பெரிய யுகங்களில் நடந்துள்ள பெரிய சம்பவங்களைப்பற்றிச் சிறிதேனும் படித்து அறிந்து கொண்டால் போதும். சிறிய விஷயங்களையும் சம்பவங்களையும்பற்றி நாம் தொந்தரவு செய்து கொள்ளவேண்டிய அவசியம் இராது.

நெடுங்காலம் வரையில் உலகில் உயிரே இல்லாததையும், பின்பு நெடுங்காலம் வரையில் சமுத்திரத்தில் மாத்திரம் சில ஜீவன்கள் வசித்து

வந்ததையும் கவனிப்போம். அக்காலத்தில் பூமியின் எப்பாகத்திலும் மனிதன் வசிக்கவில்லை. பிறகு, அநேக கோடி வருஷங்களுக்குப் பின் மிருகங்கள் உண்டாயின. அவற்றை வேட்டையாடவும் சுட்டுக் கொல்லவும் அக்காலத்தில் மனிதன் இல்லாமையால் அவை இஷ்டம் போல் சுற்றித் திரிந்தன. கடைசியாக மனிதன் வந்தான். அவன் மிருகங்களைக் காட்டிலும் மிகச் சிறியவனுகவும் மெலிந்தும் பலம் குன்றியும் இருந்தான். மெல்ல மெல்லப் பல்லாயிர வருஷங்களுக்குப் பின் இம் மனிதனே அதிக பலமுள்ளவனுகவும் புத்தியுள்ளவனுகவும் விளங்கிக் கடைசியாகப் பூமியிலுள்ள மிருகங்களை அடக்கியாள ஆரம்பித்தான். எல்லா மிருகங்களும் அவனுடைய அடிமைகளாயின. அவற்றைக்கொண்டு தனக்கு வேண்டிய வேலையைச் செய்துகொண்டான்.

பிறகு நாம் நாகரிகத்தின் வளர்ச்சியைக் கவனித்தோம். ஆதியில் அது எப்படி ஆரம்பித்தது என்பதைக் கவனித்தோம். பிற்காலத்தில் அது எப்படி முன்னேற்றம் அடைந்தது என்பதைப் பிறகு கவனிப்போம். இனி நாம் கவனிக்க வேண்டியவை கோடிக்கணக்கான வருஷங்களுக்குமுன் நடந்தவை அல்ல; நான் இது வரையில் எழுதிய கடிதங்களில், நாலாயிரம், ஐயாயிரம் வருஷங்களுக்கு முன்பு நடந்த விஷயங்களைப் பற்றியெல்லாம் பேசியாகி

விட்டது. நாலாயிரம் அல்லது ஐயாயிரம் வருஷங்களைப் பற்றி நாம் தெரிந்துகொள்ளக்கூடிய விஷயங்கள், அதற்கு முன்பு நாம் கவனித்த கோடானு கோடி வருஷங்களைப்பற்றி நமக்கு எவ்வளவு தெரிந்தனவோ அவற்றை விடப் பன்மடங்கு அதிகமானவை. இந்த நாலாயிர வருஷங்களுக்குள்ளாகத்தான் மனிதனுடைய சரித்திரம், முன்னேற்றம், நாகரிகம் எல்லாம் ஏற்பட்டன. இவற்றைப்பற்றியெல்லாம் நீ பெரியவளான பிறகு ஏராளமாய்ப் படிக்கலாம். இச்சிறிய உலகில் மனிதனுக்கு என்ன நேர்ந்ததென்பதைப்பற்றி உனக்குச் சுருக்கமாகச் சொல்லவெண்ணி, அதைப் பற்றி வெகு சொற்ப விஷயங்களை எழுதலாம் என்று இருக்கிறேன்.

## 27

## கற்படி மீன்களின் படங்கள்

**நா**ன் இன்று சில படங்களுள்ள கார்டுகள் அனுப்பியிருக்கிறேன். என்னுடைய நீண்ட ரஸமில்லாத கடிதங்களைக் காட்டிலும் இவற்றை அதிகமாக விரும்புவாயென்று நம்புகிறேன். இவை, லண்டனிலுள்ள ஸௌத் கென்ஸிங்டன் மியூஸியத்திலிருக்கும் கற்படிமீன்களின் படங்கள். நீ இவற்றை அங்கே பார்த்திருக்கக்கூடும். எப்படியாலுைம் இந்தப் படங்கள் பழைய காலத்து மீன்களின் கற்படிந்த உருவங்களைப் பற்றிச் சிறிதளவு விவரத்தைத் தெரிவிக்கும்.

நான் முன்பே சொன்னபடி, கற்படி பொருள்களென்பவை பழங்காலத்து மிருகங்கள் செடிகள் இவற்றின் சின்னங்களாகும். அவற்றைப் பாறைகளிடையிலும் மற்ற இடங்களிலும் காண்கிறோம். அந்தப் பிராணிகளின் மெல்லிய உறுப்புக்கள் அழிந்துபோயின; ஆனல் எலும்புள்ள கடினமான பாகங்கள்மாத்திரம் நெடுங் கால அளவைத் தாண்டி இருந்துவருகின்றன. அவற்றிற் பெரும்பாலானவை கடலின் அடியில்

மிருதுவான மண்ணால் மூடப்பெற்றன; அதனால் பாதுகாப்பை அடைந்தன. அந்த மிருதுவான மண் நாளடைவில் கடினமாயிற்று; கடலின் அடிநிலம் மேலே வந்து பிறகு உலர்ந்த நிலப்பரப்பாயிற்று. அதனால்தான் இப்போது இந்தப் பொருள்களை நிலப்பரப்பிலே நாம் காண்கிறோம்.

இந்தப் படங்களில், சில பொருள்கள் பாறைகளில் எப்படி இருக்குமோ அப்படியே காட்டப் பட்டிருக்கின்றன. இவை மிகத் தெளிவாக இல்லை. இவை இரண்டும் மாதிரி உருவங்கள்; உண்மையான கற்படி பொருள்களைப் போலத் தோற்றும்படி செய்யப்பட்டவை. இந்தப் படங்களில் உள்ளவற்றுள் ஒன்று மீனின் பற்களை மாத்திரம் புலப்படுத்துகிறது.

மிகவும் விநோதமானவை ஜி. 24, ஜி. 27 என்ற எண்ணுடையவைகளென்று நான் கருதுகிறேன். பாறைகளில் மீன்களின் அடையாளங்கள் நன்றாகத் தெரிகின்றன. இந்த அடையாளங்களைக்கொண்டு, லக்ஷக்கணக்கான வருஷங்களுக்குப் பிறகுள்ள நாம், அவை முன்பு இருந்தன வென்று சொல்லமுடிகிறது.

இந்தப் படங்களுள்ள கார்டுகளையும் இவற்றுடன் உள்ள குறிப்பையும் ஒன்றோடொன்று கலந்து விடாமல் தனித் தனி உறையில் வைத்துக்கொள்.



ஆதிகாலத்து ஊர்வனவற்றில் ஒன்று

(The Ceratosaurus) —ப. 161

தோளின் உயரம் பூமியிலிருந்து 8 அடி,



'பழைய செடிகளின் சின்னங்கள்.' —ப. 162

# 28

## கற்படிபொருள்களும் சிதைந்து போன நகரங்களும்

**நா**ன் உனக்குக் கடிதம் எழுதி வெகு நாட்களாயின. என் கடைசி இரண்டு கடிதங்களிலும், பண்டைக்காலங்களைப்பற்றி முன் கடிதங்களில் எழுதியவற்றை மறுமுறையும் கவனித்தோம். கற்படிபொருள்கள் எப்படியிருக்கும் என்பதை நீ அறியும்பொருட்டு உனக்குக் கற்படிமீனின் சித்திரங்கள் சிலவற்றை அனுப்பினேன். நாம் மசூரியில் இருந்தபோது வேறு பழம் பொருள்களின் படத்தையும் காண்பித்தேன்.

ஊர்வனவற்றின் சின்னங்களைப் பார்த்தது உனக்கு ஞாபகம் இருக்கலாம். பாம்பு, பல்லி, முதலை, ஆமைபோன்ற ஊர்ந்து நகர்ந்து செல்வனவெல்லாம் ஊர்வனவென்னும் வகுப்பைச் சார்ந்தவை. ஆதிகாலத்தில் ஊர்வனவெல்லாம் ஒரே குடும்பத்தைச் சார்ந்திருந்தன. ஆயினும் அவை எல்லாம் வித்தியாசமாயும் மிகவும் பெரியனவாயும் இருந்தன. லண்டனில்

ஸௌத் கென்ஸிங்க்டன் மியூஸியத்தில் இம் மாதிரியான பெரிய மிருகங்கள் வைத்திருப்பதை நீ பார்த்திருக்கிருய். அவைகளுள் ஒன்று 30 அல்லது 40 அடி நீளம் இருந்தது. அங்கே, மனிதனைவிடப் பெரிதான ஒரு தவளையும் அதே பருமனுள்ள ஓர் ஆமையும் இருந்தன. மிகப் பெரிய வௌவால்களும் அங்கும் இங்கும் பறந்தன. அக்கால மிருகங்களுள் ஒன்ருன இக்வாநோடன் (Iguanodon) என்ற மிருகம் நின்ருல் ஒரு சிறு மரத்தினளவு உயரம் இருக்குமாம்.

பழைய செடிகளின் சின்னங்களையும் நீ பார்த்திருக்கிருய். மலைகளில் செடிகள், இலைகள், ஓலை இவற்றின் கற்படிந்த சின்னங்களைப் பார்க்கலாம்.

ஊர்வன தோன்றி வெகுகாலம் கழிந்த பின்னர் ஸ்தன்யபானிகள், அதாவது தம் குட்டிகளுக்குப் பால்கொடுத்து வளர்க்கும் பிராணிகள் உண்டாயின. நம்மைச் சுற்றியிருக்கும் மிருகங்களும் நாமுங்கூட ஸ்தன்யபானிகளே. அக்காலத்தில் இருந்த ஸ்தன்யபானிகளுக்கும் தற்காலத்தில் உள்ளவைகளுக்கும் அதிக மாறுபாடு இல்லை. ஆனல் அவைகள் இக்காலத்தவைகளைக்காட்டிலும் பெரியனவாக இருந்தன. எனினும் ஊர்வனவற்றைப்போல அவ்வளவு பெரியனவாக இருக்கவில்லை. நீண்ட பருத்த தந்தங்களையுடைய யானைகளும் பெரிய கரடிகளும் இருந்தன.

மனிதனின் கற்படி சின்னத்தையும் நீ பார்த்தாய். அவையெல்லாம் மண்டையோடும், எலும்புமாக இருந்தமையால் அவை அவ்வளவு ரஸிக்கவில்லே. பண்டைக்காலத்தில் மனிதன் கற்களேக் கொண்டு செய்த ஆயுதங்களேப் பார்த்தால் அதிக விந்தையாக இருக்கும்.

எகிப்துதேசத்துக் கல்லறைகளின் படங்களேயும் உலர்ந்த சவங்களினுடைய படங்களேயும் நான் உனக்குக் காட்டியிருக்கிறேன். இவைகளுள் சில பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. மரங்களாலான சவப்பெட்டிகளின் மீது எகிப்தியர் நீண்ட கதைகளே வர்ணச் சித்திரங்களால் எழுதியிருக்கின்றனர். தீப்ஸ் என்னும் நகரத்தில் எகிப்தியரின் கல்லறைகளின் சுவர்களில் எழுதப்பட்டிருக்கும் படங்களெல்லாம் எவ்வளவு மனக்கவர்ச்சியுள்ளனவாயிருந்தன! தீப்ஸ் என்ற ஊரில் சிதைந்து கிடக்கும் அரண்மனேகள், கோயில்கள் இவற்றின் படங்களேயும் நீ பார்த்தாய். அக்கட்டிடங்களும் அவற்றின் தூண்களும் மிகப் பெரியவை, பருமனனவை. தீப்ஸுக்குச் சமீபத்தில் மெம்மானின் கலோஸஸ் என்ற மிகப் பெரிய சிலேயொன்று இருக்கிறது.

வட எகிப்தில் கார்னுக் என்ற இடத்திலும் சிதைந்துபோன கட்டிடங்களும், கோயில்களும் இருக்கின்றன. அவற்றின் படங்களேயும் நீ பார்த்தாய். பாழடைந்த இக்கட்டிடங்களேப்

பார்த்தாலே, பண்டைக்காலத்தில் எகிப்தியர்கள் கட்டிடங்களைக் கட்டுவதில் எவ்வளவு திறமை வாய்ந்திருந்தார்களென்பது நன்கு விளங்கும். சிற்பசாஸ்திரம், மனையடிசாஸ்திரம் இவற்றில் நல்ல தேர்ச்சி அமைந்திருந்தாலொழிய இம் மகத்தான கட்டிடங்களையும் கோயில்களையும் அக்காலத்திய எகிப்தியர்கள் கட்டியிருக்க முடியாது.

இதுவரையில் பழைய விஷயங்களைப்பற்றிப் பேசியது போதும். அடுத்த கடிதத்தில் மேல் நடந்ததைக் கவனிப்போம்.

## 29

## இந்தியாவுக்கு ஆரியர்கள் வந்தது

மிக மிகப் பழமையான காலத்தைப் பற்றி இதுவரையில் பேசிவந்தோம். இனி, மனிதன் எப்படி முன்னேற்றம் அடைந்தான், என்ன என்ன செய்தான் என்பவற்றைக் கவனிப் போம். சரியான விவரங்கள் கிடைக்காத மிக மிகப் பழமையான காலத்தைச் 'சரித்திரத்திற்கு எட்டாத காலம்' (Pre - historic) என்று சொல்லுகிறுர்கள். ஆகையால் அக்காலத்தில் நடந்தவைகளையெல்லாம் நாம் ஊகித்தே அறிய வேண்டியிருக்கிறது. ஆனுல் இப்போது நமக்குச் சரித்திரத்தின் எல்லை சிறிது புலப்படுகிறது.

முதலில் இந்தியாவில் என்ன நடந்த தென்று கவனிப்போம். இந்தியாவும், எகிப்து தேசத்தைப் போலவே, பண்டைக் காலத்தில் நாகரிகம் அடைந்திருந்ததென்பதைக் கண் டோம். வியாபாரம் நடந்துவந்தது. இந்தியச் சரக்குகளைக் கப்பல் மார்க்கமாய், எகிப்துக்கும் மெஸபொடேமியாவுக்கும் மற்றும் பல தேசங் களுக்கும் அனுப்பினுர்கள். அக்காலத்தில் இந்தி யாவில் வசித்தவர்களுக்குத் திராவிடர்கள் என்று

பெயர். தென்னிந்தியாவில் சென்னையைச் சுற்றி வசிக்கும் ஜனங்கள் எல்லாரும் இந்தத் திராவிடர்களின் சந்ததிகளாவார்கள்.

திராவிடர்களின்மீது வடக்கேயிருந்து ஆரியர்கள் படையெடுத்து வந்தனர். மத்திய ஆசியாவில் இந்த ஆரியர்களின் ஜனத்தொகை ஏராளமாயிருந்திருக்கவேண்டும். அங்கே எல்லாருக்கும் போதிய உணவுப் பொருள்கள் கிடைப்பது அரிதானமையால், அவர்களெல்லாம் வேறு தேசங்களில் பரவினர். அவர்களில் பெருந்தொகையினர் பாரசீகத்திற்கும், யவன தேசத்திற்கும், மற்றும் பல மேற்குத்திசை நாடுகளுக்கும் சென்றனர். காஷ்மீர தேசத்தையும் அதைச் சுற்றிலுமுள்ள மலைகளையும் கடந்து அவர்களின் கூட்டம் திரள் திரளாக இந்தியாவிற்குள் நுழைந்தது.

ஆரியர்கள் தைரியமும் பலமும் படைத்திருந்தனர். தங்களுக்கு எதிர்ப்பட்ட திராவிடர்களைத் தங்கள் முன் ஓடும்படி சண்டையிட்டுத் துரத்தினர். வடமேற்கிலிருந்து ஆரியர்களின் கூட்டங்கள், கடலின் அலைபோன்று ஒன்றன்பின் ஒன்ருக இந்தியாவிற்குள் வந்திருக்கவேண்டும். முதல் முதலில் திராவிடர்கள் ஆரியர்களை முன்னேறவிடாமல் தடுத்திருக்கலாம். ஆயினும் படை படையாய் ஆரியர்களின் கூட்டம் அடுத்தடுத்து வந்ததால் அவர்களைத் தடுக்கத் திராவிடர்களால் முடியாமற் போயிற்று.

வெகுநாட்கள்வரையில் ஆரியர்கள் வடக்கே பஞ்சாபிலும், ஆப்கானிஸ்தானத்திலும் தங்கியிருந்தனர். மெள்ள மெள்ள நாம் இப்போது வசிக்கும் ஐக்கிய மாகாணத்திற்குத் தெற்கு நோக்கி வந்தார்கள். இவ்விதமாக அவர்கள் நாளடைவில் மத்திய இந்தியாமுழுதும் பரவி, விந்தியமலைப் பிரதேசம் வரையில் ஆக்கிரமித்துக் கொண்டார்கள். விந்தியமலைப் பிரதேசம் காடடர்ந்திருந்ததால் அதைத் தாண்டித் தெற்கே அவர்களால் செல்ல முடியவில்லை. ஆகவே, வெகு காலம்வரையில் ஆரியர்கள் விந்தியமலைக்கு வடக்கிலேயே வசித்துவந்தனர். எனினும், அவர்களிற் பலர் அம்மலைகளையும் காடுகளையும் கடந்து தெற்கே சென்றனர். ஆனல் கூட்டம் கூட்டமாக அவர்கள் செல்லமுடியாது போயிற்று. இக்காரணத்தினுல்தான் தென்னிந்தியாவில் இன்றைக்கும் திராவிடர்களே வசித்து வருகின்றனர்.

ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்த வரலாறு மிக ஸ்வாரஸ்யமானது. இவர்களைப்பற்றி ஏராளமான விவரங்களைப் பழைய ஸம்ஸ்கிருத புஸ்தகங்களில் காணலாம். இவற்றுள், வேதங்களைப் போன்றவைகளை அக்காலத்திலேதான் இயற்றியிருக்கவேண்டும். இவற்றுள் ரிக்வேதந்தான் மிகப் புராதனமானது. அக்காலத்தில் ஆரியர் எந்தப்பாகத்தில் இந்தியாவில் வசித்து வந்தார்களோ அதைப்பற்றிய முழு விவரங்களும் நாம்

ரிக்வேதத்தைப் படித்தால் தெரியவரும். மற்ற வேதங்களினின்றும் புராணங்கள்போன்ற பழைய ஸம்ஸ்கிருத புஸ்தகங்களினின்றும், ஆரியர்கள் எப்படி எங்கும் பரவிவந்தனர் என்பதையும் நாம் காணலாம். இப்புராதன நூல்களைப் பற்றி உனக்கு ஒரு சமயம் அதிகமாகத் தெரியாதிருக்கலாம். நீ பெரியவனை பின்பு இவற்றைப் பற்றி இன்னும் அதிகமாகத் தெரிந்துகொள்ளலாம். என்றாலும், இப்பொழுதுங்கூட உனக்குப் பல புராணக்கதைகள் தெரிந்திருக்கும். இவற்றிற்கு நெடுங்காலத்திற்குப்பிறகுதான் ராமாயணமும் அதன்பிறகு மஹாபாரதமும் உண்டாயின.

ஆரியர்கள் பஞ்சாபிலும், ஆப்கானிஸ்தானத்திலும் வசித்துவந்த காலத்தில் அதைப் 'பிரும்மாவர்த்தம்' என்று அழைத்தார்கள் என்று இப்புஸ்தகங்களினின்றும் புலனாகிறது. அக்காலத்தில், ஆப்கானிஸ்தானத்திற்குக் காந்தாரம் என்று பெயர். மஹாபாரதத்தில் காந்தாரியைப் பற்றி வருவது உனக்கு ஞாபகம் இருக்கிறதா? காந்தாரம் அல்லது ஆப்கானிஸ்தானத்திலிருந்து வந்ததால்தான் அவளுக்கு அந்தப் பெயர் வந்தது. இப்போது ஆப்கானிஸ்தானம் ஒரு தனித்தேசமாக விளங்குகிறது. அக்காலத்தில் இந்தியாவும் அதுவும் ஒன்ருக இருந்தன. ஆரியர்கள் தெற்கு நோக்கிக் கங்கை யமுனைச் சமவெளிகளை அடைந்தபோது, வட இந்தியா முழுதையும் 'ஆரியாவர்த்தம்' என்று அழைத்தனர்.



‘ இக்வாநோடன் என்ற மிருகம்.’ —ப. 162
கழுத்தின் அளவு ஏறக்குறைய 10 அடி.



' நீண்ட பருத்த தந்தங்களையுடைய யானை.' —ப. 162

பண்டைக்கால ஜனங்களைப்போலவே, ஆரியர்களும் நதிக்கரையோரங்களில் நகரங்களில் குடியேறினர்கள். காசி, பிரயாகைபோன்ற பல நகரங்களெல்லாம் நதிக்கரையோரமாகவே இருக்கின்றன.

## 30

## இந்தியாவுக்கு வந்த ஆரியர்கள் நிலை

ஆரியர்கள் ஏறக்குறைய ஐந்து அல்லது ஆறுயிரம் வருஷங்களுக்கு வெகுகாலம் முன்னதாகவே இந்தியாவுக்கு வந்திருக்கவேண்டும். ஆனல் அவர்களெல்லாம் ஒரே தடவையில் ஒரே கூட்டமாக வரவில்லை. படை படையாகவும் கூட்டங் கூட்டமாகவும் குடும்பங் குடும்பமாகவும், பல நூற்றுண்டுகளில் இந்த ஆரியர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கவேண்டும். தங்கள் பண்டங்களை வண்டிகளிலோ அல்லது மிருகங்களின் முதுகிலோ ஏற்றிக்கொண்டு இவர்கள் கூடிய பெருங்கூட்டங்கள் ஒன்றன் பின் ஒன்ருக இந்தியாவில் நுழைந்ததை நினைக்க எவ்வளவு விந்தையாயிருக்கிறது! இக்காலத்தில் வரும் யாத்திரிகர்களைப் போன்றவர் அல்லர் இந்த ஆரியர்கள். அவர்கள் வந்தால் திரும்பிப் போவது என்பது இல்லை. அவர்கள் இந்தியாவிலேயே குடியேறிச் சண்டையிட்டுச் சாவதற்கும் தயாராக வந்தார்கள். அவர்களெல்லாம் நான் முன் கூறியவாறு வடமேற்குக்

கணவாய்களின் வழியாக வந்தார்கள். சிலர், பாரசீக வளைகுடாவின் வழியாகத் தங்கள் சிறிய கப்பல்களில் பிரயாணம் செய்து, சிந்துநதி வழியாக இந்தியாவிற்குள் நுழைந்திருக்கலாம்.

இந்த ஆரியர்களென்பவர்கள் எத்தகையவர்கள்? அவர்களைப் பற்றிய முழு விவரங்களையும் நாம் அவர்கள் எழுதியுள்ள பல புஸ்தகங்களினின்றும் அறியலாம். வேதங்களும், அவற்றைப் போன்ற சில புஸ்தகங்களும் உலகத்திலேயே மிகவும் புராதனமானவை. ஆதியில் இவற்றை ஒருவரும் புஸ்தகரூபமாக எழுதவில்லை. மனப்பாடமே செய்துவந்தார்கள்; பிறருக்கும் சொல்லிக்கொடுத்தார்கள். ஸம்ஸ்கிருதத்தில் மிகவும் அழகாக எழுதப்பட்டிருப்பதால் அவற்றை நாம் ராகத்துடன் கூடப் பாடலாம். இப்பொழுதுங்கூட நல்ல குரலுள்ள யாரேனும் ஒருவர் வேதங்களை ஸ்வரத்துடன் இசைத்தால் கேட்கக் கேட்க இனிமையாயிருக்கும். வேதங்கள்தாம் மிகவும் புனிதமானவையென்று ஹிந்துக்கள் கருதுகின்றனர்.

வேதம் என்ற பதத்திற்கு என்ன அர்த்தம்? வேதம் என்றால் அறிவு என்று பொருள். அக்காலத்து அறிவாளிகளான முனிவர்களும், ரிஷிகளும் அறிந்த உண்மைகளெல்லாம் வேதத்தில் அடங்கியிருக்கின்றன. அக்காலத்தில் ரெயிலோ, தந்தியோ, சினிமாவோ இல்லை. அந்தக் காரணத்தால், அவர்கள் ஒன்றும் தெரியாதவர்க

ளென்று எண்ணக்கூடாது. அக்காலத்தில் இருந்த ஞானிகள் இக்காலத்தவர்களைக் காட்டிலும் அறிவிற் சிறந்தவர்களென்று சிலர் கருதுகின்றனர். அவர்கள் அறிவாளிகளோ இல்லையோ, அவர்கள் எழுதியுள்ள நூல்களைக் கண்டு இக்காலத்திலும் நாம் வியப்பை அடைகிறோம். அக்காலத்தவர்கள் எவ்வளவு பெரியவர்கள், எவ்வளவு கீர்த்தி வாய்ந்த அறிவாளிகள், எவ்வளவு ஞானிகள் என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

வேதங்களை எழுதிவைக்கவில்லையென்று முன்னமே சொன்னேன். அவற்றையெல்லாம் மனப்பாடம் செய்து கர்ண பரம்பரையாகத் தலைமுறை தலைமுறையாகக் காப்பாற்றிவைத்தார்கள். அக்காலத்து ஜனங்களுக்கு ஆச்சரியமான ஞாபகசக்தி இருந்திருக்கவேண்டும். நம்மில் எவ்வளவுபேர் புஸ்தகங்கள் முழுவதையும் மனப்பாடம் செய்யமுடியும்?

வேதங்கள் உண்டான காலத்தை **வேதகாலம்** என்று சொல்லுகிறார்கள். ரிக்வேதம் வேதங்களில் முதன்மையானது. பண்டைக்காலத்து ஆரியர்கள் பாடிய பாட்டுக்களும் தோத்திரங்களும் இதில் மலிந்துகிடக்கின்றன. இவற்றைப் பாடியவர்கள் குதூகலமான மனமுடையவர்களாக இருந்திருக்கவேண்டும். விசனமாவது கஷ்டமாவது அவர்களிடம் காணமுடியாது. எப்பொழுதும் சந்தோஷமும், வீரச் செயல்

புரிவதில் ஓர் உத்ஸாகமும் உடையவர்களா யிருந்தனர். தங்களது சந்தோஷத்தினுல் தாங்கள் வழிபட்ட கடவுளின்மீது அழகான பாட்டுக் களைப் பாடினுர்கள்.

அவர்களுக்குத் தங்களிடத்தும் தங்கள் வகுப்பினிடத்தும் அதிக மதிப்புண்டு. 'ஆரியர்' என்ருல் நற்குண நற்செய்கையுடையவர் என்பது பொருள். அவர்களுக்குச் சுதந்தரம் என்ருல் உயிருக்குச் சமானம். இக்காலத்திய இந்தியர்களுக்குத் தைரியம் என்பதே இல்லை. நமது சுதந்திரத்தை இழந்துவிட்டோமேயென்று கொஞ்சங்கூட உணர்ச்சியற்று இருக்கின்றனர். இவர்களெல்லாம் அந்த வீரம் நிறைந்த, சுதந்திரத்தைப் போற்றிய ஆரியர்களின் சந்ததிகள். பண்டைக்கால ஆரியர்களுக்கும் அவர்களின் சந்ததிகளான இக்கால இந்தியர் களுக்கும் எவ்வளவு வித்தியாசம்! அகௌரவ மான அடிமைத்தனத்தைக்காட்டிலும் உயிர் வாழாமையே பெரிதென்று பண்டைக்கால ஆரியர்கள் கருதினர்.

சமரில் நன்ருகப் போர் புரியும் திறமை ஆரியர்களுக்கு உண்டு. அவர்களுக்குப் பிரகிருதி சாஸ்திரமும், வியவசாயமும் தெரிந்திருந்தன. அவர்கள், வியவசாயத்தை மேன்மையாகக் கருதி அதனேடு சம்பந்தமுள்ள பல தொழில்களையும் மதித்துப் போற்றினர். பெரிய நதிகள் வியவசா யத்திற்கு வேண்டிய நீரைக் குறைவில்லாமற்

கொடுத்து வந்தமையால் நதிகளிடத்து அவர்களுக்கு அன்பும் அபிமானமும் பெருகின. அவர்களது தினசரி வாழ்க்கையிலும் வியவசாயத்திலும் எருதுகளும், பசுக்களும் மிகுதியாக உபயோகமாயிருந்தன. பசு அவர்களுக்குக் குடிக்கப் பால் கொடுத்தமையால் அதை அவர்கள் விசேஷமாக மதித்தார்கள். அந்தப் பிராணிகளை மிக்க அன்புடன் போஷித்து வளர்த்து அவற்றின் மஹிமைகளைப் பற்றிப் பாட்டுப் பாடினார்கள். எக்காரணத்திற்காகப் பசுவை ஜனங்கள் ஆதியில் போஷித்தார்கள் என்பதை மறந்து, இக்காலத்தவர்கள் குருட்டுத் தனமாக அதனை வணங்கிவருகின்றனர்.

தாங்கள் மேலானவர்கள் என்ற கர்வத்தால் ஆரியர்கள், இந்தியாவில் வசித்த மற்ற ஜாதியாருடன் கலந்துகொள்ளவில்லை. ஆரியர்கள் மற்ற ஜாதியாரோடு கலக்காமல் இருப்பதற்காகப் பல சட்டங்களையும் விதி விலக்குகளையும் ஏற்படுத்தினார்கள். வெகுகாலத்திற்குப் பின்பு இதன் காரணமாக வர்ணபேதங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் உள்ள ஜாதி, வகுப்புகள் இதனால் உண்டானவைகளே. இவ்வித்தியாசங்களெல்லாம் இக்காலத்தில் விபரீதமாக மாறிவிட்டன. பிறரைத் தீண்டுவதும் மற்றவர்களோடு சாப்பிடுவதும் சிலருக்குப் பயமாயிருக்கிறது. நல்ல காலமாக இவ்வித்தியாசங்களெல்லாம் குறைந்துகொண்டே வருகின்றன.

## 31

### ராமாயணமும் மஹாபாரதமும்

வேதங்கள் எழுதப்பட்ட வேதகாலங்களுக்குப் பின்பு இதிஹாஸகாலம் வந்தது. மிகப் பெரிய வீரர்களின் கதைகளைப் பற்றிப் பெருங் காவியங்கள் இரண்டு அக்காலத்தில் எழுதப் பட்டமையால் அதற்கு இதிஹாஸகாலம் என்ற பெயர்வந்தது. இவை இரண்டுமே உனக்குத் தெரிந்த ராமாயணமும் மஹாபாரதமும் ஆகும்.

இதிஹாஸ காலத்தில் ஆரியர்கள் விந்திய மலைக்கு வடக்கே, வட இந்தியா முழுதும் பரவியிருந்தனர். இந்தப் பிராந்தியத்தை 'ஆரியாவர்த்தம்' என்று வழங்கினர்களென்று முன்னரே சொன்னேன். அக்காலத்தில் ஐக்கிய மாகாணத்தை மத்திய தேசமென்றும் வங்காளத்தை வங்கதேசமென்றும் வழங்கினர்கள்.

நீ தெரிந்துகொள்ள ஆசைப்படும்படியான வேறோர் அதிசயமான விஷயம் இருக்கிறது. ஆரியாவர்த்தம் என்று ஆரியர்கள் கூறிய நிலப் பகுதியானது இமயமலைக்கும் விந்தியமலைக்கும் நடுவே ஒரு பிறைச் சந்திரனைப்போன்ற வடிவ

மாயிருப்பதை நீ பார்க்கலாம். ஆகவே, ஆரியா வர்த்தத்திற்குச் 'சந்திரபூமி' என்று பெயர் வைத்து வழங்கினர். ஸம்ஸ்கிருதத்தில் சந்திரனுக்கு 'இந்து' என்று சொல்வார்கள். அதனால் தான் ஆரியாவர்த்தத்தை இந்துபூமி அல்லது இந்தியாவென்று கூறுகின்றனர்.[1]

ஆரியர்கள் பிறைத்திங்களைப் பெரிதும் கொண்டாடினர்கள். பிறைத் திங்கள் வடிவமான எல்லாப் பொருள்களையும் புனிதமாகக் கருதினர். காசியைப் போலவே, அவர்கள் வசித்த நகரங்களையெல்லாம் பிறைச் சந்திர வடிவமாகவே கட்டினர்கள். பிரயாகையிலுங்கூட, கங்கை பிறைச் சந்திர வடிவமாயிருக்கிறது. இது உனக்குத் தெரியுமோ?

ராமாயணமென்பது, ஸ்ரீ ராமசந்திரன், ஸீதை இவர்களுடைய கதையையும், இவ்விருவர்களும் இலங்கை அரசனை ராவணனோடு சண்டையிட்ட வரலாற்றையும் கூறுகிறது.

---

1. இந்திராவுக்குச் செல்லப் பெயர் இந்து என்பது. அப்பெயரால்தான் அவளைக் கூப்பிடுவது வழக்கம். (ஜ. நே.)

சிந்துநதிக்குக் கிழக்கேயுள்ளவர்களைப் பாரசீகர் 'சிந்தூஸ்' என்று அழைத்ததாகவும் அது மருவி "ஹிந்தூஸ்" என்று வந்ததாகவும் அதனல் நமது நாட்டுக்கு இந்தியா, ஹிந்துஸ்தானம் என்று பெயர் வந்ததாகவும் சில அறிஞர் சொல்கின்றனர்,

(சி. ரா. வே.)

ஸம்ஸ்கிருதத்தில் இந்நூலை முதல் முதலில் வால்மீகி மஹரிஷி எழுதினார். இதைத் தழுவிப் பல மொழிகளில் பலர் ராமாயணத்தை எழுதியிருக்கிறார்கள். இவற்றில், ஹிந்தியில் ஸ்வாமி துளஸீ தாஸ் எழுதிய 'ராம சரித மானஸ்' என்ற நூல் பிரஸித்திபெற்றது.[1]

தென்னிந்தியாவில், வானரங்களின் தலைவரான ஹனுமான் ஸ்ரீராமனுக்கு உதவி செய்ததாக ராமாயணம் கூறுகிறது. உண்மையை உரைக்குமிடத்து ராமாயணக் கதையானது ஆரியர்கள் தென்னாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது அவர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப்பற்றிக் கூறுகிறதென்று சொல்லலாம். திராவிடர்களில் ஒரு வகுப்பாரையே 'வானரர்கள்' என்று அழைத்தார்கள் போலும்.

ராமாயணத்தில் அழகான கதைகள் பல உண்டு. அவற்றை நீ படித்துத் தெரிந்து கொள்ளவேண்டும்.

ராமாயணத்திற்குப் பிறகு, வெகு காலம் கழிந்தபின் மஹாபாரதம் எழுதப்பட்டது. அது ராமாயணத்தைவிடப் பெரிது. அதில் ஆரியர்களுக்கும் திராவிடர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றிச் சொல்லவில்லை. ஆரியர்களுக்கும்

---

1. தமிழிலுள்ள கம்பராமாயணம் மிகப் புகழ் பெற்றது.

ஆரியர்களுக்கும் நடந்த சண்டையைப் பற்றியேதான் மஹாபாரதம் கூறுகிறது. சண்டையைப் பற்றிய விஷயங்களை விட்டு விட்டாலும் மஹாபாரதத்திலிருந்து உன்னத மான நோக்கங்களையும் நல்ல நீதிகளையும் கொண்ட பல கதைகளை நாம் படிக்கலாம். அன்றியும் இப்புஸ்தகம் நாம் யாவரும் புனித மாக மதிக்கத்தக்கது. ஏனென்ருல் இதில் நடு நாயகமாக விளங்கும் பகவத்கீதை எல்லா ஹிந் துக்களுக்கும் புனிதமான ஒரு நூல். அதில் உயர்ந்த மத உண்மைகள் அடங்கியிருக்கின்றன.

இந்தப் புஸ்தகங்களை நம் முன்னேர்கள் ஆயிர வருஷங்களுக்கு முன்பாக எழுதினர். இந்தப் புஸ்தகங்களையெல்லாம் அறிவில் மிக்க பெரியோர்களைத் தவிர வேறு யார் எழுதியிருக்க முடியும்? வெகுகாலத்திற்கு முன்பு அவற்றை எழுதியிருந்தபோதிலும் அவை இந்தியாவில் இன்னும் அழியாமல் இருக்கின்றன. இந்தி யாவில் ஒவ்வொரு குழந்தைக்கும் இந்த இரண்டு புஸ்தகங்களைப் பற்றியும் தெரியும். பெரியவர் களும் இப்புஸ்தகங்களைப் படித்து நன்மை அடைந்திருக்கின்றனர்.

# பைரவி

பிரபல வங்க நாவலாசிரியர்

**ஸ்ரீ சரத்சந்த்ர சட்டர்ஜி**

*எழுதிய இனிய நவீனம்*

(த. நா. குமாரஸ்வாமி மொழிபெயர்ப்பு)

*வங்கதேசத்துச் சாக்தர்கள், ஒரு பெண்ணைச் சிறு வயதில் எவனாவது தெருவில் போகிறவனுக்கு மணம் செய்துகொடுத்து உடனே அவளைக் காளி கோயில் அதிகாரிணி அல்லது பைரவியாக்கி விடுவார்கள். அப்படிப்பட்ட ஒரு பெண் பெரியவளானபின் தன் கணவனை எதிர்பாராத விதமாகக் காண நேருகிறது. அவன் அவள் இருந்த ஊருக்கு ஜமீன்தார் ஆகிறான். தீய பழக்கமுடைய அவனைத் திருத்த முயலுகையில் அவர்கள் உறவுமுறையை அறியாத ஊரார் அவனை நிந்திப்பதும், பிறகு அவர்கள் இருவரும் பொது ஜனங்களின் பிரியத்திற்குப் பாத்திரராவதும் இந்நவீனத்தின் சாராம்சமாகும்.*

விலை ரூ. 1—8—0

(தபால் செலவு தனி)

---

*மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்*

# மண்ணாசை

**ஸ்ரீ 'சங்கரராம்'**

எழுதிய சுவையுள்ள நவீனம்

"நம் பெரியோர்கள் 'மண்ணாசை பொல்லாதது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் இந்தப் புத்தகத்தைப் படித்தபின் 'மண்ணாசை ரொம்ப நல்லது' என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டியிருக்கிறது. புத்தகத்தைப் படிக்கும் போதே நமக்கு மண்ணாசை அளவில்லாமல் பெருகுகிறது; மண்ணிலே கிடந்து புரளவேண்டுமென்று தோன்றுகிறது; மண்ணின் மணம் மூக்கிலே வந்து ஏறுகிறது.........முழுக்க முழுக்க அசல் கிராம வாழ்க்கையை ஆதாரமாகக் கொண்ட நாவல் இது. கிராமவாசிகளின் சுக துக்கங்கள், இன்பதுன்பங்கள், சண்டை சச்சரவுகள், காதல், கொலை முதலிய எல்லாம் மிக ரஸமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றன...276 பக்கம் வாசித்தும் படிப்பதில் அலுப்பு ஏற்படவில்லையென்றால் ஆசிரியரின் கதை சொல்லும் திறமை எவ்வளவு என்று சொல்லவேண்டுமா?"—**'கல்கி'**.

விலை ரூ. 1—8—0

(தபால் செலவு தனி)

---

**மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்**

# முருகன்

# ஓர் உழவன்

**ஸ்ரீ கே. எஸ். வேங்கடரமணி**

எழுதிய அருமையான நவீனம்

(கிருஷ்ணகுமாரி மொழிபெயர்ப்பு)

தமிழ்நாட்டு வாழ்க்கையைத் தமிழ்க் கண்களால் அளந்தறிந்த ஆசிரியர்,

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்—மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.'

என்ற குறளடிகளுக்கு இலக்கியமாக விளங்கிய தமிழ்நாட்டு உழவன் ஒருவனது வாழ்க்கையை இதில் மிக அழகாகப் படம் பிடித்து அமைத்திருக்கிறார். பயிரிடுவோருக்குக் குடியினாலும் கெட்ட சேர்க்கையினாலும் வரும் கேடுகளையும், மிராசுதாரர்கள் சொந்த நிலத்தில் பாடுபட்டுப் பயனடைந்து சுகத்தில் இராமல், பட்டண மோகம் பிடித்து நிலத்தை விற்றுப் படித்து அற்ப சம்பளத்திற்கு வேலை செய்து பிழைப்பதனால் அடையும் துன்பங்களையும் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

விலை ரூ. 1—8—0

(தபாற் செலவு தனி)

---

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

# குமுதினி

உலக மகாகவி

**ஸ்ரீ ரவீந்திரநாத் டாகுர்**

எழுதிய அரிய நவீனம்

(ஸ்ரீமதி ரங்கநாயகி மொழிபெயர்ப்பு)

கோஷால் குடும்பத்தாருக்கும் சட்டர்ஜி குடும்பத்தாருக்கும் இடையே சில தலை முறையாக விரோதபாவம் உண்டு. பின்னர், கோஷால் குடும்பம் சீர்குலைந்து விடுகிறது. நாளடைவில் அக்குடும்பத்தைச் சேர்ந்தவனுகிய மதுசூதனன் தன் சொந்த முயற்சியால் பணக்காரனுகிறுன். அப்போது சட்டர்ஜி குடும்பம் கடன் பளுவினுல் திண்டாடிக்கொண்டிருக்கிறது. அந்தக் குடும்பத்துப் பெண் குமுதினியைத் தான் முன் தீர்மானித்தபடி மதுசூதனன் மணக்கிறுன். குல கௌரவத்தையே இருவரும் பெரிதாக மதித்ததால் தம்பதியிடையே மனஸ்தாபம் ஏற்படுகிறது. குமுதினி ஓர் ஆண் மகவைப் பெற்ற பின்னரேனும் இப்பிணக்குத் தீருகிறதா? இதைத்தான் ஆசிரியர் வாசகர்களின் மனேபாவத்துக்கு விட்டிருக்கிறுர்.

**விலை ரு. 1—8—0**

(தபால் செலவு தனி)

---

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

# நிர்மலா

ஹிந்தி நாவல் சக்கரவர்த்தி

**ஸ்ரீ பிரேம்சந்த்**

எழுதிய அபூர்வ நவீனம்

(கா. ஸ்ரீ. ஸ்ரீநிவாஸாசாரியார் மொழிபெயர்ப்பு)

ஏழைப்பெண்ணான நிர்மலா ஒரு கிழ வக்கீலுக்கு இரண்டாந்தாரமாக வாழ்க்கைப்படுகிறாள். அதுமுதல் துயரம் நிரம்பிய வாழ்வுதான். கிழக்கணவர் தம் மூத்த மகன் இளையாளுடன் சகஜமாகப் பழகுவதைக் கண்டு வீண் சந்தேகமுற்று அவனுடைய மரணத்திற்குக் காரணமாவதை ஆசிரியர் வர்ணிக்கும்போது கல் மனமும் கரையும். பின்னராவது நிர்மலாவுக்குச் சாந்தி உண்டா? முடிவுவரை நீடித்த நரக வாழ்வுதான்.

**விலை ரு. 1—8—0**

(தபாற்செலவு தனி)

---

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்

# மாயா விநோதினி

உலக மகாகவி

**ஸ்ரீ ரவீந்திரநாத் டாகுர்**

எழுதிய உயர்தர நவீனம்

மஹேந்திரன் என்ற இளைஞன் விநோதினி என்ற பெண்ணை மணக்க மறுத்ததால் அவளை வேறு இடத்தில் விவாகம் செய்து கொடுக்கிறார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசத்தால் அவள் விதவையாகி விடுகிறாள். பின்னர் மஹேந்திரன் ஆசா என்ற பெண்ணை மணக்கிறான். அவன் வரவரப் பெண்டாட்டிப் பித்துப் பிடித்து அலைவதையும், நாட்டுப்பெண் காரியம் செய்யத் திறமையற்று இருப்பதையும் கண்டு அவன் தாய் தன் ஊருக்குச் சென்று விதவையாகிய விநோதினியைத் தனக்கு உதவியாக இருக்கும்படி அழைத்து வருகிறாள். சஞ்சல ஸ்வபாவமுடைய அப்பெண்ணை கண்டதும் மஹேந்திரன் ஆசாமீது வெறுப்புற்று விநோதினியிடம் விருப்பம் கொள்கிறான். குடும்ப கௌரவமே குலைந்துவிடும் நிலைக்கு வந்துவிடுகிறது. அப்போது விநோதினி தன் மன உறுதியால் எல்லாவற்றையும் சமாளித்துப் பின் காசிக்குச் செல்கிறாள். இதில் இவ்விருவரின் அமைதியற்ற தன்மைக்கு எதிராக மஹேந்திரன் மனைவி, அவன் நண்பன் விஹாரி ஆகியவர்களுடைய சாந்த ஸ்வபாவத்தை வர்ணிக்கும் ஆசிரியரின் கற்பனைத்திறமை மிக உயர்ந்ததாகும்.

**விலை ரூ. 1—8—0**

(தபாற் செலவு தனி)

---

மானேஜர்—கலைமகள்—மயிலாப்பூர்